REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 ஒகஸ்ட் 2 செவ்வாய்க்கிழமை

# தினகரன் THINAKARAN

1932 - 2022

வரு. 90 இல. 180 | Tuesday 02, August, 2022 | 12பக்கங்கள் | 40/-




நாட்டில் போராட்டம் என்ற போர்வையில்

## சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்டால் கடும் நடவடிக்கை

அதிகபட்ச அதிகாரம் பயன்படுத்தப்படும் - கமல் குணரட்ண



நாட்டின் அடிப்படைச் சட்டத்தின் கீழ் போராட்டங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. போராட்டங்கள் என்ற போர்வையில் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கு எதிராக அதிகபட்ச அதிகாரம் பயன்படுத்தப்படுமென பாதுகாப்புச் செயலாளர் கமல் குணரட்ண தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். 04

பொருளாதார நெருக்கடிக்கு சர்வகட்சி அரசே தீர்வு;

## அரசியல் காழ்ப்புணர்வை மறந்து ஒன்றுபட்டு செயற்பட முன்வரவும்



தமிழ்க் கட்சிகளுக்கு அமைச்சர் டக்ளஸ் அழைப்பு

மன்னார் தினகரன் நிருபர்

இலங்கை மக்கள் அனைவரும் பெரும் பொருளாதார நெருக்கடிகளைச் சந்தித்துள்ள சவாலான சூழலிலிருந்து மீள்வதற்கு கட்சிகள் அனைத்தும் தமக்கிடையேயான அரசியல் காழ்ப்புணர்ச்சிகளை கடந்து 04

## 09 ஆவது பாராளுமன்றத்தின் 03 ஆவது கூட்டத் தொடரை

ஜனாதிபதி நாளை ஆரம்பிக்கிறார்



ஷம்ஸ் பாஹிம்

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத் தொடர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நாளை (03 ) காலை10.30 மணிக்கு வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

நிகழ்வில் அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களையும் கலந்துகொள்ளுமாறு பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க கடிதம் மூலம் கடந்த வாரம் அழைப்பு விடுத்திருந்தார். 04

# இம்மாத இறுதிக்குள் IMF உடன் கைச்சாத்து

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கை தெரிவிப்பு

ஸ்திரமற்ற அரசியல் சூழ்நிலை இல்லாதிருந்தால் ஜூலை மாதமே இந்தப் பணி நிறைவு பெற்றிருக்கும் எனவும் ஜனாதிபதி தெரிவிப்பு

அமெரிக்காவின் Wall street journal க்கு ஜனாதிபதி விசேட செவ்வி

சர்வதேச நாணய நிதியத்தின் உயர்மட்ட குழுநிலை உடன்படிக்கை இம் மாத இறுதிக்குள் கைச்சாத்தாகுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இறையாண்மை முறிகள் மற்றும் இருதரப்பு கடன் வசதி அளிப்போருடன் தொடர்ந்து கலந்துரையாடல்களை மேற்கொள்ள முடியுமென்றும் அவர் கூறினார்.

அமெரிக்காவின் வோல் ஸ்ட்ரீட் ஜேர்னலுக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை (31) வழங்கிய நேர்காணலிலேயே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நிதியை வழங்குவதற்கு தேவையான எந்த ஒரு ஆரம்ப ஒப்பந்தத்துக்கும் IMF இன் அனுமதி தேவைப்படுகிறதென்றும், இந்த நடவடிக்கைக்கு பல மாதங்களாகும் என்றும் அவர் குறிப்பிட்டார். ஸ்திரமற்ற அரசியல் சூழ்நிலை இல்லாவிட்டால், ஜூலை மாதமே இந்தப் பணிகள் நடந்திருக்கமென்றும் ஜனாதிபதி 04



## மலையகத்தில் வெள்ளம், மண்சரிவு இயல்பு வாழ்க்கை பாதிப்பு; 03 பேர் பலி



ஹற்றன் விசேட, மஸ்கெலியா தினகரன் விசேட, கினிகத்தேனை தினகரன், தலவாக்கலை குறூப் நிருபர்கள்

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக மலையகத்தில் பல பகுதிகளில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதோடு வெள்ளம் மற்றும் மண்சரிவினால் பல இடங்களில் போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளது. அத்துடன் வெள்ளத்தினால் மூவர் உயிரிழந்துள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

விரிவான செய்தி 08ஆம் பக்கத்தில்

முன்னாள் பிரதமர் மஹிந்த, பெசில்

## வெளிநாட்டு பயணத் தடை 04 ஆம் திகதி வரை நீடிப்பு



லோரன்ஸ் செல்வநாயகம்

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோருக்கு விதிக்கப்பட்ட வெளிநாட்டு பயணத்தடையை எதிர்வரும் 04 ஆம் திகதி வரை நீடித்து 04

விசைப்படகு பழுதானதால் தவித்த 06 பேர்;

## தமிழக மீனவர்களுக்கு நடுக்கடலில் உதவிக் கரம் நீட்டிய கடற்படையினர்



படகை திருத்தி இராமேஸ்வரம் அனுப்பிவைத்தனர்

திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது

நடுக்கடலில் பழுதாகிக் கிடந்த இராமேஸ்வரம் மீன்பிடி இயந்திரப் படகை மீனவர்களுடன் மீட்ட இலங்கை கடற்படையினர் 04

ஜனாதிபதி மாளிகையின் WiFi ஐ பயன்படுத்தி

## தொலைபேசி தொடர்புகளை ஏற்படுத்தியோருக்கு வலை வீச்சு

தரவுப் பதிவுகளை ஆராயும் பணியில் பொலிஸார்

ஜனாதிபதி மாளிகையிலுள்ள WiFi வசதியை பயன்படுத்தி சந்தேகத்துக்கிடமான முறையில் இணைய வழியில் தொலைபேசி அழைப்புகளை மேற்கொண்ட பலர் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதி மாளிகையை கைப்பற்றிய பின்னர் 04



## சட்டவிரோதமாக பிரான்ஸ் செல்ல முயன்ற 50 பேர் கைது

வென்னப்புவ பகுதியில் கடற்படை அதிரடி 03

வவுனியா – ஆச்சிபுரம் பகுதியில் திகில் சம்பவம்;

## 'ரஞ்சா' என்றழைக்கப்படும் இளைஞன் கொடூரக் கொலை

சூடு நடத்தி கையை வெட்டி எடுத்துச் சென்றனர் 03



## தானிஸின் விளக்கமறியல் 15 ஆம் திகதி வரை நீடிப்பு

கொழும்பு பிரதான நீதவான் நேற்று உத்தரவு



ரூபவாஹினி கலையகத்துக்குள் பிரவேசித்து, ஒளிபரப்பு நடவடிக்கைக்கு இடையூறு ஏற்படுத்தியதாக, குற்றச்சாட்டுக்குள்ளாகியுள்ள தானிஷ் அலி எதிர்வரும் 15 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நேற்று (01) காலை கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டபோதே, இந்த உத்தரவு 04

## ஜனாதிபதியின் அழைப்புக்கு திகாம்பரம் பச்சைக் கொடி



சர்வகட்சி கூட்டத்திலும் கலந்து கொள்ள முடிவு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பையேற்று சர்வகட்சி கூட்டத்தில் கலந்து கொள்ளப் போவதாக தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவர் பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

எந்த முடிவை எடுத்தாலும், அதனைக் கூட்டணியாகவே எடுக்கப் போவதாகவும் திகாம்பரம் தெரிவித்துள்ளார். நாட்டில் சமூக பொருளாதார ஸ்திரத்தன்மையை 04

## லிட்ரோ Gas சிலிண்டர் விலை குறைவடைகிறது

05ஆம் திகதி முதல் ரூ. 4910 மட்டுமே



லிட்ரோ சமையல் எரிவாயு சிலிண்டர்களின் விற்பனை விலை குறைக்கப்படவுள்ளதாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன்படி எதிர்வரும் 05ஆம் திகதி முதல் விலை குறைக்கப்படுமென அந்நிறுவனத்தின் 04


## தடுப்பூசியை தாமதிக்காது பெற்றுக்கொள்ளுங்கள்

அரச மருத்துவ அதிகாரிகள் வலியுறுத்து

நாட்டில் வேகமாக பரவி வரும் ஒமிக்ரோன் புதிய வகை பிறழ்வு ஒருவரிடமிருந்து 12 பேருக்கு பரவும் திறனைக் கொண்டுள்ளது. அது முன்னைய உப பிறழ்வுகளை விட வீரியம் கொண்டது. இதனை எதிர்கொள்ள 04

குரங்கம்மை நோய் தொற்று;

## இந்தியாவில் முதலாவது உயிரிழப்பு பதிவு



குரங்கம்மையால் பாதிக்கப்பட்டு தனியார் மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்றுவந்த கேரள மாநில இளைஞர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தி வெளியிட்டுள்ளது. கேரள மாநிலம் திரிச்சூர் 04





# பொது மக்களை டிஜிட்டல் முறையில் வலுவூட்டத் தயார்

## SLT MOBITEL அறிவிப்பு

SLT MOBITEL, அத்தியாவசிய சேவைகள் மற்றும் துறைகளை மேம்படுத்துவது மற்றும் குடிமக்களை டிஜிட்டல் முறையில் வலுவூட்டுவது தொடர்பான தேசிய திட்டத்தை முன்மொழிவது பற்றி அறிவித்துள்ளது.

நாட்டில் செயற்கட்டமைப்பு மாற்றத்தை துரிதமாக மேற்கொள்ள வேண்டியதன் தேவைக்கான காரணங்களாக தொன்மை வாய்ந்த சட்டகட்டமைப்புகள், வினைத்திறன் இன்மை, மோசடி, பெருமளவு செயற்பாட்டு செலவுகள் மற்றும் பிரதானதுறைகள் மற்றும் சேவைகளில் நிலவும் விரயம் போன்றன காரணங்களாக அமைந்துள்ளதாக SLT MOBITEL தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா ரெலிகொம் குழும தவிசாளர் ரொஹான்பெர்னான்டோ கருத்துத் தெரிவிக்கையில், "சிங்கப்பூரில் முன்னெடுக்கப்பட்டதைப் போல, மதிநுட்பமான தேசம்(Smart Nation) ஆக மாற்றம்பெறக் கூடியவாய்ப்புகள் இலங்கையில் காணப்படுகின்றது. அதனூடாக புத்தாக்கமான தொழில்நுட்பத்தை ஒவ்வொரு செயற்பாட்டின் முதுகெலும்பாக திகழச் செய்யக் கூடியதாக இருக்கும். இதை முன்னெடுப்பதனூடாக நாடு எதிர்நோக்கியுள்ள பிரதான பிரச்சினைகளுக்கு தீர்வுகாணக் கூடியதாக இருக்கும் என்பதுடன், முக்கியமானதுறைகள் மற்றும் சேவைகள் அதிகளவு வினைத்திறன் வாய்ந்த, வெளிப்படையான, இலாபமீட்டக்கூடிய கட்டமைப்புகளாக மாற்றமடைந்து, மக்களின் வாழ்க்கைக்கு பெரிதும் பயனளிப்பதாக அமைந்திருக்கும். நாட்டைE ஆளுகையை(e governance) நோக்கி நகர்த்துவது எமதுநோக்காக அமைந்துள்ளது. பெறுமதி சங்கிலியில் நாம்பரந்தளவு பிரசன்னத்தைக் கொண்டுள்ளதுடன், தொழில்நுட்ப நிறுவனங்கள், பாரிய கூட்டாண்மை நிறுவனங்கள், பொது மற்றும் அரசநிறுவனங்கள் ஆகியவற்றின் தேவைகளை நிவர்த்தி செய்யக்கூடிய ஒப்பற்றதிறனையும் கொண்டுள்ளோம். " என்றார்.

## தினகரன் வர்த்தக உலா

எம்.எஸ். பாஹிம் E-mail: businesstkn@gmail.com

# CCBSL இன் நிர்வாக பணிப்பாளரான தீபக் செந்தில்



CocaCola Beverages Sri Lanka (CCCBSL) நிறுவனம் அண்மையில் அதன் முகாமைத்துவப் பணிப்பாளர் மயங்க் அரோராவிற்கு சேவை பிரியாவிடை வழங்கியிருந்தது. அவர் CocaCola வின் பங்களாதேஷ் அலுவலகத்தின் பொது முகாமையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஐந்து வருடங்களாக அவரது தலைமையின் கீழ், CocaCola வினது இலங்கை செயற்பாடு ஒவ்வொரு வருடமும் அதிகரித்த சந்தைப் பங்கினை தொடர்ச்சியாகப் பெற்று வந்துள்ளது. 20 வருட அனுபவத்தை கொண்டுள்ள தீபக் செந்தில் அவரின் இடத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார். தீபக்கின் தலைமையின் கீழ் ஒரு புதிய மற்றும் அற்புதமான அத்தியாயத்தை CCBSL நிறுவனம் எதிர்பார்க்கும் அதே வேளையில், மயங்கின் எதிர்கால முயற்சிகள் சிறப்பாக அமையவும் வாழ்த்துகிறது.

விடைபெறும் முகாமைத்துவ பணிப்பாளர் மயங்க் அரோரா மற்றும் CocaCola Beverages Sri Lanka வின் புதிய முகாமைத்துவ பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள தீபக் செந்தில் ஆகியோரை படத்தில் காணலாம்.

## Ceylinco Life ஓவிய,கட்டுரைப் போட்டி

# 70,000 ஆக்கங்களில் இருந்து வெற்றியாளர் தெரிவு ஆரம்பம்



செலிங்கோ லைஃப் நிறுவனம் நாடு முழுவதும் சிறுவர்கள் மத்தியில் நடத்திய 'சிஹின சித்துவம்' ஓவிய மற்றும் கட்டுரைப் போட்டிக்காக சுமார் 70000 ஆக்கபூர்வமான சித்திரங்களும் கட்டுரை ஆக்கங்களும் கிடைத்துள்ளன. உத்வேகம் தரும், தூரிகைகள் மூலம் தீட்டப்பட்ட சித்திரங்களாகவும், பென்சில்கள் மூலம் எடுத்தப்பட்ட வார்த்தைகளாவும் நாட்டின் இன்றைய இக்கட்டான நிலையிலும் கூட எதிர்கால நம்பிக்கையை பிரதிபலிப்பதாக அவை அமைந்துள்ளன.

ஒவ்வொரு உன்னதமான ஓவியங்களும் கட்டுரைகளும் 'நான் வரையும் என் கனா' எனும் தொனிப் பெரருளின் கீழ் அமைந்துள்ளன.

போட்டிக்கான தமது படைப்புக்களை சமர்ப்பித்துள்ள எல்லா சிறுவர்களுக்கும் போட்டியில் பங்கேற்றமைக்கான சான்றிதழை செலிங்கோ நிறுவனம் வழங்கி உள்ளது. தற்போது இவற்றில் இருந்து 362 வெற்றிப் படைப்பக்களைத் தெரிவு செய்யும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. மூன்று வயதுப் பிரிவுகளின் கீழ் இவை இடம்பெறும். விரைவில் அவர்களுக்கான பரிசளிப்பு விழா ஒன்றும் இடம்பெறவுள்ளது. அத்தோடு வெற்றியீட்டிய படைப்புக்களைக் கொண்ட ஒரு கண்காட்சியும் பொது மக்களுக்காக ஏற்பாடு செய்யப்படவுள்ளதாக கம்பனி அறிவித்துள்ளது.

# 2024 ஒலிம்பிக்கிற்கான இலங்கை தடகள அணியின் உத்தியோகபூர்வ ஆடை அனுசரணையாளர்களாக MAS

2024 ஒலிம்பிக்கிற்கான இலங்கை தடகள அணியின் பயணத்திற்கான உத்தியோகபூர்வ ஆடை அனுசரணையாளர்களாக MAS நியமிக்கப்பட்டுள்ளது



MAS ஹோல்டிங்ஸின் துணைநிறுவனமான Bodyline (Pvt) Ltd, 2022ஆம் ஆண்டுமுதல் 2024ஆம் ஆண்டு பாரிஸ் ஒலிம்பிக்ஸ் போட்டிகள் வரை இலங்கை தடகள சங்கத்தின் SLAAஇன் உத்தியோகபூர்வ ஆடைஅனுசரணையாளராக செயற்படவுள்ளது. அண்மையில் நடைபெற்ற நிகழ்வில், Bodyline இன்பிரதம நிறைவேற்று அதிகாரி தினேஷ் டி சில்வா, SLAA இன் தலைவர் மேஜர் ஜெனரல் பாலித்த பெர்னாண்டோவிடம் MASஆல் வடிவமைக்கப்பட்ட தடகள ஆடைப்பொதிகளை உத்தியோகபூர்வமாக கையளித்தார்.

"MASஇல் உள்ளநாங்கள் மாற்றங்களை உருவாக்குபவர்கள்" என தெரிவித்திருந்த Bodyline நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் மற்றும் வணிக மேம்பாட்டு பணிப்பாளர் டில்ஷான் மொஹமட் கூறுகையில், "இம்முறை இலங்கைதடகளப் போட்டிகளில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த நாங்கள் விரும்பினோம், இதுமிகவும் இலகுவான சுவாசிக்கக் கூடியது ணிவகையைப் பயன்படுத்துகிறது, மேலும் ஈரப்பதத்தை உறிஞ்சும் திறன் மற்றும் மேம்பட்ட வசதிக்கான மென்மையான உணர்வையும் தரக்கூடிய விதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது." என தெரிவித்தார்.

# மஹானாமவுக்கு உதவிக்கரம் நீட்டும் Nippon நன்கொடை அறக்கட்டளை



Nippon நன்கொடை அறக்கட்டளை உலகளாவிய ரீதியில் 30 இற்கும் மேற்பட்ட நாடுகளில் செயற்பட்டு வரும் ஒரு அமைப்பாகும். அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் சுகாதாரம், கல்வி, சுயதொழில் உள்ளிட்ட பல்வேறு துறைகளை மேம்படுத்தும் நடவடிக்கைகளை தொடர்ச்சியாக அது முன்னெடுத்து வருகிறது. அதன் நிறுவுனர் மற்றும் தலைவர் யூமா முரனுஷி இனால் இது ஜப்பானில் கூட்டிணைக்கப்பட்ட முன்னணி நன்கொடை அமைப்புகளில் ஒன்றாக திகழ்கின்றது.

Nippon நன்கொடை அறக்கட்டளையின் தேசிய பணிப்பாளர் கலாநிதி ருவன் பெரேராவின் அழைப்பின் பேரில் யூமா முரனுஷி இலங்கை வந்துள்ளார். அவர் இலங்கையின் தேசிய வைத்தியசாலைக்கு ரூ. 10 மில்லியன் பெறுமதியான மருந்துகளை இதற்கு முன்னர் நன்கொடையாக வழங்கியிருந்தார்.

இலங்கையின் முன்னாள் கிரிக்கெட் வீரர் ரொஷான் மஹானாமவின் தொடர்ச்சியான சமூகப் பணிகளுக்காகவும், நாட்டின் இந்த சவாலான காலத்தில் நன்கொடைகளை வழங்குவதற்காகவும் அவர் உதவியளித்துள்ளார். நீண்ட கால அடிப்படையில் நன்கொடைகள் மற்றும் நேரடி வெளிநாட்டு முதலீடுகள் (FDI) மூலம் இலங்கையில் தனது வர்த்தக மற்றும் பெருநிறுவன சமூகப் பொறுப்பு (CSR) நடவடிக்கைகளை பரவலாக விரிவுபடுத்துவதற்கான வழிகளை மேற்கொள்வதற்காகவும் யூமா முரனுஷி இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

# இந்தியாவில் பயிற்சி பெற்ற ஆப்கான் வீரர்களுக்கு காபூலில் வரவேற்பு



இந்தியாவில் இராணுவ பயிற்சி பெற்று ஆப்கானிஸ்தானுக்கு திரும்பிய 25 ஆப்கானிய படை வீரர்களுக்கு தலைநகர் காபூலில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது. இந்தியா தொடர்பான தலிபான் அரசின் கொள்கையில் மாற்றம் ஏற்பட்டிருப்பதையே இது எடுத்துக் காட்டுவதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

ஆப்கானிஸ்தான் அமெரிக்க ஆதரவு அரசின் கீழ் இருந்தபோது சுமார் 80 ஆப்கானிய வீரர்கள் யுத்தப் பயிற்சிக்காக இந்தியாவின் இராணுவ பயிற்சி பாடசாலைக்கு அனுப்பப்பட்டனர். தலிபான்கள் கடந்த ஒகஸ்டில் நாட்டைக் கைப்பற்றியதும் ஆப்கான் தேசிய இராணுவம் கலைக்கப்பட்டது. இதனால் இந்தியாவில் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்த ஆப்கானிய வீரர்களுக்கு சொந்தநாடு திரும்பிச் செல்வதில் சிக்கல் ஏற்பட்டது.

இவர்கள் தொடர்பாக நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளை அடுத்தே வேலைவாய்ப்பு குறித்து உத்தரவாதமளித்தது. இதன் பின்னரேயே டேராடூன் இராணுவ பாடசாலையில் பயிற்சியை முடித்திருந்த 25 ஆப்கான் வீரர்கள் காபூல் திரும்பினர்.

# பாக். சீனி ஏற்றுமதியை தளர்த்துவதில் தயக்கம்




பாகிஸ்தானில் அதிகப்படியான சீனி கையிருப்பில் இருக்கும் நிலையில் அதன் ஏற்றுமதிக்கு தடை விதித்திருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

பாகிஸ்தானில் 1 பில்லியன் டொலர் மேல் பெறுமதியான மொத்தம் 1.2 மில்லியன் தொன் மேலதிக சீனி நாட்டில் இருப்பதாக உள்ளூர் ஊடகங்களை மேற்கோள் காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

எனினும் அதன் ஏற்றுமதி தடையை அகற்றுவதற்கு மத்திய அரசு தயக்கம் காட்டுவதாகக் கூறப்படுகிறது.

நாட்டில் டொலருக்கு தட்டுப்பாடு நிலவும் சூழலில் சீனி ஆலோசனை ஆணைக்குழு முடிவு ஒன்றை எடுப்பதில் தவறி இருப்பதாகக் கூறப்படுகிறது.

# காஷ்மீர் தொடர்பாக விஷமப் பிரசாரங்கள்



காஷ்மீர் தொடர்பான வரலாற்று ரீதியான உண்மைகளை மறைத்து உலகத்துக்கு வேறொரு காஷ்மீர் முகத்தைக் காட்டும் தீவிர முயற்சிகளில் பாகிஸ்தான் ஈடுபட்டிருப்பதாகவும் இப் பொய்யுரைகளின் முகத்திரையைக் கிழித்து காஷ்மீரின் உண்மை நிலையை வெளிக்கொண்டுவர லண்டனில் வசிக்கும் காஷ்மீர் டயஸ்போரா சமூகம் முன்வர வேண்டியது அவசியம் எனவும் காஷ்மீரிய ஊடகவியலாளர் ஒருவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். 'காஷ்மீர் புனைக்கதை யுத்தம்' என்ற பெயரில் பஷீர் அஸாத் எழுதியுள்ள ஆங்கில நூல் தொடர்பான கலந்துரையாடல் லண்டனில் நடைபெற்றபோது இவ் வேண்டுகோளை அவர் விடுத்தார்.

லண்டனைச் சேர்ந்த காஷ்மீர் கற்கை நிலையத்தின் ஆரம்பகால உறுப்பினரான வினோடிக்கு, பிஷ்மா மிர் ஆகியோரும் இங்கே கருத்துக்களைத் தெரிவித்தனர். காஷ்மீர் பள்ளத்தாக்கில் பெண்களையும் சிறுவர்களையும் பீதிக்குள்ளாக்கும் பொருட்டு பாக். இராணுவம் மோசமாக நடந்து கொள்வதாகவும், பாக். அரசு பயங்கரவாதத்தை காஷ்மீரில் ஊக்குவிப்பதாகவும் இதன் பொருட்டு காலாவதியான விஷயங்களைக் கிளறி விஷமப் பிரசாரங்களில் ஈடுபடுவதாகவும் இவர்கள் குறிப்பிட்டனர்.

## சர்வதேச செய்திகள்

# ஈராக் பாராளுமன்றத்தில் முகாமிட்டு ஆர்ப்பாட்டம்



ஈராக்கில் பல மாதங்கள் நீடிக்கும் அரசியல் இழுபறிக்கு மத்தியில், அந்நாட்டின் சக்திவாய்ந்த ஷியா தலைவர் முக்ததா அல் சத்ர் ஆதரவாளர்கள் கூடாரங்களை எழுப்பி பாராளுமன்றத்தில் நீண்ட காலம் நிலைத்து நிற்க தயாராகி வருகின்றனர்.

கடந்த ஒக்டோபரில் நடைபெற்ற தேர்தலில் அரசு ஒன்றை அமைப்பதற்கு தவறிய நிலையில் அல் சத்ர் ஆதரவாளர்கள் கடந்த சில நாட்களில் பாராளுமன்றத்திற்குள் இரண்டாவது முறையாக கடந்த சனிக்கிழமை ஊடுருவினர்.

"அடுத்த அறிவித்தல் வரை பாராளுமன்றத்தில் தொடர்ந்து நிலைத்திருப்பதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் அறிவித்துள்ளனர்" என்று அல் சத்ரின் அமைப்பு வெளியிட்ட சுருக்கமான அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

ஒக்டோபர் தேர்தல் இடம்பெற்று சுமார் 10 மாதங்கள் கடந்திருக்கும் நிலையிலும், இன்னும் புதிய அரசு ஒன்றை அமைப்பதில் தோல்வி கண்டுள்ளது.

2003 அமெரிக்கா தலைமையில் சதாம் ஹுஸைன் அரசு கவிழ்க்கப்பட்டது தொடக்கம் ஈராக்கில் ஆட்சி அமைப்பதில் சிக்கலான பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஈரானில் வெள்ள அனர்த்தம்: 80 பேர் பலி: பலர் மாயம்



ஈரானில் வெள்ளப் பேரிடரில் குறைந்தது 80 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 30 பேரைக் காணவில்லை.

பொதுவாக மழை குறைவாக இருக்கும் ஈரானின் தெற்குப் பகுதி உள்ளிட்ட பல வட்டாரங்கள் ஒரு வாரத்துக்கும் மேல் வெள்ளத்தில் சிக்கியிருப்பதாக தேசிய ஊடகம் தெரிவித்தது. 60 நகரங்களும் 500க்கும் அதிகமான கிராமங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

தலைநகர் டெஹ்ரான் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அங்கு மட்டும் முப்பத்தைந்து பேர் உயிரிழந்துள்ளனர். வீடுகளையும் வாகனங்களையும் மூடிய நிலச்சரிவே பெரும்பகுதி மரணங்களுக்குக் காரணம்.

ஈரானின் உயர்மட்டத் தலைவர் ஆயத்துல்லா அலி கமெய்னி உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு அனுதாபம் தெரிவத்தார். ஜனாதிபதி இப்ராஹிம் ரயிசி பாதிக்கப்பட்ட இடங்களைச் சென்று பார்வையிட்டார்.

# ஆப்கான்—ஈரான் எல்லை பகுதியில் கடும் மோதல்



ஆப்கானிஸ்தான் தலிபான் படையினர் மற்றும் ஈரான் எல்லை காவல் படையினருக்கு இடையே இரு நாடுகளுக்கு இடையிலான எல்லையில் மோதல் வெடித்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட இந்த மோதலில் தமது படை வீரர் ஒருவர் கொல்லப்பட்டதாக தலிபான்கள் குறிப்பிட்டுள்ளனர். ஆப்கானின் நிம்ரோஸ் மாகாணம் மற்றும் ஈரானின் ஹிர்மாண்ட் பிராந்தியத்துக்கு இடையே இந்த மோதல் ஏற்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் இரு நாடுகளும் பரஸ்பரம் குற்றம்சாட்டுகின்றன. ஓர் ஆண்டுக்கு முன் ஆப்கானில் தலிபான் ஆட்சியை கைப்பற்றியது தொடக்கம் எல்லைப் பகுதியில் இவ்வாறான பல மோதல்கள் இடம்பெற்றுள்ளன. இந்நிலையில் தற்போதைய மோதலுக்கான காரணம் உறுதி செய்யப்படவில்லை.

எனினும் ஆப்கானுக்கு சொந்தமில்லாத பகுதியில் தலிபான்கள் கொடியை ஏற்ற முயன்றதை அடுத்தே மோதல் ஏற்பட்டதாக ஈரானின் டஸ்னிம் செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. இதனை அடுத்து பல நிமிடங்கள் துப்பாக்கிச் சண்டை ஏற்பட்டதாகவும் அது குறிப்பிட்டது.

# இரண்டரை ஆண்டுகளின் பின் நியூசிலாந்து எல்லை திறப்பு



நியூசிலந்து, பயணிகளுக்கு அதன் எல்லைகளை முழுமையாகத் திறந்துவிட்டுள்ளது.

கொவிட்–19 வைரஸ் பரவல் ஆரம்பித்த வேளையில், 2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் அது தனது எல்லைகளை மூடியது.

அதன் பின்னர் வைரஸ் பரவல் குறைய ஆரம்பித்ததும் கடந்த பெப்ரவரி மாதம் முதல் படிப்படியாக அது எல்லையைத் திறந்துவிட்டது. இருப்பினும் விசா அனுமதி தேவைப்படுவோர், மாணவர் விசா அனுமதியில் இருப்போர் ஆகியோர் நாட்டுக்குள் நுழைய முடியாமல் இருந்தது.

கடந்த ஞாயிறு இரவு முதல் அவர்களுக்கான கட்டுப்பாடுகளும் நீக்கப்பட்டன.

மேலும் சொகுசுக் கப்பல்கள், உல்லாசப் பாய்மரப் படகுகள் ஆகியவை நியூசிலாந்துக் கரைகளை அடையவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நியூசிலாந்துப் பொருளாதாரத்தின் வளத்துக்கு முக்கிய பங்களிப்பவர்கள் வெளிநாட்டு மாணவர்கள்.

எல்லைகள் திறந்துவிட்டதால் இனி பல்கலைக்கழகங்களிலும் பாடசாலைகளிலும் சேருவோர் எண்ணிக்கை அதிகரிக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

உலக நாடுகளில் பல எல்லைகளை முழுமையாகத் திறந்த பின்னரும் நியூசிலாந்து பொறுமையாக, படிப்படியாகவே அதைச் செய்தது.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 ஓகஸ்ட் 2 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN


தொழுகை நேரம்
01 முதல் 04 வரை
சுபஹ் - 04.44
லுஹர் - 12.18
அஸர் - 03.39
மஃரிப் - 06.31
இஷா - 07.44

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் ஆடி 17
ராகுகாலம் : பகல் : 3.00 - 4.30வரை
சுபநேரம் : காலை : 7.30 - 9.00வரை
யோகம்: அமிர்தசித்த யோகம்
திதி: பஞ்சமி



## 07 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாயம்

கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் அறிவிப்பு

மழையுடன் கூடிய சீர்ற்ற காலநிலை

லோரன்ஸ் செல்வநாயகம்



மழையுடன் கூடிய சீரற்ற காலநிலையையடுத்து நாட்டின் ஏழு மாவட்டங்களுக்கு மண் சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

04

## படையினரின் கடமைக்கு இடையூறு விளைவித்தால் உடனடியாக கைது

தகுதி பாராமல் கைது செய்யப்படுவரென எச்சரிக்கை

பாதுகாப்புப் படையினரின் கடமைகளுக்கு இடையூறு விளைவிப்பவர்களை தகுதி, தராதரம் பாராமல் கைது செய்யுமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக கடந்த சில நாட்களாக பாதுகாப்புப் படையினரின் கடமைகளில் பல்வேறு இடையூறுகள் ஏற்பட்டுள்ளன. இது தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளமையினால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இடையூறு விளைவிப்பவர்கள், மோதல்களை ஏற்படுத்துபவர்கள் மற்றும் அவற்றை வீடியோ எடுத்து சமூக ஊடகங்களில் பரப்புபவர்களுக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் கிடைத்துள்ளதாக பொலிஸ் தகவல்கள் தெரிவித்தன.

அண்மைக்காலமாக எரிபொருள் நிரப்பு நிலையங்களில் கடமையிலுள்ள இராணுவத்தினருக்கும் பொது மக்களுக்குமிடையில் பல்வேறு மோதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வெளிநாட்டு தபால் கட்டணங்கள் அதிகரிப்பு

வெளிநாட்டு தபால் கட்டணங்கள் நேற்று 01 ஆம் திகதி முதல் அதிகரிக்கப்பட்டுள்ளன. எரிபொருள் கட்டணம் அதிகரிப்பு, டொலரின் பெறுமதி, விமானக் கட்டணங்கள், புகையிரத கட்டணங்கள் அதிகரிப்பு காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கட்டணத் திருத்தங்கள் 04 ஆண்டுகளுக்குப் பிறகு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தற்போதுள்ள கட்டணத்தை விட இருமடங்காகக் கட்டணங்கள் திருத்தப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி, வெளிநாட்டு விமான தபால் கட்டணங்கள் மற்றும் வெளிநாட்டு கடல் தபால் கட்டணங்கள் இரண்டும் அதிகரிக்குமெனவும் அறிய வருகிறது.

## சட்டவிரோதமாக பிரான்ஸ் செல்ல முயன்ற 50 பேர் கைது

வென்னப்புவ பகுதியில் கடற்படை அதிரடி



இலங்கையிலிருந்து கடல் வழியாக சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா செல்ல முயன்றதாக சந்தேகிக்கப்படும் 47 பேர் கடற்படையினரின் உதவியுடன் சிலாபம், வென்னப்புவ பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிலாபம் வென்னப்புவ நகரில் நேற்று முன்தினம் (31) இரவு பொலிஸாருடன் இணைந்து கடற்படையினர் நடத்திய விசேட தேடுதல் நடவடிக்கையில், சட்டவிரோதமாக இலங்கையிலிருந்து கடல் மார்க்கமாக

04

வவுனியா – ஆச்சிபுரம் பகுதியில் திகில் சம்பவம்;

## 'ரஞ்சா' என்றழைக்கப்படும் இளைஞன் கொடூரக் கொலை

சூடு நடத்தி கையை வெட்டி எடுத்துச் சென்றனர்

வவுனியா விசேட நிருபர்



வவுனியா, ஆச்சிபுரம் பகுதியில் இளம் குடும்பஸ்தர் கட்டுத் துவக்கால் சுடப்பட்டும், வாளால் வெட்டப்பட்டும் படுகொலை செய்யப்பட்டுள்ளார். கொலையாளிகள் இவரது கையை வெட்டி எடுத்துச் சென்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். நேற்று முன்தினம் (31) மாலை அந்தப் பகுதிக்கு சென்ற ஆயுதம் தாங்கிய குழுவொன்று அவரைத் தாக்கியதாக தெரிவிக்கப்படுகின்றது. இதன்போது கட்டுத்துவக்கினால் அவர் மீது சுடப்பட்டுள்ளதாகவும் அதன் பின் வாளால் வெட்டி படுகொலை செய்யப்பட்டுள்ளதாகவும்

04

## SLPP ஆதரவின்றி எவராலும் ஆட்சி அமைக்க முடியாது

கட்சியின் செயலாளர் சாகர தெரிவிப்பு



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவின்றி, எந்தவொரு அரசாங்கத்தாலும் ஆட்சி செய்ய முடியாதென கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார். கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிடும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் மாபெரும் கட்சியாக எமது கட்சி காணப்படுகிறது. எதிர்க்காலத்தில் நாட்டில் சர்வக் கட்சி அரசாங்கமொன்று அமையுமானால் அதில், எமது கட்சி நிச்சயமாக பங்காளியாக செயற்படும். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு தான் இன்று பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலமுள்ளது. எமது கட்சியின் ஆதரவு இல்லாமல் எந்தவொரு அரசாங்கத்துக்கும் ஆட்சி செய்ய முடியாது. எதிர்க்காலத்தில்

04

காலி முகத்திடல் கடற்கரையில்

## இரண்டாவது சடலம் நேற்றுக் காலை மீட்பு



கொழும்பு, காலி முகத்திடல் கடற்கரையில் அடையாளம் தெரியாத சடலமொன்று நேற்று (01) காலை மீட்கப்பட்டுள்ளது. இச் சடலம் 40 வயது மதிக்கதக்க ஆண் ஒருவரின் சடலமென பொலிஸார் தெரிவித்தனர்.

04

## சர்வகட்சி அரசு குறித்து விரைவில் தீர்மானிப்போம்

ஐக்கிய மக்கள் சக்தி செயலாளர் அறிவிப்பு



சர்வகட்சி அரசாங்கம் தொடர்பில் விரைவில் தீர்மானிக்கப்படுமென ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

தற்பொழுது நாட்டில் நிலவி வரும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கில் ஜனாதிபதியினால் சர்வ கட்சி அரசாங்கமொன்றை அமைப்பதற்கான அழைப்பு தமக்கு கிடைத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். இந்த அழைப்பு தொடர்பில் கட்சி என்ற ரீதியில் எடுக்கப்படும் தீர்மானங்கள் குறித்து விரைவில் அறிவிக்கப்படுமென அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த அழைப்பை நிராகரிக்கப் போவதில்லையெனவும்

04

## பிறப்புச் சான்றிதழில் NIC இலக்கம் பதிவு

நேற்று முதல் ஆரம்பமானது



புதிதாக பிறக்கும் குழந்தைகளுக்கான பிறப்புச் சான்றிதழில், தேசிய அடையாள இலக்கத்தை உள்ளீடு செய்யும் நடைமுறை நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டதாக ஆட்பதிவு திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த 2021 டிசம்பர் 14 திகதிய அமைச்சரவை தீர்மானத்துக்கமைய, குழந்தை பிறப்பின்போது, பதிவாளர் நாயகம் திணைக்களத்தினால் வழங்கப்படும் பிறப்புச்சான்றிதழில், ஆட்பதிவு திணைக்களத்தினால் வழங்கப்படும் தேசிய அடையாள இலக்கத்தை உள்ளீடு செய்ய தீர்மானிக்கப்பட்டது.

04

சர்வகட்சி அரசு அமைப்பதற்கு முன்னர்

## சர்வகட்சி மாநாடொன்றை கூட்டுமாறு விமல் கோரிக்கை

ஜனாதிபதிக்கு தே.சு.மு பதில் கடிதம்



நாட்டின் நெருக்கடிக்கு தீர்வு காண உடனடியாக அனைத்துக் கட்சி மாநாட்டைக் கூட்ட வேண்டுமென தேசிய சுதந்திர முன்னணி தலைவர் விமல் வீரவங்ச ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளார். ஜனாதிபதிக்கு அனுப்பியிருந்த கடிதத்திலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, சர்வ கட்சி அமைப்பதற்கு அழைப்பு விடுத்து எம்.பிக்களுக்கு கடிதம்

04

## QR முறைமைக்கு சுமார் 50 இலட்சம் வாகனங்கள் பதிவு

எரிசக்தி அமைச்சு அறிக்கை தெரிவிப்பு



நாட்டில் எரிபொருள் விநியோக நடவடிக்கைக்காக அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட தேசிய எரிபொருள் அட்டையூடான கியூ.ஆர் முறைமைக்கு சுமார் 50 இலட்சம் வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக வலுசக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

04

## நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலை விரைவில் நீங்க வேண்டும்

– இஸ்லாமிய புது வருட செய்தியில் உலமா சபை தெரிவிப்பு

மலர்ந்திருக்கும் இந்த ஹிஜ்ரி புத்தாண்டில் நம் நாட்டிலும் உலகளாவிய ரீதியிலும் சமாதானமும் ஐக்கியமும் மலர துணைபுரிய வேண்டும் என்றும், குறிப்பாக நம் நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலை நீங்க வேண்டும் என்று பிரார்த்திப்பதாக அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை தெரிவித்துள்ளது. இஸ்லாமிய புது வருடத்தையிட்டு உலமா சபை விடுத்துள்ள செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

மலர்ந்திருக்கும் ஹிஜ்ரி 1444 இந்த இஸ்லாமிய புது வருடத்தில் நம் நாட்டின் அனைத்து விதமான நெருக்கடியான நிலையும் நீங்கி மக்கள் அனைவரும் மகிழ்ச்சியுடனும் சுபீட்சத்துடனும் வாழ அல்லாஹ் அருள் புரிவானாக!

இஸ்லாமிய ஹிஜ்ரி நாட்காட்டி என்பது அல் குர்ஆன் மற்றும் ஸுன்னாவின் அடிப்படையில் கால அளவீடாக பயன்படுத்தப்படுவதோடு, இது முஸ்லிம்களின் வாழ்வில் ஒரு முக்கிய பங்கும் வகிக்கிறது. ஸகாத், நோன்பு, மற்றும் ஹஜ் போன்ற வருடாந்த வணக்க வழிபாடுகளை செய்து கொள்வதற்கும் இது அவசியப்படுகிறது.

ஹிஜ்ரி நாட்காட்டி என்பது சந்திர நாட்காட்டியாகும். இதில் பன்னிரண்டு சந்திர மாதங்கள் உள்ளதோடு ஒவ்வொரு மாதமும் பிறை பார்த்தல் மூலம் தீர்மானிக்கப்படுகிறது.

04

## வீதியை விட்டு விலகி மரத்தில் மோதிய கார்

இருவர் பலி; மூவருக்கு காயம்

தங்காலை, ஹேனகடுவ பிரதேசத்தில் வாகனமொன்று வீதியை விட்டு விலகி மரமொன்றில் மோதியதில் இரு இளைஞர்கள் பலியாகியுள்ளதுடன் மூவர் காயமடைந்துள்ளதாக தங்காலை பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் மூன்று பிள்ளைகளின் தந்தையான 35 வயது லலித் சுஜீவ மற்றும் 30 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையான சுரேஷ் உதயங்க ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.



விபத்தில் படுகாயமடைந்த ஒருவர் காலி, கராப்பிட்டிய

04

## கொவிட் பரவல் தீவிரம் PHI சங்கமும் எச்சரிக்கை

மக்களை விழிப்பாக இருக்கவும் கோரிக்கை



கொவிட்19 தொற்று மீண்டும் பரவி வருவதால், பொதுமக்கள் இது தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டுமென பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

குறிப்பாக பாடசாலைகள், நிறுவனங்கள் மற்றும் கூட்டங்கள் நடைபெறும் பகுதிகளிலிருந்து நோய் அறிகுறிகளுடன் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு வருவதாக அதன் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்துள்ளார். ஆனால் இலங்கையிலுள்ள சுகாதார வைத்திய அதிகாரிகளின் அலுவலகங்களில் தொற்றாளர்களை உறுதிப்படுத்தும் அன்டிஜென் பரிசோதனை கருவிகள் இல்லை. எனவே, நோயாளிகளை கண்டறிவதில் கடும் சிக்கல்கள் உருவாகி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். எனவே,

04




## 07 மாவட்டங்களுக்கு... (03 ஆம் பக்கத் தொடர்)

அதற்கிணங்க நேற்று முற்பகல் 11 மணி முதல் இன்று முற்பகல் 11 மணி வரைக்கும் நடைமுறைக்கு வரும் வகையில் காலி, ஹம்பாந்தோட்டை, கண்டி, கேகாலை, மாத்தறை நுவரெலியா மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களின் பல்வேறு பிரதேசங்களுக்கும் இவ்வாறு மனுச அறிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள பிரதேசத்தில் வாழும் மக்கள் நிலவும் சீரற்ற காலநிலையை கவனத்தில் கொண்டு மிகவும் பாதுகாப்பான வகையில் செயற்படுமாறும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதேவேளை நில்வலா கங்கையின் நீர்மட்டம் அதிகரித்துள்ள நிலையில் எதிர்வரும் 24 மணித்தியாலங்களுக்காக

தென் மாகாணத்தில் மாத்தறை கம்புறுப்பிட்டி, தெவிநுவர உள்ளிட்ட பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு நீர்ப்பாசன திணைக்களத்தினால் எச்சரிக்கை விடுத்தப்பட்டுள்ளது.

மேற்படி பிரதேசங்களில் வாழும் மக்கள் மட்டுமன்றி வாகன போக்குவரத்துக் களின் போதும் முழுமையான அவதானம் செலுத்தப்பட வேண்டும் என்றும் அந்த நிறுவனம் கேட்டுக் கொண்டுள்ளது.

## சட்டவிரோதமாக பிரான்ஸ் ... (03 ஆம் பக்கத் தொடர்)

வெளிநாட்டுக்கு செல்ல முயன்றதாக சந்தேகிக்கப்படும் 47பேரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

கடற்படையினருக்கு கிடைத்த தகவலின்படி மேற்கு கடற்படை கட்டளை மற்றும் வென்னப்புவ பொலிசார் இணைந்து இரவு மேற்கொள்ளப்பட்ட இந்த விசேட தேடுதல் நடவடிக்கையில் சந்தேகத்திற்கிடமான 03 வான்களை அவதானித்ததுடன் அவற்றை சோதனையிட்டனர்.

அங்கு சட்டவிரோதமாக கடல் மார்க்கமாக வெளிநாடுகளுக்கு செல்ல முயன்றதாக சந்தேகிக்கப்படும் 18 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் 37 பேர், 06 பெண்கள், 18 வயதுக்குட்பட்ட 04 பேர் உட்பட 47 பேருடன் அந்த வேன்களின் சாரதிகள் 03 பேரும் கைது செய்யப்பட்டனர். இந்த தேடுதல் நடவடிக்கையின் போது கடற்படையினரால் கைது செய்யப்பட்டவர்கள் யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, கல்முனை, மட்டக்களப்பு, புத்தளம், சிலாபம், மாரவில, மஹாவெவ, முந்தல் மற்றும் வெள்ளவத்தை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களென அடையாளம் காணப்பட்டுள்ளனர். கைதானவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக வென்னப்புவ பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

## நாடு எதிர்கொண்டுள்ள... (03 ஆம் பக்கத் தொடர்)

புதிய ஹிஜ்ரி ஆண்டின் தொடக்கம் எமக்கு ஹிஜ்ரத் எனும் மதீனாவை நோக்கிய ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் இடம்பெயர்வை ஞாபகப்படுத்துவதோடு அதன்போது உலகத்திற்கே முன்மாதிரியாக நிறுவப்பட்ட மதீனா சாசனத்தையும் அது நினைவுபடுத்துகின்றது.

அதன் ஒவ்வொரு விடயமும் சகவாழ்வு, நல்லெண்ணம், நீதி, நியாயம், தேசப்பற்று போன்றவற்றை எமக்குள் ஏற்படுத்தும் அதேவேளை நம் தாய் நாடான இலங்கைக்கு மற்றுமன்றி முழு உலக இயக்கத்திற்கும் பொருத்தமான, அவசியமான விடயங்களை முன்வைக்கும் யாப்பாகவும் அது திகழ்கிறது.

எல்லாம் வல்ல அல்லாஹுதஆலா மலர்ந்திருக்கும் இந்த ஹிஜ்ரி புத்தாண்டில் நம் நாட்டிலும் உலகளாவிய ரீதியிலும் சமாதானமும் ஐக்கியமும் மலர துணைபுரிய வேண்டும் என்றும், குறிப்பாக நம் நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலை நீங்க வேண்டும் என்றும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை பிரார்த்திக்கின்றது என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இம்மாத இறுதிக்குள் IMF உடன் ...

குறிப்பிட்டார். சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர், கடன் வழங்குனர்களுடன் பல்வேறு அணுகுமுறைகளைப் பின்பற்றி கடனை மறுசீரமைக்க வேண்டுமென்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

கடுமையான எரிபொருள் நெருக்கடியை குறைப்பதற்கு தேவையான எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு போதுமான பணத்தை தேட முடியுமென மத்திய வங்கி நம்புவதாகவும் சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தம் கைச்சாத்தாக இருக்கும் நிலையில், அடுத்த வருடம் எரிபொருள், உணவு மற்றும் பசளை போன்று பிரதான இறக்குமதிகளுக்காக வேறு நிதி மூலங்களின் ஊடாக 03 பில்லியன் டொலர்களுக்கு மேல் பெற வேண்டி ஏற்படுமென்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்காக IMF இன் உதவியை நாட அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதோடு அது தொடர்பான ஆரம்ப கட்ட பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. IMF உடனான பேச்சுவார்த்தைகள் தாமதமாக ஆரம்பிக்கப்பட்டது தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்படுவதோடு ஆரம்பத்திலேயே பேச்சுவார்த்தை முன்னெடுத்திருந்தால் இன்றைய நெருக்கடி நிலை கட்டுப்படுத்தப்பட்டிருக்குமென நிதித்துறை நிபுணர்கள் உட்பட பல்வேறு தரப்பினரும் தெரிவித்து வருவது தெரிந்ததே. (பா)

## வெளிநாட்டு பயணத் தடை...

உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவர்கள் மீது விசாரணை நடத்த உத்தரவிடுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட இரண்டு அடிப்படை உரிமை மனுக்களை பரிசீலித்த நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, புவனேக அலுவிஹார, விஜித் மலல்கொட, எல்டிபி தெஹிதெனிய மற்றும் முர்து பெர்னாண்டோ ஆகிய ஐவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர் குழாம் முன்னிலையில் இம் மனு பரிசீலிக்கப்பட்டது.

2019 முதல் 2020 வரையான காலப்பகுதியில் அரசாங்கம் வர்த்தகர்களுக்கு வரிச்சலுகைகளை வழங்கியதாகவும் இதன் காரணமாக அரசாங்கம் 600 பில்லியனுக்கும் அதிகமான வருமானத்தை இழந்ததாகவும் இதனால் பொருளாதாரத்துக்கு பாரிய சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி சந்தன ஜயரத்ன நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டினார் .

பொருளாதார நெருக்கடி ஏற்படுமென அறிந்தும் பொறுப்பான தரப்பினர் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடாததால் நாடு தற்போது வங்குரோத்து நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதன்பின், மனுக்கள் மீதான விசாரணை நாளை 03ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (பா)

# டீசல் விலை நேற்று முதல் 10 ரூபாவினால் குறைப்பு

*டீசல் விலை நேற்று இரவு 10 மணி முதல் 10 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது. இருவாரங்களுக்கு ஒரு முறை மேற்கொள்ளும் எரிபொருள் விலைமறுசீரமைப்புக்கு அமைவாக இந்த விலை குறைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாதமும் முதலாம் மற்றும் 15 ஆம் திகதிகளில் எரிபொருள் விலைகள் மறுசீரமைக்கப்படுகிறது.*

*கடந்த மாதம் 18 ஆம் திகதியும் எரிபொருள் விலைகள் குறைக்கப்பட்டன. இதற்கமைவாக 92 ஒக்டேன் வகை பெற்றோலின் விலை 20 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதுடன் பெற்றோலின் விலை 10 ரூபாவினால் குறைக்கப்பட்டது. டீசல் விலையும் 20 ரூபாவால் குறைக்கப்பட்டது.*

*அடுத்த 15 ஆம் திகதி மீள விலை மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட உள்ளதாக அறிய வருகிறது.*

## வீதியை விட்டு விலகி... (03 ஆம் பக்கத் தொடர்)

போதனா வைத்தியசாலையிலும் மற்றைய இருவர் தங்காலை ஆதார வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## இரண்டாவது சடலம்... (03 ஆம் பக்கத் தொடர்)

இந்தச் சடலம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். இருப்பினும் சடலமாக மீட்கப்பட்டவர் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

அண்மையில் காலி முகத்திடல் கடற்கரையிலிருந்து மேலும் ஒருவர் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## QR முறைமைக்கு சுமார்... (03 ஆம் பக்கத் தொடர்)

அரசாங்கத்தின் உத்தியோகபூர்வமாக அறிமுகப்படுத்தப்பட்ட இணையதளத்தினூடாக மாத்திரம் பதிவு செய்யுமாறும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்ப திணைக்களம் பொது மக்களை கேட்டுக்கொண்டுள்ளது.

கியூ.ஆர். குறியீட்டின் மூலம் எரிபொருளை விநியோகிக்கும் நடைமுறை நேற்று (01) முதல் நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ரஞ்சா' என்றழைக்கப்படும்... (03 ஆம் பக்கத் தொடர்)

ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இளம் குடும்பஸ்தரது உடலில் பலத்த வெட்டு காயங்கள் காணப்படுவதுடன், ஒரு கை முற்றாக துண்டிக்கப்பட்டு அங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இப் பகுதியில் உடல் முழுவதும் வெட்டுக் காயங்களுடன் சடலம் ஒன்று காணப்படுவதாக சிதம்பரபுரம் பொலிசாருக்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து சடலம் மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தில் ஆச்சிபுரம் பகுதியை சேர்ந்த ரஞ்சா என அழைக்கப்பட்ட ஜோன்சன் என்ற 30 வயதுடைய இளம் குடும்பஸ்தரே கொல்லப்பட்டுள்ளார்.

சடலம் சட்ட வைத்தியரின் பரிசோதனைக்காக வவுனியா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக சிதம்பரபுரம் பொலிசார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## தடுப்பூசியை தாமதிக்காது...

மக்கள் தமக்கான கொரோனா தடுப்பூசிகளை தாமதமின்றி பெற்றுக் கொள்ள வேண்டுமென அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்கேட்டுக்கொண்டுள்ளது.

நாடு மீண்டுமொரு கொவிட்19 அலையை எதிர்கொள்ளும் நிலையில் இல்லை. எனவே மீண்டுமொரு கொவிட்19 அலை தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஹரித அலுத்கே தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இனிவரும் காலங்களில் கொவிட்19 பரவல் அதிகரித்தாலும் முடக்க நிலைக்கு செல்ல முடியாது. இது தொடர்பில் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

தற்போது தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. நாளாந்தம் 150 இற்கும் அதிகமான தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகிறார்கள். மரணங்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

தற்போது இலங்கையில் புதிய ஒமிக்ரோன் உப பிறழ்வு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த புதிய வகை பிறழ்வு ஒருவரிடமிருந்து 12 பேருக்கு பரவும் திறனைக் கொண்டுள்ளது. அது முன்னைய டெல்டா வகைகள் மற்றும் சீனாவில் காணப்படும் உப பிறழ்வுகளை விட வீரியம் கொண்டது.

பரவி வரும் புதிய உப பிறழ்வினால் தொற்றாளர்கள் எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரித்துள்ளது. இதன் காரணமாகவே இறப்பு வீதமும் அதிகரித்துள்ளது.

இதனை எதிர்கொள்ள மக்களின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க வேண்டும். எனவே மக்கள் தமக்கான கொரோனா தடுப்பூசிகளை தாமதமின்றி பெற்றுக் கொள்ள வேண்டும் என்றார்.

## தானிஸின் விளக்கமறியல்...

பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜுலை 13 ஆம் திகதி தேசிய தொலைக்காட்சிசேவையான ரூபவாஹினிக்குள் பிரவேசித்து வன்முறையில் ஈடுபட்டமை, அதன் ஒளிபரப்புக்கு இடையூறு விளைவித்தமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்களின் கீழ் தானிஸ் அலி கைதுசெய்யப்பட்டுள்ளார். கட்டுநாயக்கவிலிருந்து டுபாய் புறப்படவிருந்த விமானத்தினுள் வைத்து, கடந்த 26 ஆம் திகதி குடிவரவு, குடியகல்வு அதிகாரிகளால் கைதுசெய்யட்டார்.

இதேவேளை, கடந்த ஜுன் 20 ஆம் திகதி சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகள் குழு நிதியமைச்சின் பிரதிநிதிகளை சந்திக்க வந்த போது நிதியமைச்சின் வாயிலை மறித்து ஆர்ப்பாட்டம் நடத்தியமை தொடர்பான வழக்குக்காக நீதிமன்றத்தில் ஆஜராகாமை தொடர்பில் மேற்படி நீதிமன்றத்தால் தானிஷ் அலிக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

அதன்படி, அவர் கடந்த ஜுலை 27 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது, ஆகஸ்ட் 05 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கவும், ரூபவாஹினி கூட்டுத்தாபன வழக்கு தொடர்பில் (ஆகஸ்ட்1) விளக்கமறியலில் வைக்கவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கொவிட் பரவல் தீவிரம்... (03 ஆம் பக்கத் தொடர்)

எதிர்வரும் இரு வாரங்களில் இலங்கையின் பல்வேறு பகுதிகளிலிருந்து கொவிட்19 நோயாளர்கள் அடையாளம் காணப்படாமை, எரிபொருள் நெருக்கடி மற்றும் பொருளாதார நெருக்கடி போன்ற காரணிகளினால் இலங்கையில் அதிகளவான கொவிட்19 நோயாளிகள் பதிவாக வாய்ப்பிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## சர்வகட்சி அரசு குறித்து... (03 ஆம் பக்கத் தொடர்)

எந்த அடிப்படையில் இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக்கொள்வது என்பது குறித்து விரிவாக ஆராயப்பட்டு வருவதாக ரஞ்சித் மத்துமபண்டார தெரிவித்துள்ளார்.

## SLPPஆதரவின்றி... (03 ஆம் பக்கத் தொடர்)

எவ்வாறான அரசாங்கம் அமையப் போகிறது என்பதை பார்த்து, நாம் ஜனாதிபதிடன் பேச்சு நடத்தி அடுத்தக்கட்ட நடவடிக்கையை மேற்கொள்வோமெனவும் தெரிவித்தார்.

## பிறப்புச் சான்றிதழில்... (03 ஆம் பக்கத் தொடர்)

மேற்படி இரு திணைக்களங்களுக்குமிடையில் இணையம் மூலம் தகவல்கள் பரிமாற்றம் நடைபெறும். இந்த புதிய பிறப்புச் சான்றிதழ் வழங்கும், பரீட்சார்த்த திட்டம் கம்பஹா, தெஹிவளை, ஹங்குராங்கெத்த, குருணாகல், இரத்தினபுரி மற்றும் தமன்கடுவ ஆகிய பிரதேச செயலகங்களூடாக முன்னெடுக்கப்படவுள்ளது. இவ்வாறு பிறப்புச் சான்றிதழை பெறும் ஒருவர், தனக்கு 15 வயது பூர்த்தியானதன் பின்னர் தேசிய அடையாள அட்டையை பெற விண்ணப்பிக்கையில், மேற்படி பிறப்பு சான்றிதழிலுள்ள அடையாள இலக்கத்திலேயே தனக்கான தேசிய அடையாள அட்டையை பெறமுடியும்.

இந்த முறைமையினூடாக ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் போது, பிறப்பு முதல் அனைத்து நடவடிக்கைகளுக்காகவும், ஒரே அடையாள இலக்கத்தை பயன்படுத்துவதால், தனிநபர் கல்வி, சுகாதாரம், நிதி மற்றும் சமூக தரவுகளை சேமிக்க அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு இலகுவானதாக அமையும். ஒரே இலக்கத்தின் கீழ் அனைத்து தரவுகளும் காணப்படுவதால், அந்தந்த நிறுவனங்களூடாக பொதுமக்களுக்கு இலகுவாக சேவை பெற்றுக்கொள்ளவும் முடியுமென ஆட்பதிவு திணைக்களம் தெரிவித்துள்ளது.

## சர்வகட்சி மாநாடொன்றை... (03 ஆம் பக்கத் தொடர்)

அனுப்பியிருந்தீர்கள். ஆனால் அற்கு முன்னர் சர்வ கட்சி மாநாடொன்றை கூட்ட வேண்டும். தொலைநோக்கு, மூலோபாய அணுகுமுறை மற்றும் அதற்கேற்ப வேலைத்திட்டம் என்பவற்றை முன்வைத்து மக்களின் நம்பிக்கையைப் பெறுவதற்கு அனைத்துக் கட்சி மாநாடு முக்கியமானது. பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கான நம்பகமான மற்றும் பயனுள்ள நடவடிக்கைகளில் பொதுமக்களின் நம்பிக்கையைப் பெற அரசியலமைப்பு திருத்தத்தினூடாக அரசில் மறுசீரமைப்பு அவசியமானது. அந்த நிபந்தனையை நிறைவேற்றாமல் அரசியலமைப்பு திருத்தங்களை நிறைவேற்ற முயற்சிப்பது அரசியல் நெருக்கடியை மேலும் அதிகரிக்கச் செய்யும்.

முதலில் அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பில் அரசியல் கட்சிகளுக்கிடையில் பொதுவான இணக்கப்பாடு ஏற்படுவது மிகவும் அவசியமாகும்.

அதன்படி, அனைத்துக் கட்சி மாநாட்டைக் கூட்டி, நெருக்கடியைத் தீர்ப்பதற்கான குறைந்தபட்ச பொதுத் திட்டத்தையும், அதைச் செயல்படுத்துவதற்கான திட்டத்தையும் முன்வைக்க வேண்டும். அனைத்துக் கட்சி மாநாடு அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பாக ஒருமித்த கருத்தை எட்டுவதற்கும் வாய்ப்பளிக்கும். நாட்டுக்கு முன்வைக்கப்பட்ட பின்னர் திட்டத்தை நடைமுறைப்படுத்து வதற்கான ஒரு பொறிமுறையாக அனைத்துக் கட்சி அரசாங்கம் தேவையானதென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (பா)

## ஜனாதிபதியின் அழைப்புக்கு...

ஏற்படுத்த தேசிய சர்வகட்சி வேலைத்திட்டத்தில் கலந்து கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சகல பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுத்திருந்தார்.

அது பற்றி ஊடகமொன்றிற்கு கருத்து வெளியிடுகையிலேயே, தமிழ் முற்போக்குக் கூட்டணியின் நிலைப்பாட்டை பிரதித் தலைவர் பழனி திகாம்பரம் நேற்று அறிவித்தார்.

## லிட்ரோ Gas சிலிண்டர்...

தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார். தற்போது, 12.5 கிலோ எடை கொண்ட லிட்ரோ சமையல் எரிவாயு சிலிண்டர்களின் விலை 4,910 ரூபாவாக காணப்படுகிறது.

அத்துடன், 05 கிலோ மற்றும் 2.3 கிலோ எடைகொண்ட லிட்ரோ சமையல் எரிவாயு கொள்கலன்களின் விலைகள் முறையே 1971 ரூபா, 914 ரூபாவாக காணப்படுகிறது.

## தொலைபேசி தொடர்புகளை...

இணையத்தை பயன்படுத்தி இவர்கள் அழைப்புகளை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். பொலிஸார் தற்போது தொலைபேசி தரவு பதிவுகளை ஆய்வு செய்து வருவதாகவும், தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்படுவார்களென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதி மாளிகைக்குள் நுழைந்து அங்கிருந்த உடைமைகளுக்கு சேதமேற்படுத்திய 100க்கும் மேற்பட்டவர்களின் கைரேகைகள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அந்த கைரேகைகள் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்டால்...

கடந்த வாரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நடைமுறையிலுள்ள அவசர காலச் சட்டம் தொடர்பில் விளக்கமளிக்க அரசாங்கத்தின் பாராளுமன்றக் குழுவை அழைத்திருந்தார். அங்கு விசேட உரையாற்றிய கமல் குணரட்ண, தற்போதைய நிலைமையை தானும் பாதுகாப்பு தரப்பினரும் மூன்று மாதங்களாக பொறுத்துக்கொண்டதாக தெரிவித்துள்ளார்.

இராணுவம் பொறுமை காத்திருப்பது கோழைத்தனமென சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் நினைத்துக் கொண்டிருப்பதாக அவர் கூறியுள்ளார்.

எதிர்காலத்தில் எவரேனும் அரச சொத்துக்களுக்கு அல்லது அரசாங்க அலுவலகங்களுக்கு சேதம் விளைவிக்க முற்பட்டால், அவசரகால நிலை விதிமுறைகளின் அதிகபட்ச பலம் பயன்படுத்தப்படுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## 09 ஆவது பாராளுமன்றத்தின்...

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடர் 2290/35 இலக்க விசேட வர்த்தமானி அறிவித்தலூடாக கடந்த ஜுலை 28 ஆம் திகதி ஜனாதிபதியால் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. ஒன்பதாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடரை வைபவரீதியாக ஆரம்பித்து வைத்தல் தொடர்பான பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரம் மற்றும் அது தொடர்பான தகவல்களை பாராளுமன்ற இணையத்தளத்தில் பார்வையிட முடியுமென்றும் செயலாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இதனையொட்டி விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளும் எடுக்கப்பட்டுள்ளன. பாராளுமன்றம் இறுதியாக கடந்த புதன் கிழமை கூடியது.இதன் போது அவசர கால நிலைமை தொடர்பான விவாதம் நடைபெற்று வாக்கெடுப்பின் மூலம் அது நிறைவேற்றப்பட்டது. இதனையடுத்து பாராளுமன்ற கூட்டத் தொடர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

நாளை ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை நடைபெறவுள்ளதோடு தற்போதைய பொருளாதார நெருக்கடி, எதிர்கால திட்டங்கள் உட்பட பல முக்கிய விடயங்கள் குறித்து ஜனாதிபதி உரையாற்றவுள்ளதாக அறியவருகிறது.

## இந்தியாவில் முதலாவது உயிரிழப்பு...

மாவட்டத்திலுள்ள புனியூர் என்ற இடத்தைச் சேர்ந்த 22 வயது இளைஞர் ஐக்கிய அரபு அமீரகத்தில் தொழில் செய்து வந்தார். கடந்த 22ஆம் திகதி ஐக்கிய அரபு அமீரகத்திலிருந்து நாடு திரும்பினார். நாடு திரும்பியதும், அருகிலிருந்த கால்பந்து மைதானத்தில் கால்பந்து விளையாடினார்.

சில நாட்களில் அவருக்கு உடல் நிலை பாதிக்கப்பட்டது. லேசான காய்ச்சல் அறிகுறிகளுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. அவரின் இரத்த மாதிரிகள் சோதனைக்குட்படுத்தப்பட்டன. இதன்போது, அவருக்கு குரங்கம்மை தொற்று இருப்பது உறுதியானது. இதையடுத்து அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டபோதும், நேற்று உயிரிழந்தார். அவரது உடல் குரங்கம்மை பாதிப்பாளர்களின் மரணம் தொடர்பான நிலையான வழிகாட்டுதலின் அடிப்படையில் அடக்கம் செய்யப்பட்டது.

இந்தத் தகவலை கேரள மாநில சுகாதாரத் துறை அமைச்சர் வீணா ஜார்ஜ் உறுதிப்படுத்தியுள்ளார். மேலும் இளைஞரின் மரணம் தொடர்பாக விசாரணைக்கும் உத்தரவிடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

குரங்கம்மைதொற்று பாதிப்பு வேகமாக பரவவில்லை, உயிரிழப்பும் பெரிதளவில் ஏற்படவில்லையெனத் தெரிவிக்கப்பட்டபோதும் இந்த உயிரிழப்பு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. குரங்கம்மைக்கு இந்தியாவில் பலியான முதல் உயிர் இதுவே.

ஆபிரிக்காவுக்கு வெளியே இது 04ஆவது உயிரிழப்புமாகுமென்றும் அச்செய்தி தெரிவிக்கிறது.

## அரசியல் காழ்ப்புணர்வை மறந்து...

ஓரணியாகச் செயலாற்ற முன்வர வேண்டும் என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். சக தமிழ் அரசியல் கட்சிகளுக்கு அவர் விடுத்துள்ள செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாடு எதிர்கொண்டுள்ள அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்ள சர்வ கட்சி அரசொன்றை அமைத்து முன்னோக்கி செல்வதனூடாகவே சிறந்த பெறுபேற்றை பெற்றுக் கொள்ள முடியுமென்று கூறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதற்கான அழைப்பையும் சர்வ கட்சிகளுக்கும் எழுத்து மூலம் கடிதமாக அனுப்பி வைத்துள்ளார்.

ஜனாதிபதியின் அந்த அழைப்பை ஈ.பி.டி.பி வரவேற்பது மாத்திரமல்லாது அந்த நோக்கம் செயல்வடிவம் பெறுவதற்கான பங்களிப்பையும் செய்து வருகின்றது.

இந்த நிலையில் சர்வ கட்சியில் பங்கெடுப்பதும், சர்வ கட்சி அரசொன்றின் எதிர்கால வேலைத்திட்டத்தில், மூன்று தசாப்தத்துக்கும் மேலாக கொடிய யுத்த வன்முறைக்கு முகம் கொடுத்து பல வழிகளிலும் இழப்புக்களைச் சந்தித்துள்ள தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை வென்றெடுக்கும் வேலைத்திட்டங்களையும் வகுத்துக்கொண்டு ஒரு தேசிய இனமாக நாமும் முன்னோக்கிச் செல்ல வேண்டும்.

எனவே தமிழ் அரசியல் கட்சிகள் இலங்கையின் தற்போதைய அரசியல் செல் நெறியை சரியாக கணித்து நாம் தீர்மானங்களை எடுக்க வேண்டும்.

சர்வ கட்சி அரசை வரவேற்கும் அதேவேளை அதற்கு முரண்பாடான நிபந்தனைகளை விடுப்பதும், குழப்பத்தில் அரசியல் இலாபம் தேடும் உள்நோக்கத்தோடும் தீர்மானங்களை எடுப்பார்களேயானால் அது மீண்டும் ஒருமுறை தமிழ் மக்களை அரசியல் ரீதியாக தோற்கடிக்கச் செய்ததாகவே அமையும்.

எனவே ஏனைய தமிழ்க்கட்சிகள் தமது வழமையான எதிர்ப்பு அரசியல் எனும் சமகாலத்துக்கு பொருத்தமற்ற அரசியல் போக்கை கைவிட்டு, ஈ.பி.டி.பியாகிய நாம் தொடர்ந்தும் கூறிவரும் நடைமுறைச் சாத்தியமான அரசியல் வழிமுறைக்கு வருவது காலத்தின் அவசியமாகுமென்பதை உணர்ந்து செயற்பட வேண்டும் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

## தமிழக மீனவர்களுக்கு நடுக்கடலில்...

படகின் பழுதை சரி செய்த பின் படகிலிருந்த மீனவர்களுக்கு உணவளித்து பாதுகாப்பாக இராமேஸ்வரம் திருப்பி அனுப்பிவைத்துள்ள சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

இலங்கை கடற்படையின் இந்த மனிதாபிமான செயல் இராமேஸ்வரம் மீனவர்கள் மட்டுமல்லாமல் தமிழக மீனவர்கள் மத்தியில் பாராட்டையும் பெற்றுள்ளது.

கடந்த சனிக்கிழமை (30) இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து சுமார் 400க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு சென்றனர். அதில் இராமேஸ்வரத்தை சேர்ந்த ராஜா என்பவருக்கு சொந்தமான மீன்பிடி விசைப் படகில் சரவணன், அலெக்சாண்டர், அந்தோணி, பாண்டி உள்ளிட்ட 06 பேர் மீன்பிடிக்க சென்று தனுஷ்கோடிக்கும் தலைமன்னாருக்குமிடையே மீன்பிடித்துக் கொண்டிருந்தனர்.

சனிக்கிழமை இரவு சுமார் 11 மணியளவில் திடீரென படகிலுள்ள இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக படகுக்குள் கடல் நீர் புக ஆரம்பித்ததையடுத்து படகு மெல்ல மெல்ல கடலுக்குள் மூழ்க ஆரம்பித்துள்ளது.

அதை கவனித்த அப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்ட இலங்கை கடற்படையினர் உடனடியாக மீனவர்களை பத்திரமாக மீட்டு, படகில் ஏற்பட்ட இயந்திர கோளாறை சரி செய்ய முயற்சி செய்தனர்.

ஆனால் கடற்படை வீரர்களின் முயற்சி தோல்வியில் முடிந்ததால் உடனடியாக மன்னார் கடற்படை முகாமிலிருந்து திருத்துநரை வரவழைத்து படகை சரி செய்யும் பணியை மேற்கொண்டனர்.

ஆனால் தொடர்ந்து இலங்கை கடற்படை எடுத்த முயற்சி தோல்வியில் முடிந்தது. உடனடியாக இலங்கை கடற்படை வீரர் ஒருவர் இராமேஸ்வரத்திலுள்ள விசைப் படகு உரிமையாளரின் தொலைபேசி எண்ணுக்கு வாட்ஸ்அப் மூலமாக 'நான் இலங்கை கடற்படை வீரர் பேசுகிறேன், உங்களுடைய படகு பழுதாகி மன்னார் கடற்படை முகாம் அருகே உள்ளது. உடனடியாக வந்து படகை மீட்டுச் செல்லுங்கள்' என வாய்ஸ் தகவல் அனுப்பினார்.

உடனடியாக படகின் உரிமையாளர் ராஜா மீனவர்களையும் படகையும் பத்திரமாக மீட்டு கொண்டு வர ராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து மற்றொரு விசைப்படகு ஒன்றை அனுப்பினார்.

இந்நிலையில் பழுதான படகை இலங்கை கடற்படை வீரர்கள் சர்வதேச கடல் எல்லை வரை இழுத்து வந்து படகின் உரிமையாளர் அனுப்பி வைத்த படகில் மீனவர்களையும் படகையும் பத்திரமாக ஒப்படைத்தனர்.

நடுக்கடலில் பழுதாகிக் கிடந்த படகிலிருந்த மீனவர்கள் 06 பேருக்கும் இலங்கை கடற்படையினர் பழம், பிஸ்கட், உணவு உள்ளிட்டவைகளை வழங்கி அவர்களுக்கு முழு உதவி செய்து பத்திரமாக இராமேஸ்வரம் திருப்பி அனுப்பினர்.

தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக அங்குள்ள மக்கள் தவிக்கும் சூழ்நிலையில் இலங்கை கடற்பரப்பில் படகு பழுதாகி நின்ற தமிழக மீனவர்களுக்கு உணவளித்து பத்திரமாக திருப்பி அனுப்பிய நிகழ்வு இராமேஸ்வரம் மீனவர்கள் மட்டுமல்லாமல் தமிழக மீனவர்கள் மத்தியில் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நடுக்கடலில் இலங்கை கடற்படை ரோந்து கப்பல் சுற்றி வளைத்தது, தங்களை படகுடன் இலங்கை கடற்படை வீரர்கள் கைது செய்து சிறையில் அடைக்க போகிறார்களென அச்சமடைந்திருந்தபோதும் உணவளித்து பத்திரமாக திருப்பி அனுப்பியதற்கு இலங்கை கடற்படைக்கு நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்வதாக கரை திரும்பிய மீனவர்கள் நெகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

# நம்பிக்கையை நோக்கிய நமது பயணத்தில் நம்முடன் இயேசு



## பரிசுத்த பாப்பரசர் முதலாம் பிரான்சிஸ்

நமது தோல்விகள் கடவுளை சந்திக்க வழிகாட்டுவனவாக உள்ள போது நமது வாழ்வும் நம்பிக்கையும் புதுப்பிறப்படைகின்றன என பரிசுத்த பாப்பரசர் முதலாம் பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

லூக்கா நற்செய்தியின் இறுதியில் இடம் பெறும் எம்மவுஸ் பயணம் நமது தனிப்பட்ட வாழ்விற்கும் திருஅவைக்கும் அடையாளமாகத் திகழ்கின்றது. நமது வாழ்க்கைப் பாதையில் நமது கனவுகள், உள்ளத்தின் ஆழமான நம்பிக்கைகள் எதிர்பார்ப்புகள் போன்றவற்றை அடைய பலவீனங்கள் மற்றும் துன்பங்களிலிருந்து நாம் மீண்டு வர வேண்டும் என்றும் பரிசுத்த பாப்பரசர் தெரிவித்துள்ளார்.

நமது தோல்விகளினாலும் கடந்தகால அனுபவங்களினாலும் சில வேளைகளில் நாம் சிறைக்குள் அடைபட்டு இருப்பது போல முடங்கிப் போகின்றோம். இந்த சந்தர்ப்பங்களில் நாம் தனியாக இல்லை இயேசு நம் அருகில்




உடன்பயணிக்கின்றார் என்பதை நேற்றைய நற்செய்தி வாசகம் நமக்கு வெளிப்படுத்துகின்றது.

இயேசு நம்முடன் பயணித்து கண்களை திறக்கச் செய்து, உள்ளத்தைப் பற்றி எரியச் செய்து, நம்மோடும் பிறரோடும் அவரோடும் திருஅவையோடும் ஒப்புரவாகச் செய்கின்றார் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இயேசுவின் இறப்புக்குப் பின் துன்பத்தினால் துவண்டவர்களாய் தங்களின் எதிர்பார்ப்பு அனைத்தையும் இயேசுவின் மேல் வைத்து, ஏமாற்றமடைந்தவர்களாய், இயல்பு வாழ்க்கையை வாழ எம்மவுஸ் நோக்கி சென்று கொண்டிருக்கும் இரண்டு சீடர்களைப் பற்றியது நேற்றைய நற்செய்தி வாசகம். மெசியாவின் பாடுகள் வழியாக அவர்கள் பெற்ற துன்ப அனுபவங்களை மனதில் சுமந்து குற்றவாளிகள் போல துன்பமுடன் பயணம் செய்யும் அவர்களின் முகங்கள் வருத்தமாகவும் சோகமாகவும் காணப்பட்டன.

சோகமாய் என்பது சீடர்களின் மகிழ்வான எதிர்பார்ப்புகள் வீணாகிவிட்டன, உறுதியான நம்பிக்கைகள் சிதைந்து விட்டன கனவுகள் ஏமாற்றத்தையும் வருத்தத்தையும் உண்டாக்கி விட்டன என வெளிப்படுத்துகிறார் நற்செய்தியாளர் லூக்கா.

இவர்களின் இந்த பயண அனுபவம் நமது வாழ்க்கைக்கும் ஆன்மீகப் பயணத்துக்கும் மிகவும் பொருந்தும் வேளையில், தோல்விகள்



குழப்பங்கள் தெளிவின்மைகள் போன்றவற்றால் நமது எதிர்பார்ப்புக்களை மதிப்பீடு செய்ய முடியாமல் நாம் நொறுக்கப்படுகின்றோம்.

நமது உயர்ந்த இலட்சியங்கள் எனும் வாழ்க்கை இலக்குகளை பலவீனம், மற்றும் நம்பிக்கை குறைவினால் கைவிடுகின்றோம்.

புனித பவுல் சொல்வது போல் "நன்மை செய்ய விருப்பம் என்னில் இல்லாமல் இல்லை அதைச்செய்யத்தான் முடியவில்லை"

என்ற வரிகளுக்குகேற்ப அன்றாட வாழ்க்கையில் அருகில், தொலைவில், உறவில், உணர்வில், அனுபவம், தவறு தோல்வி என அனைத்திலும் பாவங்களால் நசுக்கப்பட்டு குற்ற உணர்வுடன் வாழ்கின்றோம்.

நேற்றையமுதல் வாசகத்தில் ஆதாம் ஏவாள் இத்தகைய உணர்வினால் ஆட்கொள்ளப்பட்டு கடவுளிடமிருந்து மட்டுமல்ல தங்களிடமிருந்தும் விலகி ஒருவர் மற்றவரைக் குற்றம்சாட்டத் தொடங்குகின்றனர்.

இதேபோன்று இயேசுவின் சீடர் குழுவை அடையாளப்படுத்தும் எம்மவுஸ் சீடர்கள் இருவரும் இயேசுவின் மேல் தாங்கள் வைத்த நம்பிக்கை பலிக்காமல் போனது பற்றி குறை கூறிக் கொண்டு செல்கின்றனர்.

நாம் உயிர்த்த இயேசுவின் குழுவைச் சார்ந்தவர்களாக இருந்த போதிலும், நம்முடைய ஏமாற்றங்களிலும் குழப்பங்களிலும் தீயோனின் சோதனையிலும் கல்வாரி துன்பத்தை காண்கின்றோம். அதிலிருந்து மீண்டு வர என்ன, ஏன், எப்படி நடந்தது என்று நமக்குள் நாம் கேள்வி கேட்டுக் கொள்ள வேண்டும்.

எம்மவுஸ் சீடர்கள் போல சோதனையில் விழாதவாறு கவனமாக இருக்கவேண்டும். ஏனெனில் அவர்கள் நிகழ்வு நடந்த இடத்தை விட்டு அகன்று, அடைக்கலம் தேடி எம்மவுஸ் நோக்கி தப்பி செல்ல நினைத்தனர்.

துன்பம் வரும்போது அதை விட்டு தப்பி ஓட நினைப்பது மிக மோசமானது. மாறாக துன்பத்தை எதிர்கொள்ள வேண்டும். தீயோனிடமிருந்து வரும் இச்சோதனை,துன்பங்கள், நமது ஆன்மீகப்பயணத்தை இத் துன்பங்களிலிருந்து ஒருபோதும் மீண்டு வரமுடியாது, எதுவும் செய்ய முடியாது என்ற நம்பிக்கையற்ற தன்மையை வளர்க்கின்றன.

நமது ஏமாற்றம், துயரம், தீயோனின் தூண்டுதலால் செய்யும் பாவம், போன்றவற்றால் நம்முடைய அருள்வாழ்வின் நீர் வற்றிப்போய், எதுவும் செய்ய முடியாது எனும் நிலையிலும் இயேசு நம்மோடு உடன் நடக்கின்றார். எவ்வாறு தடம்புரண்டு வருத்தமுற்று, தெளிவற்ற பாதையை நோக்கி பயணம் மேற்கொண்ட எம்மவுஸ் சீடர்களின் பயணத்தில் உயிர்த்த இயேசு துணை நடந்தாரோ அதுபோல, நமது பாதையிலும் அவர் உடன் நடக்கின்றார் என்றும் பரிசுத்த பாப்பரசர் தெரிவித்துள்ளார்.

மெரினா ராஜ் ...

# மட்டக்களப்பு புனித இஞ்ஞாசியார் ஆலய திருவிழா











புனித இஞ்ஞாசியார் மனமாற்றம் பெற்ற 500வது ஆண்டு நிறைவு விழாவினைச் சிறப்பிக்குமுகமாக மட்டக்களப்பு மறை மாவட்ட பாதுகாவலராம் புனித இஞ்ஞாசியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழா கடந்த ஞாயிற்றுக் கிழமை கொடியிறக்கத்துடன் இனிதே நிறைவு பெற்றது.

கடந்த 22 ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு பங்குத்தந்தை அருட்பணி லோறன்ஸ் லோகநாதன் அடிகளார் தலைமையில் கொடியேற்றத்துடன் திருவிழா நிகழ்வுகள் ஆரம்பமாயின.

அதனைத் தொடர்ந்து தினமும் தினமும் மாலை 5.30 மணிக்கு திருச்செபமாலையும், பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்பட்டு நவநாள் வழிபாடுகள் இடம் பெற்றன. கடந்த ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு புனிதரின் திருச்சுரூபப் பவனி வழமையான வீதிகளினூடாக வலம் வந்து மீண்டும் ஆலயத்தை வந்தடைந்ததும் நற்கருணை ஆராதனை இடம்பெற்றது. ஞாயிற்றுக் கிழமை காலை 7.00 மணிக்கு திருவிழா கூட்டுத் திருப்பலியானது அருட்பணி ரீ.சகாயநாதன் அடிகளார் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டதுடன் கொடி இறக்கப்பட்டதனைத் தொடர்ந்து ஆலய திருவிழா இனிதே நிறைவடைந்தது. நவநாட்காலங்களில் அருட்தந்தையர்களான ரீ.மரியதாஸ், ஏ.ஏ.நவரட்ணம் (நவாஜி), நிர்மல் சூசைராஜ், ரீ.ஏ.யூலியன், ஜேம்ஸ் சுரேஸ் ,ஜே.அனிஸ்ரன் மொறாயஸ், எஸ்.ஜோசப் அற்புதராஜ் (SJ), பயஸ் பிரசன்னா மற்றும் அருட்தந்தை மெருசன் ஹென்றிக் ஆகியோர் அருளுரையாளர்களாக பங்கேற்று திருப்பலியினையும் ஒப்புக்கொடுத்தனர். திருவிழா கூட்டுத்திருப்பலியில் ஆலய உதவி பங்குத்தந்தை ஜேம்ஸ் அடிகளார் உள்ளிட்ட ஆலயத்தின் முன்னால் பங்குத்தந்தையர்களும், இயேசு சபைத் துறவிகள் மற்றும் அருட்சகோதரிகள், பொது நிலையினர் கலந்துகொண்டு புனித இஞ்ஞாசியாரின் அருளாசியினை பெற்றுக்கொண்டனர்.

**(படங்கள், தகவல்: கல்லடி குறூப் நிருபர்)**

# 'பேராசைக்கு இடங்கொடாதவாறு எச்சரிக்கையாயிருங்கள்'

“எவ்வகைப் பேராசைக்கும் இடங்கொடாதவாறுஎச்சரிக்கையாயிருங்கள். மிகுதியான உடைமைகளைக் கொண்டிருப்பதால் ஒருவருக்கு வாழ்வு வந்துவிடாது.” (லூக்கா 12: 15)

ஜெர்மன் நாட்டவரான இரண்டாம் லூட்விக் என்ற மன்னரைப் பற்றிய விவரங்கள் நம் சிந்தனைகளைத் துவக்கிவைக்கின்றன. திருமணம் ஆகாமல் தனித்து வாழ்ந்த இவர் தனது 41வது வயதில் மர்மமான முறையில் மரணம் அடைந்தார்.

'கற்பனைக் கதை மன்னன்' என்றழைக்கப்படும் இவருக்கு தரப்பட்டுள்ள மற்றொரு பட்டப்பெயர் 'மதியற்ற மன்னன் லூட்விக்'

செல்வம் மிகுந்துவிட்டால் மனிதர்கள் மதியற்ற செயல்களில் ஈடுபடத் துணிகின்றனர் என்பதற்கு மன்னன் இரண்டாம் லூட்விக் ஓர் எடுத்துக்காட்டு. ஜெர்மன் நாட்டில் உள்ள ஏரியின் நடுவில் அமைந்துள்ள ஒரு சிறு தீவில் இரண்டாம் லூட்விக் ஒரு பிரமாண்டமான அரண்மனையைக் கட்ட ஆணையிட்டார்.

70 அறைகள் கொண்ட இந்த அரண்மனையின் ஒரு சில அறைகள் கட்டப்பட்டதும் 1885ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் அவர் அங்கு தங்கியிருந்தபோது யாரையும் சந்திக்கவில்லை. அவருக்கென தயாரிக்கப்பட்ட உணவு ஓர் இயந்திரத்தின் வழியாக அவரது அறைக்கு அனுப்பப்பட்டது. அவர் அங்கு தங்கியிருந்த அறைகளில் பிரமாண்டமான கண்ணாடிகள் பொருத்தப்பட்டிருந்தன.

இந்த ஏற்பாடுகளையெல்லாம் காணும்போது மனதில் ஓர் எண்ணம் எழுகின்றது. மன்னன் இரண்டாம் லூட்விக் மனிதர்கள் யாரையும் சந்திக்க விரும்பாமல் தன்னை மட்டுமே நாள் முழுவதும் பார்த்தவண்ணம் அந்த அரண்மனையில் வாழ்ந்திருக்கவேண்டும். இப்படிப்பட்ட ஒரு வாழ்வு வாழ்வதற்கு அவர் 70 அறைகள் கொண்ட ஓர் அரண்மனையைக் கட்ட விழைந்தார் என்பதை எண்ணும்போது அவர் தன் சுய அறிவுடன்தான் செயல்பட்டாரா என்ற கேள்வி எழுகிறது.

70 அறைகள் கொண்ட இந்த அரண்மனையில் 30 அறைகளே கட்டி முடிக்கப்பட்ட நேரத்தில் இவர் இறந்தார். அதன்பின்னர் இந்த அரண்மனை கட்டப்படாமலே விடப்பட்டது. தற்போது இந்த அரண்மனை சுற்றுலாப் பயணிகளுக்கு ஒரு கண்காட்சிப் பொருளாக அமைந்துள்ளது. முழுமைபெறாத அந்த அரண்மனையைச் சுற்றிவரும்போது அங்கு ஒரு மன்னன் தனிமையில் தன்னையே சுற்றிச்சுற்றி வந்தார் என்று எண்ணி அவர் மீது பரிதாபம் எழுகிறது.

மன்னன் லூட்விக் 19ம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு வினோத மனிதர். நாம் வாழும் 21ம் நூற்றாண்டிலும் இத்தகைய வினோதமான செயல்களில் ஈடுபடும் செல்வந்தர்களைச் சந்திக்கமுடிகிறது.

தான் மட்டும் தனித்து வாழ்வதற்கு 70 அறைகள் கொண்ட ஓர் அரண்மனையைக் கட்டினால் தன் வாழ்வு நிறைவடையும் என்று எண்ணிய இரண்டாம் லூட்விக் மன்னரை முன்னிறுத்தி லூக்கா நற்செய்தி 12ம் பிரிவில் இயேசு நமக்கு விடுக்கும் எச்சரிக்கை இதுதான்:

இயேசு அவர்களை நோக்கி “எவ்வகைப் பேராசைக்கும் இடங்கொடாதவாறு எச்சரிக்கையாயிருங்கள். மிகுதியான உடைமைகளைக் கொண்டிருப்பதால் ஒருவருக்கு வாழ்வு வந்துவிடாது” என்றார். (லூக்கா 12: 15)

இந்த எச்சரிக்கையை நம் உள்ளங்களில் தெளிவாகப் பதிக்க இயேசு கூறும் பொருள் நிறைந்த உவமையே 'அறிவற்ற செல்வன்' உவமை.

அருட்பணி
எல்.எஸ்.ஜெரோம்...

லூக்கா நற்செய்தியில் மட்டுமே பணத்தைப் பற்றி செல்வத்தைப்பற்றி மூன்று உவமைகளைக் காண்கிறோம். 'அறிவற்ற செல்வன் உவமை' (லூக்கா 12:1321) 'நேர்மையற்ற வீட்டுப் பொறுப்பாளர் உவமை' (லூக்கா 16:18) 'செல்வரும் இலாசரும் உவமை' (லூக்கா 16:1931) என்று இம்மூன்று உவமைகளும் செல்வத்தின் பல்வேறு விளைவுகளைச் சிந்திக்க நம்மைத் தூண்டுகின்றன.

இவற்றில் அறிவற்ற செல்வனைப் பற்றி சிந்திக்கும் நாம் இன்னும் 7 வாரங்கள் கழிந்து பொதுக்காலத்தின் 25, 26 ஆகிய இரு ஞாயிறுகளில் மற்ற இரு உவமைகளைச் சிந்திப்போம்.

இம்மூன்று உவமைகளில் இச் செல்வந்தர்களை இயேசு அறிமுகப்படுத்தும் வார்த்தைகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது சில எண்ணங்கள் உள்ளத்தில் எழுகின்றன. இதோ இம்மூன்று உவமைகளின் அறிமுக வரிகள்:

செல்வனாயிருந்த ஒருவனுடைய நிலம் நன்றாய் விளைந்தது. (லூக்கா 12: 16 )

செல்வர் ஒருவருக்கு வீட்டுப் பொறுப்பாளர் ஒருவர் இருந்தார். அவர் தம் தலைவரின் உடைமைகளைப் பாழாக்கியதாக அவர்மீது பழி சுமத்தப்பட்டது. (லூக்கா 16: 1)

செல்வர் ஒருவர் இருந்தார்... இலாசர் என்னும் பெயர் கொண்ட ஏழை ஒருவரும் இருந்தார். (லூக்கா 16: 1920 )

இம் மூன்று உவமைகளில் இச் செல்வந்தர்களை இயேசு அறிமுகப்படுத்தும் வார்த்தைகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது சில எண்ணங்கள் உள்ளத்தில் எழுகின்றன. 16ம் பிரிவில் இயேசு அறிமுகப்படுத்தும் இரு செல்வந்தர்களுடன் வீட்டுப் பொறுப்பாளர் மற்றும் ஏழை இலாசர் என்று மனித வடிவில் மற்றொரு கதாப்பாத்திரமும் அறிமுகமாகின்றார்.

ஆனால் நாம் ஞாயிறன்று சிந்திக்கும் 'அறிவற்றச் செல்வன்' உவமையிலோ வேறு மனிதர்களைப்பற்றிய குறிப்பு எதுவும் இடம் பெறவில்லை. இச்செல்வனுடன் சித்திரிக்கப் பட்டுள்ளதெல்லாம் அவரது நிலம் விளை பொருள்கள் மற்றும் களஞ்சியங்கள்.

எதார்த்தமாக சிந்தித்தால் அந்தச் செல்வனைச் சுற்றி ஒரு குடும்பம் இருந்திருக்க வேண்டும். அவரது நிலத்தில் உழைத்த உழைப்பாளிகள் இருந்திருக்க வேண்டும். இருப்பினும் வேறு எவ்வித மனித உறவும் இல்லாமல் பொருள்களால் மட்டுமே சூழப்பட்ட தனியொரு தீவாக இச்செல்வனை இயேசு சித்திரித்துள்ளார்.

இவ்வுவமையை இன்னும் ஆழமாக ஆய்வு செய்யும்போது அத்தகைய ஒரு தீவை அந்தச்செல்வன் தனக்குத் தானே உருவாக்கிக் கொண்டார் என்பதை உணரலாம்.

இந்த உவமையின் துவக்கத்தில் இயேசு பயன்படுத்தியுள்ள "செல்வனாயிருந்த ஒருவனுடைய நிலம் நன்றாய் விளைந்தது" என்ற அறிமுகச் சொற்கள் பொருள் நிறைந்தவை. நல்லதொரு விளைச்சலுக்கு பல காரணங்கள் உள்ளன. இறைவன் கருணை காட்டியது. இயற்கை பொய்க்காமல் இருந்தது. பல உழைப்பாளிகள் தங்கள் வியர்வை சிந்தி உழைத்தது என்று பல பின்னணி காரணங்கள் உள்ளன. ஆனால் இவை எதுவும் அச்செல்வனின் கவனத்தை ஈர்த்ததாகத் தெரியவில்லை. வீட்டை அடைந்த விளை பொருள்கள் மட்டுமே செல்வனின் கண்களையும் கருத்தையும் நிறைத்தன.



அறுவடைப் பொருள்கள் செல்வனின் வீடு வந்த சேர்ந்த காட்சியைச் சிறிது கற்பனை செய்துபார்ப்போம். தானிய மூட்டைகளைத் தங்கள் முதுகில் சுமந்து வந்து வீடு சேர்த்த தொழிலாளிகள் மீண்டும் நிமிர்ந்து செல்லவும் வலுவின்றி திரும்பியிருக்கக் கூடும். செல்வனின் களஞ்சியங்களை நிரப்பிய அவர்கள் தங்கள் வயிற்றை நிரப்பமுடியாமல் பட்டினியில் மயங்கி விழுந்திருக்கக்கூடும்.

இந்த ஊழியர்களின் ஊர்வலம் தன் கண்முன் நடந்ததைக் கண்டும் காண மறுத்தச் செல்வன் அவர்கள் கொண்டுவந்து சேர்த்த பொருள்களை அதாவது தானியங்களை மட்டுமே பார்க்கிறார். குவிந்துள்ள தானியங்களைப் பகிர்ந்து தருவதற்கு மறுத்து அவற்றை இன்னும் பதுக்கி வைப்பதற்கு தன் களஞ்சியங்களை இடித்து பெரிதாக்கத் திட்டமிடுகிறார்.

மனித உழைப்பால் விளைந்த தானியங்கள் மனிதர்களைவிட அதிக மதிப்பு பெறுகின்றன என்பதை இந்த உவமை வழியே நாம் உணரலாம்.

தன் சொத்துக்கு அடிமையாகி அறிவற்றுப் போன செல்வன் உவமையைச் சொன்ன இயேசு தரும் எச்சரிக்கை, அன்றுமட்டுமல்ல இன்றும் ஒலிக்கிறது. “எவ்வகைப் பேராசைக்கும் இடங்கொடாதவாறு எச்சரிக்கையாயிருங்கள். மிகுதியான உடைமைகளைக் கொண்டிருப்பதால் ஒருவருக்கு வாழ்வு வந்துவிடாது.” (லூக்கா 12: 15)

இயேசு கூறிய அத்தனை அழகான உவமைகளிலும் லூக்கா நற்செய்தி 12ம் பிரிவில் நாம் காணும் 'அறிவற்ற செல்வன்' உவமையில் மட்டுமே கடவுள் பேசுவதாகக் கூறப்பட்டுள்ளது. கடவுள் பேசும் வார்த்தைகள் ஓர் எச்சரிக்கையாக ஒலிக்கின்றன: கடவுள் அவனிடம் "அறிவிலியே இன்றிரவே உன் உயிர் உன்னைவிட்டுப் பிரிந்துவிடும். அப்பொழுது நீ சேர்த்து வைத்தவை யாருடையவையாகும்?" என்று கேட்டார் (லூக்கா 12: 20) என்று இவ்வுவமையின் இறுதியில் வாசிக்கிறோம். இறைவன் இக்கேள்வியை நம் ஒவ்வொருவரையும் நோக்கி கேட்கிறார். நாம் இவ்வுலகில் எதைச் சேர்த்துவைத்துள்ளோம்? எதை விட்டுச்செல்லப்போகிறோம்? இவ்வுலகை நிம்மதியுடன் மகிழ்வுடன் விட்டுச் செல்ல நாம் தயாராக இருக்கிறோமா? நம் பதில்களை எதிர்பார்த்து கடவுள் காத்திருக்கிறார்.

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் ஆடி மாதம் 17ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 முஹர்ரம் பிறை 03

### குறள் தரும் சிந்தனை



நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
ஒட்டாரை ஒட்டிக் கொளல்

நண்பருக்கு நல்லுதவி செய்வதைப் பார்க்கிலும் பகைவராயிருப்பவரைத் தம்முடன் பொருந்துமாறு சேர்த்துக் கொள்ளுதல் விரைந்து செய்யத் தக்கதாகும்

# எரிபொருளுக்கான கியூவரிசை நீங்கி விடுமென்ற நம்பிக்கை

நாடெங்கும் எரிபொருள் விநியோகத்தில் விசேட QR code முறைமை நேற்று அறிமுகமாகியுள்ளது.இந்த புதிய முறைமை முதற்கட்டமாக முதன் முதலில் 937 எரிபொருள் நிலையங்களில் நேற்று அறிமுகமாகியுள்ளது. ஏனைய எரிபொருள் நிரப்பு நிலையங்களில் QR code system விரைவில் அறிமுகமாகி விடுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதுமுள்ள அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் இந்த புதிய முறையை நடைமுறைப்படுத்தப்படுமிடத்து எரிபொருள் விநியோகத்தில் தற்போது நிலவுகின்ற நெருக்கடிகள், குழப்பங்கள் அனைத்துமே நீங்கி விடுமென்பதுதான் பொதுவான நம்பிக்கையாய் இருக்கின்றது. அதுவரை வாகனச் சொந்தக்காரர்கள் பொறுமை காக்க வேண்டியது அவசியமாகும்.

எமது நாடு கடந்த சில மாதங்களாக கடுமையான பொருளாதார நெருக்கடியினால் திண்டாடிக் கொண்டிருக்கின்றது. அத்தியாவசிய பாவனைப் பொருட்களின் விலைகள் கடுமையாக அதிகரித்து விட்டன. அன்றாட வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதற்கு மக்கள் மிகவும் சிரமப்பட வேண்டியுள்ளது. இந்நிலையில் எரிபொருள் விலையேற்றமும், அதன் கடுமையான தட்டுப்பாடுமே நாட்டு மக்களை கடுமையான நெருக்கடிக்கு உள்ளாக்கியுள்ளன.

மின்சார உற்பத்தி, விவசாயம், போக்குவரத்து மற்றும் பல்வேறு தொழில்துறைகளுக்கும் எரிபொருளே தேவையாக உள்ளது. எரிபொருள் இல்லாவிடில் அனைத்துமே ஸ்தம்பிதமாகி விடுகின்றன. நாட்டில் கடந்த சில மாதங்களாக எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மக்கள் அனுபவித்து வருகின்ற துன்பங்கள் விபரிக்க முடியாதவையாகும்.

நாட்டின் எரிபொருள் நிலையங்கள் அனைத்திலும் வாகனங்களின் நீண்ட கியூவரிசை இன்னுமே முடிவுக்கு வரவில்லை. எரிபொருள் பற்றாக்குறையைப் பொறுத்தவரை வியப்பான விடயமொன்றும் உள்ளது. நாட்டுக்கு எத்தனை எரிபொருள் கப்பல்கள் வந்து சேர்கின்ற போதிலும் எரிபொருள் நிலையங்களில் கியூவரிசையையே காண முடிகின்றது. எரிபொருள் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்ற எரிபொருட்கள் அனைத்துமே மக்களுக்கு விநியோகிக்கப்படுகின்ற போதிலும், தட்டுப்பாடு முடிவுக்கு வருவதாக இல்லை. இதுதான் வியப்பு ஆகும்.

பெற்றோல் தட்டுப்பாட்டைப் பொறுத்தவரை மக்களினால் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. இன்றைய எரிபொருள் தட்டுப்பாட்டை தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்தியபடி பெற்றோல் வியாபாரத்தில் பலர் ஈடுபடத் தொடங்கியுள்ளனர். அவர்கள் எரிபொருள் நிலையங்களுக்கு மீண்டும் மீண்டும் வந்து பெற்றோலைப் பெற்றுக் கொண்டு கறுப்புச் சந்தையில் அதிக விலைக்கு விற்பனை செய்கின்றனர். அவர்கள் பெருமளவு பெற்றோலைப் பதுக்கி வைப்பதாலேயே பெற்றோல் தட்டுப்பாடு முடிவின்றித் தொடர்வதாக மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

கறுப்புச் சந்தையில் ஒரு லீற்றர் பெற்றோல் இரண்டாயிரம் ரூபாவிலிருந்து மூவாயிரம் ரூபா வரை விற்பனை செய்யப்படுவதாக உறுதியான தகவல்கள் வெளிவருகின்றன. அவசரத் தேவையின் நிமித்தம் எத்தனை ரூபா கொடுத்தும் பெற்றோலை வாங்குவதற்குத் தயாராக இருப்போருக்கு வேறு வழியே கிடையாது. அவ்வாறானவர்களை இலக்கு வைத்தே பெற்றோல் வியாபாரம் களைகட்டியுள்ளது. பெற்றோல் விற்பனையில் ஈடுபடுபவர்கள் குறிப்பிட்ட வகை வாகனங்களை வைத்திருப்பவர்களாவர் என்றும் தகவல்கள் வெளிவருகின்றன. பெற்றோல் பதுக்கலும், கறுப்புச் சந்தை வியாபாரமும் ஒழிக்கப்படும்வரை பெற்றோல் தட்டுப்பாடும் நின்றுவிடப் போவதில்லை என்று மக்கள் புகாரிட்டதையும் காண முடிந்தது.

கறுப்புச் சந்தை வியாபாரம் முடிவுக்கு வருவது எப்போது? என்று மக்கள் ஏங்கிக் கொண்டிருந்ததையும் காண முடிந்தது. இவ்வாறானதொரு நிலைமையிலேயே தற்போது QR code system அறிமுகமாகியுள்ளது. இனிமேலாவது எரிபொருள் விநியோக நெருக்கடி முடிவுக்கு வந்து விடுமென்பதுதான் மக்களின் நம்பிக்கையாக இருக்கின்றது. அதாவது வாகனமொன்றுக்கு குறித்த தொகை எரிபொருளை வாரத்தில் ஒரு தடவை மாத்திரமே பெற்றுக் கொள்ள முடியும். அடிக்கடி எரிபொருள் நிலையத்துக்குச் சென்று எரிபொருளைப் பெற்றுக் கொள்ள முடியாது. எனவே கறுப்புச் சந்தை வியாபாரத்தையும் நடத்த இனிமேல் வழியில்லாமல் போய் விடும்.

ஒரு லீற்றர் எரிபொருளை இரண்டாயிரம் ரூபாவுக்கும் மேல் விலை கொடுத்து வாங்குவதென்பது மிகவும் கொடுமையாகும். நெருக்கடியான சந்தர்ப்பத்தை எவ்வாறெல்லாம் பலர் பயன்படுத்திக் கொள்கின்றனரென்பதை இதன் போது புரிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. இவ்வாறான கறுப்புச் சந்தை வியாபாரிகளுக்கு QR code system இனிமேல் தடை போடத்தான் போகின்றது. எரிபொருள் பதுக்கல் நின்று விடுமானால், எரிபொருள் நிலையங்களில் நீண்ட கியூவரிசையும் படிப்படியாக குறைந்து சென்று விடும்.

QR code முறைமையை கறுப்புச் சந்தை வியாபாரத்தில் ஈடுபடுவோர் ஒருபோதுமே விரும்பப் போவதில்லை என்பது மட்டும் நிட்சயம். ஆனால் அவர்களின் முறைகேடான வியாபாரத்துக்காக QR code முறைமமை ஒருபோதுமே கைவிட்டு விடக் கூடாதென்பதே மக்களின் வேண்டுகோளாகும்.

editor.tkn@lakehouse.lk

# இறைபக்தியையும், உள்ளத் தூய்மையையும் பக்தர்களுக்கு வழங்கும் கதிர்காமம் யாத்திரை



வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கதிர்காமக் கந்தன் ஆலய ஆடிவேல் திருவிழா எதிர்வரும் 12ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவுள்ளது. கதிர்காமம் தலத்திற்கு அடியார்கள் காட்டு வழியாக பாதயாத்திரை செல்வது பன்னெடுங்காலமாக இடம்பெற்று வருகின்றது.

உகந்தமலை தலத்திலிருந்து கதிர்காமத்திற்குச் செல்லும் காட்டுப்பாதை கடந்த ஜுலை மாதம் 22 ஆம் திகதி திறக்கப்பட்டிருந்தது. உகந்தைமலையிலிருந்து கதிர்காமம் வரை 56 மைல்கள் தூரம் ஆகும். உகந்தமலை முருகன் ஆலயத்தில் இருந்து ஆரம்பமான பாதயாத்திரை தற்போது கதிர்காமத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. முதலாவதாக வாகூரவெட்டை என்னுமிடத்துக்குச் சென்றதையடுத்து அங்கு வண்ணாத்திக்கிணறு என்ற பழைய கிணறு உள்ளது. இங்கு இரவு வேளையில் பஜனை, பக்திப் பாடல்கள்பக்தர்களால் இசைக்கப்படுகின்றன. மறுநாள் காலையில் அவ்விடத்தில் கற்பூரமெரித்து தேவாரம்பாடி தமது பயணத்தை ஆரம்பிக்கின்றனர்.

அதனைத் தொடர்ந்து குமுக்கன் ஆறு, குமுனையை அடைகின்றனர். அங்கு ஒரு நாள் அல்லது இரண்டு நாள் தங்குவார்கள். அங்கு ஒரு அம்மன் கோயில் உள்ளது. கோயிலுள்ள அம்மனை 'கவளத்தம்மா' என்று அழைப்பார்கள். அந்த வழியால் செல்பவர்கள் தாம் உண்ணும் உணவில் ஒரு 'கவளம்' உணவை அந்த அம்மனுக்கு படைப்பதால் 'கவளத்தம்மா' எனப் பெயர் வந்தது. அங்கு ஆலயத்தின் பின்புறமாக ஒரு பெரிய மரம் நிற்கின்றது. அவற்றில் கொத்துகளை கட்டி வழிபடுவார்கள்.

அடியார்கள் மோதகம், அவல், கடலை, பொங்கல் படைத்து பூசை செய்து வழிபட்டு பின்னர் கற்பூரம் எரித்து தேவாரம் பாடி குமுக்கன் ஆற்றை கடந்து சென்று நாவலடியை அடைகின்றனர்.

நாவலடியிலே ரொட்டி சுட்டு வைரவரை வழிபாடு செய்வதுடன், நாகதம்பிரானுக்கும் பொங்கல் பொங்கிப் படைத்து வழிபட்டு காலையில் தமது இடத்தில் கற்பூரம் எரித்து தேவாரம் பாடி பயணத்தை ஆரம்பிக்கின்றனர்.

தொடர்ந்து நீண்ட பயணம் தொடரும். இதனால் தொலையாப்பளை வட்டை என்று அந்த இடத்துக்கு பெயர் வழங்கப்படுகின்றது. இவ்வெளி கழிந்தவுடன் 'வியாள' யால என்று சொல்லப்படுகின்ற இடத்தினை வந்தடைகின்றனர். இங்கு இரண்டு அல்லது மூன்று நாட்கள் தங்கியிருப்பார்கள். இங்கு தங்குபவர்கள் பாரம்பரியமாக மரத்தினால் வேல் செய்து அதனை ஆற்றில் நீராட்டி ஆற்றோரம் பந்தலமைத்து அங்கு அவ்வேலை எடுத்து வந்து வைத்து அவல், மோதகம், பொங்கல் படைத்து பஜனை செய்து வழிபட்டு இரவுப் பொழுதை கழிப்பர். காலையில் தமது இடத்தில் கற்பூரம் எரித்து பயணத்தினை ஆரம்பிக்கின்றனர்.

தொடர்ந்து வள்ளியம்மன் ஆறுபாலம் எனும் இடத்தை அடைந்து சற்று இளைப்பாறிய பின்னர், கதிரமலை கண்ட இடத்தை அடைந்து அங்கு இருக்கின்ற வேலை வழிபட்டு பின்பு கட்டகாமத்தை வந்தடைகின்றனர். இங்கு யானைகள் மிகுந்த இடம் இருப்பினும் கதிர்காமக்கந்தனின் பெருவருழினால் பக்தர்களுக்கு மனத்தைரியம் கிடைத்து விடுகின்றது. சிலர் மதியம் உணவு உண்டு விட்டு தொடர்ந்து செல்வார்கள். இவ்வாறு நடந்து சென்று பின்னர் வீரச்சோலை அல்லது பிள்ளையாரடி எனும் இடத்தினை அடைந்து இரவு தங்குவர். மறுநாள் காலையில் தமது இடத்தில் கற்பூரம் எரித்து தேவாரம் பாடி பயணத்தினை தொடர்கின்றனர். செல்லுகின்ற போது அரோகரா அரோகரா என்ற கோசத்துடன் காவடிச்சிந்து பாடிச் செல்வர். அவர்கள் பக்திப்பரவசத்தோடு கதிர்காமத்தினை அடைகின்றனர். அங்கு சென்றதும் மாணிக்கக்கங்கையில் நீராடி மாணிக்கப்பிள்ளையாரையும் கதிர்காமக் கந்தனையும் வழிபாடு செய்து, ஏனைய கோயில்களை வழிபாடு செய்வர். மறுநாள் கதிரமலை, செல்லக்கதிர்காமம் சென்று வழிபடுகின்றனர்.

இத்தகைய சிறப்புமிக்க பாதையாத்திரையின் மகிமைகளும் அனுபவச் சிறப்புக்களும் ஏராளம் ஆகும். அதிகமான பக்தர்களின் புதிய அறிமுகம், ஒன்றாக இருந்து உணவு சமைத்து உண்ணல், ஒருவருக்கொருவர் உதவி செய்யும் மனப்பாங்கு, உடல் சுகாதாரம், ஒற்றுமை சமத்துவம், பஜனை, கூட்டுப் பிரார்த்தனைகள்என்பவை கதிர்காமம் யாத்திரையில் கிடைக்கும் சிறப்பான அனுபவங்களாகும். மேலும் காடுகள், குளங்கள், ஆறுகள், களப்புக்கள், வெளி, மலை, மணல், சேறு, தென்றல், குளிர்காற்று, கச்சான் காற்று, மழை, சுட்டெரிக்கும் வெயில், பனி என பல அனுபவங்களை அனுபவித்தே இத்தகைய பாதயாத்திரையை மேற்கொண்டு அடியார்கள் கதிர்காமக்கந்தன் சன்னிதானத்தை அடைந்து திருவருள் பெறுகின்றனர்.



நாராயணபிள்ளை நாகேந்திரன்
(ஓய்வு நிலை அதிபர்) களுவாஞ்சிக்குடி

# அட்டாளைச்சேனையில் வீட்டுத் தோட்ட செய்கையை ஊக்குவிக்கும் திட்டம்

நாட்டில் ஏற்பட்டுள்ள உணவுத் தட்டுப்பாடு மற்றும் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் தொலஸ் மகே பஹன வேலைத்திட்டம்_ 2022 இன் கீழ் வீட்டுத்தோட்ட பயிர்ச் செய்கையினை ஊக்குவிக்கும் செயற்திட்டம் தற்பொழுது அம்பாறை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.



நாட்டில் தற்பொழுது ஏற்பட்டுள்ள உணவுப் பொருட்களின் விலையெற்றம் அதேபோன்று எதிர்கால அபாய நிலை, மற்றும் உணவுப்பஞ்சம் போன்ற விடயங்களை கருத்தில் கொண்டு மக்கள் தங்களது பொருளாதாரத்தினை தாமாகவே முன்னேற்றுவதற்கான ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களை வழங்குவதுடன் , வீட்டுத் தோட்டப் பயிர்ச்செய்கையினை ஊக்குவிப்பதோடு ஒவ்வொரு வீடுகளிலும் இத்திட்டத்தினை செய்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்திற்கு அமைவாக அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கலைஞர்கள், கலைமன்றங்களின் உறுப்பினர்களுக்கு வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கையினை ஊக்குவிக்கும் செயலமர்வும் பயிர்ச் செய்கைக்கான விதை நாற்றுக்கள் அடங்கிய பொதிகள் மற்றும் பயிர்க் கன்றுகளை வழங்கி வைக்கும் நிகழ்வும் அட்டாளைச் சேனை பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றன. நிகழ்வில் கலந்து கொண்ட பயணாளிகளுக்கு வீட்டுத்தோட்டம் செய்தல் மற்றும் பராமரிப்பு தங்களது பொருளாதாரத்தை விருத்தி செய்தல் தொடர்பாக துறை சார்ந்த உத்தியோகத்தர்களினால் விளக்கமளிக்கப்பட்டது. அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அகமட் சாபிர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ரீ.எம்.றின்சான், அட்டாளைச்சேனை பிரதேச செயலக சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஐ.ஏ.ஹமீட், விவசாய போதனாசிரியர்களான எம்.எச்.எம்.அப்துள்ளா, ஏ.எச்.ஏ.முபாறக், அட்டாளைச் சேனை பிரதேச கலாசார உத்தியோகத்தர் எம்.பற்பராசா, கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.சித்தி றஜாயி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

ஐ.ஏ.ஸிறாஜ்
(பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்)

# நல்லைக் கந்தன் உற்சவ காலத்தில் தெய்வீக திருக்கூட்ட தொடர் நிகழ்வு

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தால், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்திலே, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாடு மற்றும் அனுசரணையோடும், அகில இலங்கை இந்து மாமன்றத்தின் இணை அனுசரணையோடும் முன்னெடுக்கப்பட்டு வரும் தெய்வீகத் திருக்கூட்டத் தொடர் நிகழ்வு, நல்லைக் கந்தன் உற்சவப் பெருவிழாக் காலத்தினை முன்னிட்டு சிறப்பு நிகழ்வுகள் பலவற்றைக் கொண்டதாக அரங்கேறவுள்ளது.

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் 'ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் ஆண்டு' எனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள இவ்வாண்டிலே நாவலர் பெருமான் பற்றிய சொற்பொழிவு நிகழ்வுகள், கலை நிகழ்வுகள், இந்து சமய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் நிகழ்வுகள் எனப் பலதரப்பட்ட நிகழ்வுகள் கல்விமான்களின் தலைமையில் தெய்வீகத் திருக்கூட்டத் தொடர் நிகழ்வாக அரங்கேறவுள்ளன. இத்தெய்வீகத் திருக்கூட்டத் தொடர் நிகழ்வு உற்சவ காலங்களில் மாலை ஐந்து மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. இப் பயனுள்ள நிகழ்வில் பங்குபற்றிப் பயன் பெறுமாறு அனைவரையும் அன்போடு அழைத்து நிற்கிறார்கள் விழா ஏற்பாட்டுக் குழுவினர்.

**விழா ஏற்பாட்டுக் குழு**

நல்லூர் உற்சவ காலத்தினை முன்னிட்ட தெய்வீகத் திருக்கூட்டச் சிறப்புத் தொடர் நிகழ்வின் முதல் நாள் வைபவம் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணிக்கு, நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்திலே, நல்லை ஆதீன முதல்வர் வணக்கத்திற்குரிய ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகளும் அமெரிக்கா, ஹாவாய் சைவ ஆதீனக் குருதேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளின் சீடர், வணக்கத்திற்குரிய ஆன்மிகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளும் திருமுன்னிலை வகிக்க, யாழ்.பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீடத்தின், இந்துநாகரிகத் துறைத்தலைவர், கலாநிதி த.முகுந்தன் தலைமையில் ஆரம்பமாகவுள்ளது.

நல்லூர் பிரதேச செயலர் பிரிவின் சைவச் சிறுவர் இல்ல அறநெறிப் பாடசாலை நிர்வாகத்தின் ஏற்பாட்டில், அறநெறிப் பாடசாலை மாணவர்களின் நிகழ்வுகள் அரங்கேறவுள்ளன. 'நாவலர் பெருமான் நம் வாழ்விலுக்கான வழிகாட்டி' என்னும் தலைப்பில் இளஞ்சைவப்புலவர் நித்தியபாபுதரனின் சிறப்புச் சொற்பொழிவும், நுண்கலைமாணி நிரஞ்சலா சுந்தரலிங்கத்தின் மாணவர்களின் வயலினிசைக் கச்சேரி நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

அ.கனகசூரியர்

# இலங்கையின் நெருக்கடி வேளையில் வருகை தரவிருக்கும் சீனஉளவுக் கப்பல்!



எதிர்வரும் 11 ஆம் திகதி இலங்கையை வந்தடைய இருக்கும் யுவாங்வேங் 5 (Yuan Wang 5) என்ற சீன உளவுக்கப்பல் தொடர்பான சர்ச்சை சூடுபிடித்திருக்கிறது. இந்தியா மற்றும் சீனாவை உள்ளடக்கிய புவிசார், பிராந்திய அரசியலில் இந்த விவகாரம் ஒருவித பதற்றத்தை ஏற்பட்டுத்தியிருக்கிறது.

பொருளாதார, அரசியல்நெருக்கடியிலும், பெரும் கொந்தளிப்பிலும் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கும் இலங்கைக்கு மற்றுமொரு தலைவலியையும், இந்தக் கப்பல் விவகாரம் கொண்டு வந்து சேர்த்திருக்கிறது.

ஹம்பாந்தோட்டைக்கு வரும் சீனக்கப்பல் தொடர்பில் இந்தியா தனது கடும் ஆட்சேபனைகளை இலங்கைக்கு முன்வைத்துள்ளது. இந்தக் கப்பலின் வருகைக்கு கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்தினால் அனுமதி வழங்கப்பட்டதாக தற்போதைய அரசாங்கம் இந்தியத் தரப்பிற்கு அறிவித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

சுதந்திரத்திற்கு பின்னரான ஏழு தசாப்தங்களில் இலங்கை மிகமோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ள இந்த வேளையில், இந்தியா சுமார் 4 பில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு உதவியாக வழங்கியிருக்கிறது.

இந்த இக்கட்டான சந்தர்ப்பத்திலேயே சீன உளவுக்கப்பல் பிரச்சினை உருவாகி அரசாங்கத்திற்கு சிரமத்தை ஏற்படுத்தியுள்ளது. ஒருபுறம் சீனாவையும், மறுபுறம் இந்தியாவையும் சமாளிக்க வேண்டிய இக்கட்டான நிலைக்கு இலங்கை தள்ளப்பட்டிருக்கிறது.

இந்தக் கப்பல் விவகாரமானது இந்தியாவும் சீனாவும் மட்டும் மோதிக் கொள்கின்ற ஒரு பிராந்திய அரசியல் விவாகாரமாக மட்டும் பார்க்கப்படக் கூடாது. மாறாக, இலங்கையின் அரசியல், பொருளாதார பிரச்சினையின் முக்கிய அம்சமாகப் பார்க்கப்பட வேண்டும்.

இலங்கையில் பொருளாதாரம் இன்று நலிவுற்றுள்ளது. பொருளாதார நெருக்கடியை சமாளிக்க இந்தியா வழங்கியுள்ள உதவிகளும், சர்வதேச நாணயநிதியம் சீனாவின் கடன் தொடர்பாக வழங்கியுள்ள கடன்மீள்கட்டமைப்பு தொடர்பான வலியுறுத்தல்களும் இலங்கையை நெருக்கடியில் தள்ளியுள்ளன.

## தனது பாதுகாப்பு குறித்து சிந்திக்க வேண்டிய நிலையில் இந்தியா!

சீனாவின் கடன் மீளாய்வின் பிறகே சர்வதேச நாணயநிதியத்தின் உதவி இலங்கைக்கு கிடைக்கும் வாய்ப்பு இருக்கிறது. இந்தப் பின்னணியிலேயே சீனா தனது புவிசார் மற்றும் பிராந்திய அரசியலின் காயை மெதுவாக நகர்த்தியிருக்கிறது. சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை பெறுவதற்கு சீனாவின் கடன்மீளாய்வு முடிவு இலங்கைக்குஅவசியமானது. சீனாவை பகைத்துக் கொள்ள முடியாத திண்டாட்டத்தில் இலங்கை இருக்கிறது. இதேவேளை இந்தியாவுடனான உறவும் இலங்கைக்கு இன்றியமையாதது. இந்தியாவுடனான உறவில் விரிசல் ஏற்படுவதை ஒருபோதும் விரும்பாத நிலையில், பிராந்திய அரசியலில் ஏற்பட்டுள்ள இந்த அழுத்தத்தைத் தீர்ப்பதற்கு இன்றைய அரசாங்கம் முழுமுயற்சியை மேற்கொண்டு வருகிறது.

இருந்தபோதும், இந்தியாவை சமாளிப்பதில் இலங்கை இதுவரை எந்த முன்னேற்றத்தையும் அடையவில்லையென்றே அறியவருகிறது.

இந்தியாவின் வெளிவிவகார அமைச்சின் செய்தித் தொடர்பாளர் அரிந்தம்பக்சியிடம் இந்த சீனக்கப்பலின் இலங்கை வருகை பற்றி ஊடகங்கள் வினவிய போது, “ஓகஸ்ட் மாதம் துறைமுகத்திற்கு இந்தக் கப்பலின் உத்தேச விஜயம் பற்றியஅறிக்கைகள் எங்களுக்குத் தெரியவரும். இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் பொருளாதார நலன்களில் தாக்கத்தை ஏற்படுத்தும் எந்தவொரு வளர்ச்சியையும் அரசாங்கம் கவனமாகக் கண்காணித்து, அவற்றைப் பாதுகாக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கிறது என்பதை மட்டும் கூறுகிறேன். இது ஒரு தெளிவான செய்தியாக இருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன்” என்ற பதிலை அவர் முன்வைத்தார்.

இலங்கையில் கொந்தளிப்பான, அமைதியற்ற சூழ்நிலையில் நிலவும் போது சீனா ஏன் தனது உளவுக்கப்பலை இலங்கைக்கு அனுப்ப வேண்டும்? என்ற கேள்வியை தற்போது இந்திய ஊடகங்கள் எழுப்பி வருகின்றன.

சீனாவின் இந்த உளவுகப்பலால் நடாத்தப்படவிருக்கும் வேவுபார்க்கும் வேலைகள், இந்தியாவின் பாதுகாப்பிற்கு மிகுந்த அச்சுறுத்தலாக இருக்கும் என இந்திய பாதுகாப்பு நிபுணர்கள் எச்சரித்து வருவதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுவருகின்றன.

சீனாவின் யுவாங்வேங் 5 உளவுக்கப்பல் ஓகஸ்ட் 17 ஆம் திகதி ஹம்பாந்தோட்டை துறைமுகத்திலிருந்து சீனா திரும்பும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தக் கப்பல் வட மேற்கு இந்தியப் பெருங்கடல் பகுதியில் செயற்கைக்கோள் கட்டுப்பாடு மற்றும் ஆராய்ச்சி கண்காணிப்பை மேற்கொள்ளும் என்று இலங்கையில் உள்ள சீனாவின் 'ஒருபட்டி ஒருபாதை'என்ற (Belt and Road Initiative) திட்டத்தின் அதிகாரி தெரிவித்துள்ளார்.

# கிழக்கின் குரல்



# இளைஞர்களை உசுப்பேற்றி தமிழ் பிரதிநிதித்துவத்தை தோற்கடித்த தலைவர்கள் விலாசமிழந்து வாழ்கின்றனர்

**காரைதீவு குறூப் நிருபர்**

பாராளுமன்றத் தேர்தலின்போது, அம்பாறை மாவட்ட இளைஞர்களை உசுப்பேற்றி, தமிழர் பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்த தலைவர்கள் எங்கே? நாட்டிலா? வெளிநாட்டிலா? விலாசமே தெரியாமல் வாழும் இவர்களை இன்னும் நம்புவதா?என, தமிழ் தேசிய கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் கேள்வி எழுப்பினார்.

"பொருளாதார நெருக்கடியும் சமகால அரசியலும் "எனும் கருப்பொருளில்,மக்களை தெளிவுபடுத்தும் கலந்துரையாடலில் உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

இவ்வாறான, கலந்துரையாடல்களை வடக்கு, கிழக்கு உட்பட பல இடங்களில், தமிழ் தேசிய கூட்டமைப்பு நடாத்தி வருகிறது.



இதற்கமைய காரைதீவில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (31) நடந்த கலந்துரையாடலில் மேலும் உரையாற்றி கலையரசன் எம்,பி, நாட்டில் தற்போது அரசியல் ரீதியான குழப்பங்கள் இடம்பெற்ற வண்ணமே உள்ளன. அண்மையில், பாராளுமன்றத்தினூடாக புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டார். இவ்விடயத்தில் எங்களது மக்களின் கருத்துக்களையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். நல்லாட்சி அரசுக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு முட்டு கொடுத்து, எதை சாதித்தது.?என வினவுகின்றனர். ஆனால், நல்லாட்சி அரசாங்கத்தின் கதாநாயகர்கள் யார் என்பதை மக்கள் அறிவார்கள்.இந்த நாட்டில் மூன்று இனங்கள் வாழக்கின்றன. எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஜனநாயக வழியிலே, தமிழ் தேசிய கூட்டமைப்பு பயணிப்பதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் கலையரசன் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில், தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன், இராசமாணிக்கம் சாணக்கியன் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர்.

# மீனவர் கட்டடம் இடிந்து கடலுக்குள் மூழ்கியது



**அம்பாறை மாவட்ட குறூப் நிருபர்**

அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பிரதேசத்தில் பிரிவு09 ல் அமைந்துள்ள மீனவர் கட்டடம் மற்றும் அதனோடு இணைந்ததான வாசிகசாலை என்பன, கடல் அரிப்பால் இடிந்து முற்றாக கடலுக்குள் மூழ்கியுள்ளது.

இந்த பிரதேசமானது கடந்த சில மாதங்களாக பாரிய கடல் அரிப்புக்குள்ளாகி வருகிறது. இதுதொடர்பாக இப்பிரதேச பொதுமக்கள் பலருக்கும் தெரியப்படுத்தி உரிய தீர்வை கோரியிருந்தனர்.

ஆனாலும் குறித்த இந்தகடல் அரிப்பைத்தடுப்பதற்காக இதுவரையில் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இதனாலேயே, இக்கட்டடம் விழுந்து கடலுக்குள் மூழ்கியதாக பிரதேசவாசிகள் தெரிவித்தனர். மேலும், இப்பிரதேச மீனவர்களின் வாடிகள் மற்றும் தென்னைத் தோட்டங்கள் முற்றாக கடல் அரிப்புக்குள்ளாகி அழிவடைவதாகவும் கவலை தெரிவிக்கப்படுகிறது.

மீன்பிடி வள்ளங்களை கரையில் பாதுகாப்பாக நிறுத்தி வைப்பதற்கும், தங்களது ஜீவனோபாய தொழிலை மேற்கொள்வதற்கும் மீனவர்களால் முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.எனவே,விரைவில் இக்கடலரிப்பை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோருகின்றனர்.



ஆடிப்பூரத்தை முன்னிட்டு மட்டக்களப்பு கொத்துக்குளம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் ஏற்பாடு செய்திருந்த வருடாந்த பாற்குடபவனி நேற்று (01) மட்டக்களப்பு நகரில் இடம்பெற்றது. மட்டக்களப்பு ஆனைப்பந்தி ஸ்ரீ சித்தி விக்னேஸ்வரர் ஆலயத்திலிருந்து நூற்றுக்கணக்கான பெண்கள் தலையில் பாற்குடமேந்தி மட்டக்களப்பு – திருமலை வீதி வழியாகச் கொத்துக்குளம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தை நோக்கிச் செல்வதைக் காணலாம். படம்: மட்டக்களப்பு விஷேட நிருபர்

# தமிழ்நாடு அரசாங்கத்தின் இரண்டாம் கட்ட நிவாரணங்கள் மட்டக்களப்பில்

**மட்டக்களப்பு குறூப் நிருபர்**



தமிழ்நாடு அரசாங்கம் வழங்கியுள்ள இரண்டாம் கட்ட நிவாரணப் பொருட்கள் நேற்று (01) மட்டக்களப்பை வந்தடைந்தது.

கொழும்பிலிருந்து புகையிரதம் மூலம் எடுத்துவரப்பட்ட இந்நிவாரணப் பொருட்கள் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரனின் வழிகாட்டல்களுக்கு அமைய, புகையிரத நிலைய அதிகாரிகளிடமிருந்து பொறுப்பேற்கப்பட்டது.

மாவட்ட செயலக அதிகாரிகள் இவற்றைப் பொறுப்பேற்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு இரண்டாம் கட்டமாக 43,825 பக்கற் அரிசி மற்றும் 11,925 பக்கற் பால்மா என்பன கிடைத்துள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும் இந்த நிவாரணப் பொருட்கள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வாழைச்சேனை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய தீர்த்தோற்சவம்

**பாசிக்குடா நிருபர்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஒன்றான புதுக்குடியிருப்பு வாழைச்சேனை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் தீர்தோற்சவம், ஆடிப்பூர தினமான நேற்று (01) பாசிக்குடா கடலில் பக்தர்களின் ஆரோகரா கோசத்துடன் இனிதே நிறைவு பெற்றது.

ஜூலை (23) கொடியேற்றத்துடன் பிரம்மோற்சவப் பெருவிழா ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்களும் கிரியை நிகழ்வுகளும் உற்சவ நிகழ்வுகளும் நடைபெற்றன.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை சப்பறத்திருவிழாவும் நடைபெற்றது.

திங்கட்கிழமை அம்பாளுக்கு விஷேட பூஜை இடம்பெற்று அம்பாள் உள்வீதி பக்தர்கள் புடைசூழ ஆலய முன்றலில் உள்ள தீ மிதிப்பு இடத்திற்கு சென்றது.

தீ மிதிக்கும் நேற்றிக் கடன் செலுத்தும் பக்தர்களுக்கு அருள் ஆசி வழங்கிய பின்னர், வாழைச்சேனை கல்குடா வீதி வழியாக ஆலயங்களை தரிசித்து ஊர்வலமாக சென்று பாசிக்குடா கடலில் வழக்கம்போல் தீர்த்தம் ஆடப்பட்டது.

ஆலயத்ததலைவர் பரராஜசேகரம் தலைமையில், திருவிழாக்கள் யாவும் நடைபெற்றன.

# ஏழைகளுக்கு இலவசமாக உணவு விநியோகம்

**மட்டக்களப்பு விஷேட நிருபர்**

பொருளாதார நெருக்கடியால் சிரமப்படும் ஏழைக் குடும்பங்களுக்கு நேற்றுமுன்தினம் (31) உணவு விநியோகம் செய்யப்பட்டது.

ஏறாவூர் சமூக அபிவிருத்தி ஒன்றியத்தினர் இதற்கான ஏற்பாடுகளைச் செய்தனர். அடையாளம் காணப்பட்ட 500 குடும்பங்களுக்கு ஒரு வேளை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில், உரையாற்றிய ஏறாவூர் சமூக அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவர் செய்யது அஹமத், தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக அதிகளவான மக்கள் தமது தொழில்களை இழந்து நாளாந்த வருமானத்தை இழந்து ஜீவனோபாயத்திற்கு வழியின்றி உள்ளனர்.தமது ஒருவேளை உணவுக்குக் கூட இவர்கள் சிரமப்படுவதை அவதானிக்க முடிகிறது. இந்நிலையில் எமது அமைப்பு கொடையாளிகளினதும், பரோபகாரிகளினதும் உதவியைக் கொண்டு சமைத்த உணவுகளை வழங்கியது என்றார்.



இந்நிகழ்வில், மேற்படி ஒன்றியத்தின் ஸ்தாபகர் எம்.எச்.எம். இஸ்ஸத், உப தலைவர் எஸ்.எம்.எம். ஹனீபா, பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் எஸ். ஏ.சி.எம் நஜிமுதீன் உட்பட இன்னும் பல சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்டு உணவுப் பொதிகளை வழங்கினர்.

# சித்திரப்போட்டியில் தேசிய ரீதியில் சாதனை

**தோப்பூர் குறூப் நிருபர்**

தொகைமதிப்பு மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களத்தால் தேசியரீதியில் நடாத்தப்பட்ட சித்திரப் போட்டியில், மூதூர் வலயத்திற்குட்பட்ட தி/மூ/மூதூர் முஸ்லிம் மகளிர் கல்லூரி சாதனை படைத்துள்ளது. இக்கல்லூரியைச் சேர்ந்த 08 மாணவிகள் தேசிய ரீதியிலான சான்றிதழ்களைப் பெற்று சாதனை படைத்துள்ளனர். இதனால், பாடசாலைக்கும் வலயத்திற்கும் பெருமை கிடைத்துள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.

1. முனீர் மிஸ்னத் றிதா (தரம் –9)
2. கபீறுல்லாஹ் அஸீமா (தரம் –9)
3. அறபாத் பாத்திமா கவ்சர் ( தரம்– 9)
4. ராஜூன் அனா ஹானீ (தரம் – 10)
5. சிராஜுதீன் பாத்திமா ஹம்தா (தரம் – 10)
6. முகம்மது புர்கான் சின்ஹா (தரம் – 11)
7. றிஸ்வி பாத்திமா சிமானா (தரம் – 13)
8. சிபாஸ் பாத்திமா சிபானா (தரம் – 13)

ஆகியோரே இப்போட்டியில் பங்குபற்றி சாதனை படைத்துள்ளனர். இம்மாணவர்களுக்கு போதிய பயிற்சிகளை வழங்கி ஒழுங்குபடுத்திய கல்லூரியின் சிரேஷ்ட ஆசிரியர் எம்.எம்.முஹம்மது அனீஸ் அனூன், முறையாக நெறிப்படுத்திய கல்லூரி முதல்வர் ஜே.எம். மாகிர் ஆகியோருக்கு கல்லூரி சமூகம் வாழ்த்து தெரிவித்துள்ளது.

# அறுவடைக்குத் தயாராகும் நெல்வயல்களை காட்டுயானைகள் சேதப்படுத்துவதாக கவலை

**ஒலுவில் விசேட நிருபர்**

அம்பாறை மாவட்டத்தில் அறுவடை செய்யப்படவுள்ள நெல் வயல்களை காட்டு யானைகள் சேதப்படுத்தி வருவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

பொத்துவில், அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை ஆகிய எல்லைப் பிரதேசங்களில் செய்கைபண்ணப்பட்ட நெற் செய்கையையே,யானைக்கூட்டம் அழித்து வருகின்றன. மாலை வேளையில் வரும் இவை, வயல்காணிகளுக்குள் இறங்கி நெற்கதிர்களை உண்டுவருகின்றன.

மேலும், ஒலுவில் அஷ்ரப் நகர், சம்புநகர், ஹிறாநகர், ஆலிம்நகர் ஆகிய பின்தங்கிய பிரதேசங்களிலும்,யானைகளின் தொல்லைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. இரவு நேரங்களில் கிராமங்களுக்குள் உட்புகும் யானைகள் வீட்டுத் தோட்டங்களையும், சேனைப் பயிர்களையும் சேதப்படுத்துவதால், விவசாயிகள் பொருளாதார ரீதியாக பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இரவு நேரங்களில் மின்சாரம் தடைப்படுவதால் எல்லைக் கிராமங்களில், வாழும் மக்கள் அச்சம் காரணமாக மாலை நேரங்களில் வீடுகளைவிட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்குச் செல்கின்றனர். இவ்வாறு மாலையில் வெளியேறுவது, காலையில் வீடு வருவதுமாக குடும்பங்கள் அலைக்கழிவதால், பாடசாலை மாணவர்கள், பெண்கள், சிறுவர்கள், நோயாளர்கள் போன்றோர் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, அம்பாறை மாவட்டத்தில் அதிகரித்துக் காணப்படும் காட்டு யானைகளின் தொல்லையை கட்டுப்படுத்துவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மாரடைப்பால் குவைத்தில் மரணம்

**கந்தளாய் தினகரன் நிருபர்**

திருகோணமலை மாவட்டத்தின் முள்ளிப்பொத்தானை பிரதேசத்தைச்சேர்ந்த முஹம்மது யாசீன் நயீம் வயது(48) கடந்த ஞாயிற்றுக்கிழமை (31) குவைத்தில் காலமானார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான இவர், மாரடைப்பால் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

சடலம் குவைத் வைத்தியசாலை ஒன்றில் வைக்கப்பட்டுள்ளதுடன் அடக்கம் தொடர்பாக பின்னர் அறிவிக்கப்படும் என உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

# மட்டக்களப்பில் நேற்று முதல் கிவ், ஆர் முறையில் எரிபொருள் விநியோகம்

**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**

நாடு முழுவதும் பின்பற்றப்படும் கிவ்,ஆர் நடைமுறையின் பிரகாரம் மட்டக்களப்பு மாவட்டத்திலும் எரிபொருட்கள் விநியோகிக்கப்பட்டன.நேற்று (01) திங்கட்கிழமை முதல் இந்நடைமுறை அமுலுக்கு வந்துள்ளது.

நாட்டிலுள்ள மொத்த எரிபொருள் நிலையங்களில் 95 வீதமானவை கிவ்,ஆர் முறையை பின்பற்றுவதாகவும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்திலும் கிவ், ஆர், குறியீட்டு முறையை பின்பற்றி எரிபொருள் வழங்கப்பட்டது.

இதன்போது, சுகாதார முறைப்படி முகக்கவசம் அணிந்து வருகை தந்தவர்களுக்கே எரிபொருள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனை பிராந்தியத்தில் டெங்கு பெருகும் அபாயம்

**பாண்டிருப்பு தினகரன் நிருபர்**

கல்முனை வடக்கு பிராந்திய சுகாதாரப்பணிமனைக்குட்பட்ட கிராமங்களில் டெங்கு நுளம்புகள் பெருகும் அபாயம் இருப்பதால், பொதுமக்கள் தங்கள் சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்திருக்குமாறு கல்முனை வடக்கு பிராந்திய சுகாதாரப்பணிமனை கோரிக்கை விடுத்துள்ளது.

கல்முனை பிரதேசத்தில் தற்போது இடைக்கிடையே மழையுடன் கூடிய காலநிலை நிலவுகின்றது. இதனால், பிரதேசத்தில் டெங்கு நுளம்பு பெருகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.கல்முனை, பாண்டிருப்பு, பெரியநீலாவணை, சேனைக்குடியிருப்பு, துறைவந்தியமேடு, நற்பிட்டிமுனை, மணல்சேனை ஆகிய கிராமங்களிலே நுளம்பு பெருகும் இடங்கள் அடையாளங் காணப்பட்டுள்ளன. இதனை ஒழிக்கும் செயற்பாட்டில் பிரதேச பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கர்கள் மற்றும் டெங்கு ஒழிப்பு கட்டுப்பாட்டு செயலணியினர் ஈடுபட்டுள்ளனர்.

வீடு, வீடாகச்சென்று டெங்கு நுளம்பு பெருகும் இடங்கள் இனங்காணப்பட்டுவருவதுடன் சுற்றப்புறத்தை தூய்மையாக வைத்திருகாதோருக்கு எதிராக சட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட்டுவருகின்றன.

மேலும் பாடசாலைகள், அரச அலுவலகங்கள், தனியார் கல்வி நிலையங்கள்,பொதுஇடங்கள் ஆகியவற்றையும் தூய்மையாக வைத்திருக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

# டீசலை மறைத்து வைத்து அதிக விலைக்கு விற்க முயன்றோர் கைது

**கந்தளாய் தினகரன் நிருபர்**

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், 783 லீட்டர் டீசலுடன் இருவரை நேற்றிரவு (31) கைது செய்ததாக கந்தளாய் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கந்தளாய், வென்ராசன்புர பகுதியைச்சேர்ந்த இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அதிக விலைக்கு விற்பனை செய்வதற்காக இரண்டு பரல்களில் டீசலை மறைத்து வைத்திருந்த நிலையிலே இச்சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடமிருந்து 783 லிற்றர் டீசலை கைப்பற்றியதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கந்தளாய் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலைத் தொடர்ந்து இந்நடவடிக்கை எடுக்கப்பட்டது.


தடுத்து வைத்து விசாரிக்கப்படும் இக்கைதிகள்,கந்தளாய் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட உள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.




# மத்திய மலைநாட்டில் கன மழை; மண்சரிவு, வெள்ளத்தால் பாதிப்பு







## நீரில் அடித்துச் செல்லப்பட்டு சிறுமி உட்பட மூவர் பலி





**ஹற்றன் விசேட, தலவாக்கலை குறூப், கினிகத்தேனை தினகரன், மஸ்கெலியா தினகரன் நிருபர்கள்**

நுவரெலியா மாவட்டத்தில் நேற்று (01) பெய்த கன மழையினால் மூவர் உயிரிழந்துள்ளதாகவும், மண்சரிவு மற்றும் பாறைகள் சரிந்து வீதிகளில் விழுந்தமையால் பல வீதிகள் மூடப்பட்டுள்ளதாக நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரஞ்சித் அழககோன் தெரிவித்தார்.

அம்பகமுவ, பொல்பிட்டிய பிரதேசத்தில் நீரில் அடித்துச் செல்லப்பட்டதில் 61 வயதுடைய பெண் உட்பட 05 வயது முன்பள்ளிச் சிறுமியுடன் மூவர் உயிரிழந்துள்ளனர். மேலும் மண்சரிவினால் ஹற்றன், கொழும்பு வீதியில் கினிகத்தேனதியகல பகுதியிலும் பாரிய மண்சரிவு இடம்பெற்றுள்ளது. அதேவேளை தியகல பகுதியிலிருந்து கொத்மலை ஊடாக கம்பளை வீதி,மொரப்பே கோவிலுக்கு அண்மித்த பகுதியும் மூடப்பட்டுள்ளது. நுவரெலியா மாவட்டத்தில் பெய்துவரும் கடும் மழை மற்றும் பலத்த காற்றினால் வட்டவளை பிரதேசத்தில் பல தாழ் நிலப் பகுதிகள் வெள்ளநீரில் மூழ்கியுள்ளன.

மத்திய மலைநாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. ற்று முன்தினம் இரவு முதல் கடும் மழை பெய்து வருகிறது. மண் திட்டுக்கள் சரிந்து வீழ்ந்த இடங்களில் ஒரு வழி போக்குவரத்தே காணப்படுகின்றன.

நீரேந்தும் பிரதேசங்களில் பதிவாகியுள்ள அதிக மழை வீழ்ச்சி காரணமாக காசல்ரி, மவுசாக்கலை, கெனியோன், விமலசுரேந்திர, லக்ஸபான, நவலக்ஸபான, மேல் கொத்மலை உள்ளிட்ட நீர்த்தேக்கங்களின் நீர் மட்டமும் மிக வெகுவாக உயர்ந்து வருகின்றது.

நோட்டன்பிரிஜ் பகுதியில் பெய்த கடும் மழைகாரணமாக விமலசுரேந்திர நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் உயர்ந்து வான் பாய்ந்து வருகின்றன.

எனவே நீர்த்தேக்கங்களுக்கு கீழ் தாழ் நிலப்பகுதியில் வாழும் மக்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறு மின்சாரதுறை பொறியியலாளர்கள் பொது மக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளனர்.

குறித்த நீர்த்தேக்கங்களின் நீரினை பயன்படுத்தி உச்ச அளவில் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுவதாக மின்சார துறை அதிகாரியொருவர் தெரிவித்தார். நுவரெலியா மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் மழை காரணமாக பல பிரதேசங்களில் மண்சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளன.இதனால் மலைகளுக்கு மண் மேடுகளுக்கும் சமீபமாகவும் மண்சரிவு அபாயம் நிலவும் பிரதேசங்களில் வாழ்பவர்களும் மிகவும் அவதானமாக இருக்குமாறு இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் கேட்டுக்கொண்டுள்ளது.

கலுகல, பிட்டவல, கினிகத்தேனை, கடவலை,வட்டவளை, ஹற்றன், குடாகம, கொட்டகலை,சென்கிளையார்,தலவாக்கலை,ரதல்ல, நானுஓயா உள்ளிட்ட பகுதிகளிலும் பனிமூட்டம் காணப்படுவதால் வீதிகளில் செல்லும் வாகனங்களின் சாரதிகள் அவதானமாக செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில் பெய்து வரும் அடை மழை காரணமாக கடும் குளிரால் பெருந்தோட்டங்களில் தேயிலை உற்பத்தி சற்று வீழ்ச்சி கண்டுள்ளன.

## நாவலப்பிட்டி ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆடிவேல் திருவிழா ஆரம்பம்

**நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்**


நாவலப்பிட்டி நகரில் அமைந்திருக்கும் நாட்டுக்கோட்டை நகரத்தார் அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி திருக்கோயில் சுபகிருது வருட ஆடிவேல் திருவிழா ஆரம்பமாகி தொடர்ந்து 12 நாட்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

09.08.2022 காலை 8.30 மணி முதல் ஸ்ரீ முத்துமாரியம்பாள் தேவஸ்தான தமிழ் கலாசார மண்டபத்திலிருந்து பாற்குடபவனி இடம் பெறவுள்ளது. 10.08.2022 காலை 10.00 மணிக்கு முருக பக்தர்கள் புடைசூழ நாத கீத வேத சங்க வாத்தியங்கள் முழங்க அரோகரா கோஷத்துடன் வள்ளி தேவசேனா சமேத ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி எழுந்தருளி சித்திரத்தேரில் ஆரோகணித்து நகர் வீதி உலா நடைபெறும்.

சர்வக்கட்சி அரசு

# மலையக மக்கள் முன்னணி சாதகமான நிலைப்பாட்டில்

**ஹற்றன் சுழற்சி நிருபர்**



தமிழ் முற்போக்கு கூட்டணியானது, தேர்தலை மாத்திரம் இலக்கு வைத்து செயற்படும் கூட்டணி கிடையாது. அது மக்களுக்கான அரசியலை முன்னெடுக்கும் கூட்டணியாகும். எனவே, தலைமைப்பதவியில் மனோ கணேசன் நீடிப்பார். ஒன்றிணைந்த எமது பயணம் தொடரும். என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவருமான இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நுவரெலியாவில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே பாராளுமன்ற உறுப்பினர் இராதாகிருஷ்ணன் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

சர்வக்கட்சி அரசமைப்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார். நாட்டின் நலன்கருதி இதில் இணையுமாறு அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். சர்வக்கட்சி அரசையே நாடும், சர்வதேசமும்கூட எதிர்பார்க்கின்றது. நாமும் அதனை வரவேற்கின்றோம்.

சர்வக்கட்சி அரசு சம்பந்தமாக மலையக மக்கள் முன்னணி சாதகமான நிலைப்பாட்டில் இருந்தாலும், தமிழ் முற்போக்கு கூட்டணியாக எடுக்கப்படும் முடிவே அறிவிக்கப்படும்.

தமிழ் முற்போக்கு கூட்டணி எதிர்வரும் 03 ஆம் திகதி கூடவுள்ளது. அதன் பின்னரே சர்வக்கட்சி அரசில் இணைவதா அல்லது எமது வகிபாகம் எவ்வாறு அமையும் என்பது குறித்து அறிவிக்கப்படும்.

தமிழ் முற்போக்கு கூட்டணி என்பது தேர்தலுக்காக முளைத்த கூட்டணி அல்ல. அது மக்களுக்கான கொள்கை அடிப்படையிலான கூட்டணி. எமது கூட்டணிக்குள் எவ்வித பிளவும் இல்லை. ஓரணியில் எமது பயணம் தொடரும். கூட்டணியின் தலைமைப்பதவியில் நீடிக்குமாறு மனோ கணேசனிடம் நாம் கேட்டுக் கொண்டுள்ளோம். எமது மக்களுக்கான வேலைத்திட்டத்தை கூட்டாக முன்னெடுப்பதே சிறந்ததாக அமையும்.

# அக்கரபத்தனை பிரதேச சபையின் தலைவர் சுப்ரமணியம் கதிர்செல்வன் பதவி துறப்பு



அக்கரபத்தனை பிரதேச சபையின் தலைவர் சுப்ரமணியம் கதிர்செல்வன் தான் வகித்து வந்த பிரதேச சபை தவிசாளர் பதவியிலிருந்து விலகுவதாக உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளதுடன் தனது இராஜினாமா கடிதத்தையும் (31) மாலை இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொது செயலாளர் ஜீவன் தொண்டமானுக்கு கையளித்துள்ளார்.

அக்கரபத்தனை பிரதேச சபையின் தவிசாளர் சுப்பிரமணியம் கதிர்செல்வன் கடந்த நான்கு வருடங்களுக்கு மேலாக பிரதேச சபை தவிசாளராக இருந்து வந்துள்ளார்.

நேற்று முன்தினம் தனது தவிசாளர் பதவியை இராஜினாமா செய்துள்ளதாக பதவி விலகல் கடிதத்தினை இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமானிடம் கையளித்துள்ளதாக தவிசாளர் கதிர்செல்வன் தெரிவித்துள்ளார்.

தான் பதவி விலகியமையானது தனது தனிப்பட்ட தீர்மானமே என்று தெரிவித்துள்ளதுடன், தனது பதவி விலகலுக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கும் எவ்விதமான முரண்பாடும் இல்லை என்று அவர் வழங்கிய கடிதமூலம் தெரிவித்துள்ளார்.

அதேநேரத்தில் காங்கிரஸ் உயர் பீடம் எடுக்கும் முடிவுகளுக்கு இணங்குவதாகவும், யாரையும் கேட்டு எனக்கு இந்த பதவி வழங்கவில்லை. ஆகவே நான் நேசிக்கும் காங்கிரஸ் உயர் பீடம் எடுத்த முடிவுக்கு கட்டுப்படுவதாகவும் தெரிவித்துள்ளதாக காங்கிரஸ் உயர் மட்டம் தெரிவித்துள்ளது.

ஆ.ரமேஸ்

## கண்டி ஸ்ரீ தலதா மாளிகை எசல பெரஹராவின் இன்று கும்பல் பெரஹரா

**எம்.ஏ. அமீனுல்லா**

வரலாற்றுச் சிறப்புமிக்க கண்டி ஸ்ரீ தலதா மாளிகை எசல பெரஹராவின் இன்று (02) மாலை முதல் கும்பல் பெரஹரா வீதி ஊர்வலத்துடன் ஆரம்பமாகிறது.

இன்று 02ம் திகதி முதல் வெளி பெரஹெரா ஊர்வலங்களில் முதலாவதாக கும்பல் பெரஹராவும் எதிர்வரும் 07ம் திகதி மாலை 7.44 மணியளவில் ரந்தோழி பெரஹெராவும் ஆரம்பமாகும்.இந்த ரந்தோழி ஊர்வல நிகழ்வுகள் எதிர்வரும் 11ம் திகதி வரையும் நடைபெற்று. அதனைத் தொடர்ந்து எதிர்வரும் 12ம் திகதி பகல் பெரஹராவுடன் ஊர்வலங்கள் முடிவுறும்

கடந்த ஜூலை 29ம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ள உள்வீதி பெரஹெரா நிகழ்வினைத் தொடர்ந்து, இன்று மாலை சுபநேரம் 6.01 மணிக்கு ஆரம்பமாகும். வெளி பெரஹெரவான கும்பல் பெரஹெரா நிகழ்வில் கண்டி நகரின் பல வீதிகளில் இரவு நேர ஊர்வலங்களாக வலம் வரும்

இவ்வாறு நிறைவடைந்துள்ள ரந்தோழி ஊர்வலத்தினையடுத்து, இறுதிநாளான 12ம் திகதி காலை 11.50 பகல் பெரஹராவுடன் 'தியகெப்பீம' நீர்வெட்டு நிகழ்வுடன் பெரஹரா நிகழ்வுகள் முடிவடையும்.





விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு நேற்று (01) கொழும்பு, பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் தரம் 03, 04 மாணவர்களின் சமய, கலாசார நிகழ்வுகள் நடைபெற்றன. இதில் தரம் 4 A மாணவர்களால் மேடையேற்றப்பட்ட நாடகத்தின் சில காட்சிகளையும் பங்குபற்றிய மாணவர்கள் தங்களின் ஆசிரியையுடன் எடுத்துக்கொண்ட படத்தையும் காணலாம்.

# நகர்வலம்



# 3500 குடும்பங்கள் வாழும் கலாவெவயில் புதிய குடிநீர் திட்டம் திறந்து வைப்பு





**கெக்கிராவ குறூப் நிருபர்**

அநுராதபுரம் கலாவெவயில் அல் ஹிமா சமூக சேவை அமைப்பினூடாக புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள பொது மக்களுக்கான குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் மக்கள் பாவனைக்காக (28) திறந்து வைக்கப்பட்டது.

அநுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹுமானின் வேண்டுகோளுக்கு இணங்க மேற்படி குடிநீர் திட்டம் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் அல் ஹிமா இஸ்லாமிய சேவைகள் அமைப்பின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் நூறுல்லாஹ் (நளீமி), முன்னாள் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் ரஸாக் வசீம், கலாவெவ ஜும்ஆப் பள்ளி நிருவாகிகள் மற்றும் ஊர்வாசிகள் என பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். கலாவெவ கிராமத்தில் சுமார் 3500 இற்கும் அதிகமான குடும்பங்கள் இக்குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரத்தின் ஊடாக சுத்தமான குடிநீரினை பெற்றுக்கொள்ள முடியுமென்பது குறிப்பிடத்தக்கது.

# கொழும்பில் பரத நாட்டிய அரங்கேற்றம்



கொழும்பு தியாகராஜர் கலைக்கோவில் இயக்குநரும் நாட்டிய கலைமாமணி ஸ்ரீமதி பவானி குகப்ரியாவின் மாணவிகளான திருமதி சசிகுமார் ஜெசிதா, தம்பதிகளின் புதல்வி அவினியா மற்றும் திருமதி உமா சங்கர் மதிவதணி தம்பதிகளின் புதல்வி சாகித்தியா ஆகியோரின் பரதநாட்டிய அரங்கேற்றம் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 13ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு கொழும்பு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக யாழ் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கழக முன்னாள் நடனத்துறை தலைவரும்,

யாழ்ப்பாணம் நாட்டியகலா கேந்திரா ஸ்தாபக இயக்குநருமான கலாநிதி ஸ்ரீமதி கிருஷாந்தி ரவீந்திரா கலந்து கொள்ளவுள்ளார். இந்து சமய கலாசார திணைக்கள பணிப்பாளர் அ. உமா மகேஸ்வரன் விசேட அதிதியாவும், கொழும்பு மெதடிஸ் கல்லூரி அதிபர் திருமதி. கிரண்யா பெர்னாண்டோ, தெஹிவளை கேற்வே கல்லூரி பிரதிஅதிபர் அன்டனி செல்லையா ஆகியோர் சிறப்பதிதிகளாகவும் கலந்து கொள்வர்.

# பெற்றோல் திருடும் கும்பல் அதிகரிப்பு

**வெலிகம தினகரன் நிருபர்**

வெலிகம பகுதியில் வாகனங்களிலிருந்து பெற்றோலை திருட்டுத்தனமாக பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் அதிகதிரித்து வருகின்றன.

இது விடயமாக வாகன உரிமையாளர்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறு பொலிஸார் கேட்டுள்ளனர்.

குறிப்பாக இரவு வேலைகளில் வீட்டுக்கு முன்னால் நிறுத்தி வைக்கப்படும் வாகனங்களிலிருந்தே இவ்வாறு பெற்றோல் திருடப்படுகின்றன.



பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள கொழும்பு நகரில் வாழும் குடும்பங்களுக்கு 3500 ரூபா பெறுமதியான வவுச்சர்கள் வழங்கும் நிகழ்வு கொழும்பு மாநகர மேயர் ரோஸி சேனாநாயக்கவின் தலைமையில் கொச்சிக்கடை பிரேமதாஸ மண்டபத்தில் நடைபெற்றது. பயனாளர் ஒருவருக்கு நகராதிபதி வவுச்சர் வழங்குவதையும் நகர சபை உறுப்பினர் அநுர சுஜீவ அருகில் இருப்பதையும் படத்தில் காணலாம்.

(படம்: ஆரியரத்ன கனேகொட)

# உலகளாவிய அரங்கில் இலங்கையைப் பிரபலப்படுத்த மேலதிகமான கூட்டு அணுகுமுறை அவசியம்



நுவன் கமகே, உப தலைவர்
இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனம் (SLIM)

இலங்கை தற்போது பல்வேறு பொருளாதார சவால்களை எதிர்கொண்டுள்ளதுடன், இவ்விக்கட்டான சூழ்நிலையிலிருந்து நாட்டை மீட்பதற்கு, "எதிர்காலத்திற்குத் தயார்படுத்தும்" ('future ready') துணிச்சலான நடவடிக்கைகளை இலங்கை எடுக்க வேண்டியது அவசியமாகும். அவ்வாறான வழிகளில் ஒன்றான, நாட்டின் புகழை மேலோங்கச் செய்தல் (Nation Branding) எனும் திட்டத்தை உரிய முறையில் செயல்படுத்தினால் அது அதிக அந்நியச் செலாவணியை வழங்கும்.

Nation Branding என்பது ஒரு நாடு உலக அரங்கில் அதன் நற்பெயரைக் கட்டியெழுப்புதல், மேம்படுத்துதல், நிர்வகித்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட ஒரு செயற்பாடாகும். வெளிநாடுகளுடன் ஒத்துழைப்பைப் பேணுவதற்கும் வலுவான உறவுகளை உருவாக்குவதற்குமான ஒரு சிறந்த நிலைப்பாட்டிற்கு இது வாய்ப்பளிக்கிறது. இதன் மூலம் அதிக முதலீடுகள், அதிக சுற்றுலா ஈடுபாடுகள், அத்துடன் நாட்டினது உற்பத்திகள் மற்றும் சேவைகளுக்கு அதிக மதிப்பு மற்றும் கேள்வியை ஏற்படுத்தி அதன் மூலம் பொருளாதார ரீதியாக நன்மைகளை அடைதல், திறமையானவர்களை ஈர்த்தல், ஆக்கபூர்வமான பணியாளர்களை உருவாக்குதல் மற்றும் உலக அரங்கில் நாட்டின் செல்வாக்கை மேம்படுத்துதல் உள்ளிட்ட விடயங்களை அடையலாம்.

ஒரு தேசம் எனும் வகையில், புத்தாக்கம், தொழில்முனைவு மற்றும் முன்முயற்சிகளை ஆதரிக்கக்கூடிய கலாச்சாரம் வளர்க்கப்படும் வகையில் தொடக்க நிறுவனங்களை ஊக்குவித்தல் ஆகியவற்றில் இலங்கை அதிக கவனம் செலுத்த வேண்டும். ஆயினும், இவை தொடர்பில் பரவலாகப் பேசப்பட்டு, ஏற்கனவே பல முன்முயற்சிகள் செயல்படுத்தப்பட்டிருந்தாலும், நிலையான தேசியக் கொள்கைகள் அல்லது அவற்றை அடுத்த கட்டத்திற்குக் கொண்டு செல்லும் தளங்களில் முன்னேறிச் செல்வதற்கு இன்னும் வாய்ப்புகள் காணப்படுகின்றன. ஒரு பொதுவான தளத்தை உருவாக்குவதானது, இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்கள், பல்வேறு தொழில்துறைகளில் இயங்கும் நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கிடையே நெருக்கமான பங்காளித்துவத்தை வளர்ப்பதையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். தொழில்முனைவு, புத்தாக்கம், திறன்கள் மற்றும் அறிவு சார்ந்த தொழில்துறைகள் மற்றும் சமூகத்தை ஊக்குவிப்பதில் கவனம் செலுத்துகின்ற தற்போது இடம்பெற்று வரும் "எதிர்காலத்திற்குத் தயாராகும் இலங்கை" திட்டமானது, தற்போது காணப்படுகின்ற புதிய இயல்பு நிலைகளை நாம் அங்கீகரித்தவாறு, பொருளாதார மீட்சிக்குத் தயாராகும் போது இவை அனைத்தும் மிகவும் முக்கிய இடத்தை வகிப்பதுடன், இது தேசத்தின் முன்னேற்றத்திற்கான பொதுவான தளத்திற்கான தேவையினடிப்படையில் ஊக்கமளிக்கும் காரணியாகவும் அமைகின்றது.

# ஹம்பாந்தோட்டை ஸாஹிராவின் உ/த பிரிவுக்கு உதவிகளை வழங்க தொழிலதிபர் பளீல் உறுதி

## பாடசாலை சமூகம் வரவேற்பு




**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**

ஹம்பாந்தோட்டை ஸாஹிரா தேசிய பாடசாலையின் பழைய மாணவரும் தற்பொழுது ஐக்கிய இராச்சியத்தில் வசித்து வரும் தொழிலதிபருமான பளீல் ஹகீம் மொஹமட் அண்மையில் தான் கல்வி கற்ற ஹம்பாந்தோட்டை ஸாஹிரா தேசிய பாடசாலைக்கு வருகை தந்து பாடசாலையின் தேவைகள் மற்றும் பௌதீக வள பற்றாக்குறை தொடர்பில் பாடசாலை சமூகத்துடன் பேச்சுவார்த்தை மேற்கொண்டார்.

மேலும் ஸாஹிரா தேசிய பாடசலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள கணித, விஞ்ஞான வகுப்புக்களை தடையின்றி முன்னெடுத்து செல்வதற்கான உதவிகளை தான் வழங்குவதாகவும் பாடசாலை அதிபர் எம். எம். ரிஸான் உயர்தர வகுப்பு மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுடன் கலந்தரையாடல்களில் அவர் ஈடுபட்டார். தனது வகுப்பு நண்பர்கள் மற்றும் கற்பித்த ஆசிரியர்கள் ஆகியோருக்காக ஒன்றுகூடலை ஏற்பாடு செய்து நடாத்தி பழைய பாடசாலை நினைவகளையும் மீட்டிக்கொண்டார். இதன் போது தொழிலதிபர் தனக்கு கற்பித்த ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை நண்பர்களுக்கும் பரிசுகளை வழங்கி மகிழ்வித்தமை குறிப்பிடத்தக்கது.





இம்முறை க.பொ.த சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றும் வெலிகம கபுவத்தை அந்நூர் மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் தரம் 11 மாணவர்கள் அதிபர் ஆசிரியர்களை கௌரவிக்கும் முகமாக நினைவுச் சின்னங்களை வழங்கி கௌரவித்தனர். பாடசாலை அதிபர் எம்.எச்.எம். நவாஸ், பிரதி அதிபர் எம்.யூ.எம். வாஸில் (நளீமி) ஆகியோர் நினைவுச் சின்னங்கள் பெறுவதைக் காணலாம். (படங்கள்: வெலிகம தினகரன் நிருபர்)


## காணி எடுத்தற் சட்டம்
## (அத்தியாயம் 460)
## 7ஆம் பிரிவின் கீழான பிரகடனம்

பிரதேச செயலாளர் குறிப்பு இல.: DSM/YT/LAND/5/46

காணி அமைச்சின் குறிப்பு இல. 4-3/5/2018/HA/106

இங்கே அட்டவணையில் விபரிக்கப்பட்ட பின்வரும் காணியினை மொட்டுவெல கிராம உத்தியோகத்தர் பிரிவில் கிராம உத்தியோகத்தர் அலுவலகம் அமைப்பதற்காக அரசாங்கம் எடுத்துக்கொள்ள எண்ணியுள்ளது. இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு 2022.06.06ஆம் திகதிய 2283/03 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலைப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாகாணம் | : மத்திய மாகாணம் |
| மாவட்டம் | : மாத்தளை |
| பிரதேச செயலாளர் பிரிவு | : யட்டவத்தை |
| கிராமத்தின் பெயர் | : அம்பன்பொல |
| காணியின் பெயர் | : வெவதென்னே வத்தை அல்லது வெவதென்னே கெதர வத்தை |
| வரைபட இல (ஆரம்ப வரைபடம்) | : ஆ.வ.மா. 1860 |

**டி.ஆர்.கே. ஹேரன்நாயக்க**
**பிரதேச செயலாளர்,**
**யட்டவத்தை**

**2022.07.25**
**யட்டவத்தை பிரதேச செயலகம்**

## காணி எடுத்தற் சட்டம்
## (அத்தியாயம் 460)
## 7ஆம் பிரிவின் கீழான பிரகடனம்

பிரதேச செயலாளர் குறிப்பு இல.: DSM/YT/LAND/5/17

காணி அமைச்சின் குறிப்பு இல. 4-3/17/2019/LO/162

இங்கே அட்டவணையில் விபரிக்கப்பட்ட பின்வரும் காணியினை மாளிகாதென்ன கிராம உத்தியோகத்தர் பிரிவில் யட்டவத்தை பொலிஸ் நிலையம் அமைப்பதற்காக அரசாங்கம் எடுத்துக்கொள்ள எண்ணியுள்ளது. இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு 2022.06.06ஆம் திகதிய 2283/03 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலைப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாகாணம் | : மத்திய மாகாணம் |
| மாவட்டம் | : மாத்தளை |
| பிரதேச செயலாளர் பிரிவு | : யட்டவத்தை |
| கிராமத்தின் பெயர் | : யட்டவத்தை |
| காணியின் பெயர் | : யட்டவத்தை வத்தை |
| வரைபட இல (ஆரம்ப வரைபடம்) | : ஆ.வ.மா. 1859 |

**டி.ஆர்.கே. ஹேரன்நாயக்க**
**பிரதேச செயலாளர்,**
**யட்டவத்தை**

**2022.07.25**
**யட்டவத்தை பிரதேச செயலகம்**

## மீட்கப்படாத அடகு நகைகளின் ஏல விற்பனை

சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் பினான்ஸ் பி.எல்.சி.யின் பின்வரும் கிளைகளில் அல்லது சேவை நிலையங்களில் அடகு வைக்கப்பட்டு, மீட்கப்படாத தங்க நகைகள் இல.123, ஓரபிபாச மாவத்தை, கொழும்பு 10. என்னும் முகவரியில் பின்வரும் தினங்களில் மு.ப.9.30 - 2.00 தொடக்கம் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| இத் திகதி வரை அடகு வைக்கப்பட்டவை | இத் திகதி வரை மீட்கப்படாதவை | ஏல விற்பனைத் திகதி |
|---|---|---|
| 02/04/2022 | 03/05/2022 | 29/08/2022 & 01/09/2022 |

**கிளைகள் :** அனுராதபுரம், அம்பலங்கொடை, அளுதகம, அமபாறை, அவிசாவளை, எஹலியகொடை, எலக்கந்தை, எம்பிலிப்பிட்டி, கந்தானை, களுத்துறை, கதுருவெல, கடுவெல, கட்டுகஸ்தோட்டை, களனி, கேகாலை, குளியாப்பிட்டி, குருநாகல், குருவிட்ட, கொட்டாஞ்சேனை, கொட்டாவை, கொச்சிக்கடை, கம்பஹா, காலி, கிரியுல்ல, ஜா-எல, தலவத்துகொடை, திஸ்ஸமஹாராம, திருகோணமலை, தம்புள்ளை, நுகேகொடை, நாரம்மல, நிட்டம்புவ, நிக்கவெரட்டிய, பாணந்துறை, பெல்மதுல்ல, பிலியந்தலை, பிரதான கிளை, பதுளை, பத்தரமுல்லை, பண்டாரவளை, பொரளஸ்கமுவ, கண்டி, மஹர, மஹரகம, மத்துகம, மட்டக்களப்பு, மஹியங்கனை, மாவத்தகம, மாரவில, மாத்தளை, மாத்தறை, மாலபே, மினுவாங்கொடை, நீர்கொழும்பு, மொறட்டுவை, யாழ்ப்பாணம், இரத்மலானை, இரத்தினபுரி, ராஜகிரிய, ராகம, வத்தளை, வரக்காப்பொல, வவுனியா, வாரியபொல, வெள்ளவத்தை, வென்னப்புவ, சிலாபம், ஹொரணை, நுவரெலிய கிளை, தெகிவளை

எவ்வித மேலதிக அறிவித்தலுமின்றி, ஏல விற்பனையை இரத்து செய்யவும் பிற்போடவும் அல்லது ஏல விற்பனை நடத்தப்படும் இடத்தை மாற்றவும் சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் பி.எல்.சி. உரிமை கொண்டுள்ளது.

விலைமனு சமர்ப்பிக்கப்பட்ட பொருள்கள் அன்றே பணம் செலுத்தி மீட்கப்பட வேண்டும்.

**சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் பீஎல்சீ**
இல.123, ஒரபிபாஷா மாவத்தை, கொழும்பு 10.
தொ.எண் - 0117 388 388

## இலங்கை திரிபோஷ லிமிட்டட்
## விலைமனுக்களுக்கான அழைப்பு
## இலங்கை திரிபோஷ லிமிட்டட்டிற்கு 750 மெ.தொ. சோளத்திற்கான பெறுகை
**Bid No. SLTL/TB/09/2022**

1. இலங்கை திரிபோஷ லிமிட்டட்டிற்கு 750 மெ.தொ. சோளத்தை வழங்குவதற்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் (உயர்மட்டம்) முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார்.
2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் முறைமை மூலம் நடாத்தப்படும்.
3. ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகுதிக்காக, விலைமனுதாரரானவர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டவராகவுமிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை இலங்கை திரிபோஷ லிமிட்டட்டின் சிரேஷ்ட முகாமையாளரிடமிருந்து வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் பெற்றுக் கொள்ளலாம். தொலைபேசி இலக்கங்கள்: 011 2236 588/ 011 2237 418.
5. 2022.08.19 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் ரொக்கப் பணத்தில் மீளளிக்கப்படாத கட்டணமாக 34,250 ரூபாவைச் செலுத்திய பின்னர், பொது ஒப்பந்தங்கள் பதிவாளரினால் வழங்கப்பட்ட பிசிஏ-3 படிவத்துடன் கீழேயுள்ள முகவரிக்கு எழுத்துமூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஜா-எல, கப்புவத்த, நீர்கொழும்பு வீதி, த.பெட்டி 17, இலங்கை திரிபோஷ லிமிட்டட்டின் சிரேஷ்ட முகாமையாளரிடமிருந்து ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
6. 2022.08.22 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை திறக்கும் திகதியிலிருந்து 91 நாட்களுக்கு அதாவது 2022.08.22 ஆம் திகதியிலிருந்து 2022.11.21 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
7. அனைத்து விலைமனுக்களும் 2,925,000 ரூபா பெறுமதியானதும் மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றிலிருந்து வழங்கப்பட்ட விலைமனுப்பிணையொன்றுடனும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையின் செல்லுபடியாகும் காலமானது விலைமனுக்களை திறக்கும் திகதியிலிருந்து அதாவது 2022.08.22 ஆம் திகதியிலிருந்து 2022.11.21 ஆம் திகதி வரையும் 119 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
8. மேலே குறிப்பிட்டுள்ள நேரத்தின் பின்னர் கீழேயுள்ள முகவரியில் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளின் முன்னிலையில் உடனடியாகவே விலைமனுக்கள் திறக்கப்படும் (2022.08.22 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு).

மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரியானது பின்வருமாறு:
**தலைவர்,**
**உயர்மட்ட பெறுகைக் குழு,**
**இலங்கை திரிபோஷ லிமிட்டட்,**
**த.பெட்டி 17, கப்புவத்த, ஜா-எல.**

## பெயர் மாற்றம்

நிந்தவூர் -09ல் வசித்து வரும் (வெயாவெல் வத்தயைச் சேர்ந்த) தங்கராஜ் மது சாலினி ஆகிய நான் எனது சொந்த விருப்பத்தின் பேரில் புனித இஸ்லாம் மார்க்கத்தை 2019.05.04ந் திகதி ஏற்று, எனது பெயரை தங்கராஜ் பாத்திமா அஸ்மியா என மாற்றிக் கொண்டேன் என்று அரசிற்கும், பொது மக்களுக்கும் அறியத் தருகின்றேன்.

**தங்கராஜ் பாத்திமா அஸ்மியா**

Repeat Your ad For Better Offers

### 1964 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்த) சட்டத்தின் திருத்தத்திற்கமைய காணி எடுத்தல் சட்டம் (அத்தியாயம் 460) 7(1) ஆம் பிரிவிற்கமைவான அறிவித்தல்

எனது குறிப்பு இல: KDS/PDB/4/3/2/19

பொது நடவடிக்கைக்கு தேவையான கீழ் குறிப்பிடப்பட்ட உப பிரிவிற்கமைவான காணித்துண்டை பெற்றுக்கொள்ள அரசாங்கம் கருதுகின்றது. மேலதிக விபரங்களுக்கு 2022.06.06 ஆம் திகதி 2283/15 இலக்கத்தினுடைய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் விசேட வர்த்தமான பத்திரிகையை பார்க்கவும்.

டப்.எம்.டி.டி.கே.வீரகோன்
பிரதேச செயலாளர்
பாத்ததும்பரை

பாத்ததும்பரை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் 2022.07.21

**உப பிரிவு**

பிரதேச செயலாளர் அலுவலகம் - பாத்ததும்பரை

கிராமம் - கிராகடுவ

அமைப்பு - கண்டி மாவட்டத்தில் பாத்ததும்பரை பிரதேச செயலாளர் பிரிவில், பல்லேகம்பஹ கோரல சிறு பிரிவில், இல.631 கிராகடுவ கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள கிராகடுவ கிராமம்

காணித்துண்டின் பெயர் - ஹேலேஹேன

ஆரம்ப வரைபட இலக்கம் - ஆரம்ப வரைபட இல.மஹ 7170

காணித்துண்டின் இலக்கம் - 01 மற்றும் 02

# கேள்விகளுக்கான அழைப்பு

## ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

## 2022 – 2023ஆம் வருடங்களுக்கான ஜெனிட்டோரியல் சேவைகள்

**Q - 285/22**

01. 2022/2023ஆம் வருடங்களுக்கான ஜெனிட்டோரியல் சேவைக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் சார்பில் பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கிறார்.

02. வைத்தியசாலையின் சகல இடப்பரப்புகளும் உள்ளடங்கும் வகையில் சுத்திகரிப்பு சேவையை வழங்குவதற்காக அழைக்கப்படுகின்றன. (கட்டிடங்கள் / வார்டுகள் / விடுதிகள் / துப்புரவேற்பாடு / சிகிச்சையகம் மற்றும் சிகிச்சையகமற்ற இடங்கள்)

03. சேவை வழங்கும் காலம் 01 வருடமாகும்.

04. தேசிய போட்டி ரீதியிலான கேள்வி கோரல் நடைமுறை மூலம் கேள்விகள் கோரப்படுகின்றன.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களை ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை வழங்கல் அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (மின்னஞ்சல்: suppliceofficesjgh@gmail.com) மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை வழங்கல் அலுவலகத்தில் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

06. மீளளிக்கப்படாத கேள்வி வைப்பாக 3,500.00 ரூபா (மூவாயிரத்து ஐந்நூறு ரூபாவை) காசாளருக்கு ரொக்கப் பணமாகச் செலுத்துவதன் பேரில் நுகேகொட, தலபத்பிட்டிய, ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான கோரிக்கையொன்றைச் செய்வதன் மூலம் ஆங்கில மொழியிலான முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியொன்றை ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பெற்றுக்கொள்ளலாம்.

07. 2022-08-25ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், பெறுகைக் குழு, ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை, தலபத்பிட்டிய, நுகேகொட எனும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் கேள்விப் படிவங்கள் நிராகரிக்கப்படும். ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை விரிவுரை மண்டபத்தில் 2022-08-25ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு சமுகம் தந்துள்ள கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் கேள்விகள் மூடப்பட்டு உடன் திறக்கப்படும்.

தொடர்பிலக்கங்கள்: தொலைபேசி: 011-2778624, 0112778610 நீடிப்பு: 3142, தொலைநகல்: 011-2778624

**தலைவர் - பெறுகைக் குழு,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தலபத்பிட்டிய, நுகேகொட.**



# பாவனையாளர் நெல் விற்பனைக்கான விலைமனுக்கோரல்

## விவசாயத் திணைக்களம்

விவசாயத் திணைக்களத்தின், விதை மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையத்திற்கு சொந்தமான கீழ்க்காணும் அலகுகளில் உள்ள பாவனையாளர் மேலதிக உணவுப் பயிர் மொத்த விற்பனைக்காக பணிப்பாளர் பெறுகைக்குழுவினால் 2022.08.24 பி.ப.2.00 வரை தேசிய போட்டி கேள்வி கோரல் முறையின் ஊடாக பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| பி.வி.ப.பணிமனையின் பண்ணை | மேலதிக உணவுப் பயிர்கள் | மேலதிக உணவுப் பயிர்ச்செய்கை (கி.கி) | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|
| | | | காசாக | வங்கிப்பிணை |
| அரச விதை உற்பத்திப் பண்ணை ரஹங்கல | மரமுந்திரிகை | 6296 | 22,100.00 | 44200.00 |
| | கவ்பி | 150 | 525.00 | 1050.00 |
| | சோளம் | 519.7 | 1000.00 | 2000.00 |

02. மேற்படி 1 நிரலில் குறிப்பிடப்படும் பண்ணை அலுவலகங்களில் கடமை நேரங்களில் மேலதிக உணவுப்பயிர் தொகையை பரீட்சித்து பார்க்க முடிவதுடன் இல.02 நிரலில் குறிப்பிடப்படும் தொகைகளின் கூட்டை கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்தை தொடர்பு கொண்டு அல்லது நுவரெலியா பிரதி விவசாய பணிப்பாளர் பணிமனையில் பெற்றுக்கொள்ள முடிவதுடன் கேள்வி ஆவணங்களை இலவசமாக பரீட்சிப்பதற்கு இடமளிக்கும்.

03. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்கள் மீளளிக்கப்படாத ரூ.3500/- கட்டணத்தை விவசாயத் திணைக்களத்தின் காசாளரிடம் அல்லது நுவரெலியா பிரதி விவசாயப் பணிப்பாளர் (விதைகள்) அலுவலகத்திற்கு காசாக செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டொன்றை விவசாயத் திணைக்களத்தின் விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையம் அல்லது நுவரெலியா பிரதி விவசாயப் பணிப்பாளர் (விதைகள்) அலுவலகத்திற்கு சமர்ப்பித்து பெற்றுக்கொண்ட கேள்விப் படிவத்தில் கேள்விகள் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் 2022.08.03 முதல் 2022.08.23 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப.8.30 முதல் பி.ப.3.00வரை கேள்விப் படிவங்கள் விநியோகிக்கப்படும்.

04. கேள்வி அறிவுறுத்தல்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட பொறியிடப்பட்ட சகல கேள்விகளும் "தலைவர், பிரதேச பெறுகைக்குழு, விதை மற்றும் நடுகைப்பொருட்கள் அபிவிருத்தி நிலையம், விவசாயத் திணைக்களம், பேராதனை" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். ஏனைய கொண்டுவந்து ஒப்படைக்கப்படும் கேள்விகள் மேற்படி முகவரியில் வைக்கப்பட்டுள்ள ஆவணத்தில் குறிப்பிட்டு கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

05. கேள்விதாரர்கள் கொண்டுவந்து ஒப்படைக்கப்படும் அல்லது தபாலில் அனுப்பப்படும் கேள்விகள் 2022.08.24 பி.ப.2.00 வரை ஏற்றுக்கொள்ளப்படுவதுடன், கேள்வி ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விகள் திறக்கப்படும். அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது எழுத்துமூல அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக்குழு,**
**விதை மற்றும் நடுகைப்பொருட்கள் அபிவிருத்தி நிலையம்**
**விவசாயத் திணைக்களம்**
**பேராதனை.**
**தொ.பே - 081-2388106/122**

# வாகனங்கள் விற்பனைக்கு

| வாகன இல. | வகை | மாதிரி | வருடம் |
|---|---|---|---|
| **கார்** | | | |
| CAM -7XXX | SUZUKI | ALTO LXI800 | 2015 |
| CAV -3XXX | SUZUKI | WAGON-R MH55S | 2017 |
| **ஜீப்** | | | |
| KI -5XXX | TOYOTA | HARRIER ACU30W | 2005 |
| **டிப்பர்** | | | |
| LK -8XXX | LANKA ASHOK LEYLAND | COMET TIPPER 1613 | 2010 |
| **லொறி** | | | |
| PS -5XXX | TATA | SUPER ACE | 2012 |
| **முச்சக்கர வண்டிகள்** | | | |
| QJ -2XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QP -5XXX | BAJAJ | AUTO AR4S | 2008 |
| YF -0XXX | BAJAJ | RE 205 | 2010 |
| AAC -6XXX | BAJAJ | RE 205 | 2012 |
| AAD -6XXX | BAJAJ | RE 205 | 2012 |
| AAV -8XXX | BAJAJ | RE | 2014 |
| AAU -3XXX | BAJAJ | RE | 2014 |
| ABD -5XXX | BAJAJ | RE | 2015 |
| ABG -5XXX | BAJAJ | RE | 2015 |

வாகன பரிசீலித்தல்களுக்கு:
**மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ**
வாகன முற்றம் - இல.176, வாவி வீதி, மஹரகம.
தொ.பேசி : 0112 088 505

### வாகன பரிசீலித்தல்களுக்கான திகதிகள்

மேற்குறிப்பிட்ட விலாசத்தில் 2022 ஆகஸ்ட் 2ஆம், 3ஆம், 4ஆம், மற்றும் 5ஆம் திகதிகளில் மு.ப.9.00 முதல் பி.ப.5.00 வரை பரிசீலிக்க முடியும். (கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படுவது 2022 ஆகஸ்ட் 5ஆம் திகதி பி.ப.5.00 மணியுடன் நிறைவுபெறும்)

மீளப் பெற முடியாத கட்டணமான ரூ.200/-ஐ செலுத்தி கேள்வி படிவங்களை மேற்குறித்த விலாசத்தில் மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ வாகன முற்றத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். வெற்றிகரமான கேள்விதாரர் தொலைபேசியூடாக அறிவிக்கப்படுவதுடன் அதனுடன் தொடர்பான வாகனம் அறிவிக்கப்பட்டதிலிருந்து 7 நாட்களுக்குள் அப்புறப்படுத்தப்பட வேண்டும்.
கேள்வியிலிருந்து எந்தவொரு காரணத்தையும் கூறாமல் எந்தவொரு வாகனத்தையும் விலக்கிக் கொள்ள கம்பனிக்கு பூரண உரிமையுண்டு. அத்தோடு வெற்றிகரமான கேள்விதாரர் வாகனத்தை அதன் தற்போதைய நிலையிலேயே பொறுப்பேற்க வேண்டியதோடு, அதனுடன் தொடர்பான அரச வரி மற்றும் வாகன வருமான உத்தரவுப் பத்திரம் போன்றவற்றின் நிலுவைக் கட்டணங்கள் இருப்பின் அவற்றையும் கேள்விதாரரே பொறுப்பேற்க வேண்டும்.

**இக் கேள்விகள் தொடர்பான மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ இன் முடிவுகளே இறுதியானதாகும்.**

**மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சி**

Mercantile Investments and Finance PLC

தலைமை அலுவலகம்
236, காலி வீதி, கொழும்பு - 03
தொ.பேசி: 2343720 - 7 நீட்சி: 210

தொடர்பு:
**ஜானக்க - 071 1624559 / மொதித - 071 9530350**

www.skillsads.com

## சிறு விளம்பரம்

### மோட்டார் வாகனங்கள்

**107**

**டொயோட்டா கார்கள்** விற்பனைக்கு

65-0671 Toyota vista 1995 car, கூடிய விலைக் கோரிக்கைக்கு வெபில் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03 தொ. பே. 0714 542958. 043667

**122**

**மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்** விற்பனைக்கு

WP AAV-0164 Bajaj 2014 threewhel கூடிய விலைக் கோரிக்கைக்கு வெபில் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03 தொ. பே. 0711 210810. 043666

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

# எல் பீ ஃபினான்ஸ் பி.எல்.சி பகிரங்க ஏலவிற்பனை

எல் பீ ஃபினான்ஸ் பி.எல்.சி நிறுவனத்தில் அடகு வைத்து தங்கக் கடன் பெற்று, உரிய காலத்தினுள் மீட்கப்படாத தங்க நகைகள் பின்வரும் இடங்களில் கீழ்க்காணும் திகதிகளில் மு.ப. 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| ஏலவிற்பனைத் திகதி | | முகவரி |
|---|---|---|
| 01/05/12/19 | செப்டம்பர் 2022 | இல. 755/1, பன்னிபிட்டிய வீதி, பத்தரமுல்ல. |
| 01/05/12/19 | செப்டம்பர் 2022 | இல. 91, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, கொழும்பு 06. |
| 01/05/12/19 | செப்டம்பர் 2022 | இல. 92, ஸ்டான்லி திலகரட்ன மாவத்தை, நுகேகொடை. |
| 01/05/12/19 | செப்டம்பர் 2022 | இல. 434, ஈ.டபிள்யூ.பெரேரா மாவத்தை, கோட்டே வீதி, பிட்டகோட்டே. |
| 01/05/12/19 | செப்டம்பர் 2022 | இல. 595, ஹைலெவல் வீதி, கங்கொடவில, நுகேகொடை. |
| 01/05/12/19 | செப்டம்பர் 2022 | இல. 61/2, கண்டி வீதி, திஹாரிய. |
| 01/05/12/19 | செப்டம்பர் 2022 | இல. 594/3, கண்டி வீதி, நிட்டம்புவ. |
| 01/05/12/19 | செப்டம்பர் 2022 | இல. 19, பிரதான வீதி, கேகாலை. |
| 01/05/12/19 | செப்டம்பர் 2022 | இல. 1B, பௌத்தாலோக மாவத்தை, கம்பஹா. |
| 01/05/12/19 | செப்டம்பர் 2022 | இல. 81, கண்டி வீதி, வரகாபொல. |
| 01/05/12/19 | செப்டம்பர் 2022 | இல. 282, அநகாரிக தர்மபால மாவத்தை, மாத்தறை. |
| 01/05/12/19 | செப்டம்பர் 2022 | இல. 13, ஸ்டேசன் வீதி, மாத்தறை. |
| 01/05/12/19 | செப்டம்பர் 2022 | இல. 66, திஸ்ஸ வீதி, தங்காலை. |
| 01/05/12/19 | செப்டம்பர் 2022 | இல. 138 D/1, அம்பாந்தோட்டை வீதி, அம்பலாந்தோட்டை. |
| 01/05/12/19 | செப்டம்பர் 2022 | இல. 83, தெனியாய வீதி, அக்குரெஸ்ஸ. |
| 01/05/12/19 | செப்டம்பர் 2022 | இல. 2, எச்.வி.கட்டிடம், தெல்லாவ வீதி, நெலுவ. |
| 01/05/12/19 | செப்டம்பர் 2022 | இல. 149, பிரதான வீதி, தெனியாய. |
| 01/05/12/19 | செப்டம்பர் 2022 | இல. 65/A, ஸ்ரீ சத்தர்ம மாவத்தை, மாளிகாவத்தை, கொழும்பு 10. |
| 01/05/12/19 | செப்டம்பர் 2022 | இல. 282, நாகலாகம் வீதி, கொழும்பு 14. |
| 01/05/12/19 | செப்டம்பர் 2022 | இல. 52/17, கொதட்டுவ புதிய நகரம், கொதட்டுவ. |
| 01/05/12/19 | செப்டம்பர் 2022 | இல. 21, புனித ஜோசப் வீதி, கொழும்பு 14. |
| 01/05/12/19 | செப்டம்பர் 2022 | இல. 371/1, டாம் வீதி, கொழும்பு 12. |
| 01/05/12/19 | செப்டம்பர் 2022 | இல. 551, தெமட்டகொட வீதி, கொழும்பு 09. |
| 01/05/12/19 | செப்டம்பர் 2022 | இல. 149, கே பி கிறிஸ்டி பெரேரா மாவத்தை, கொழும்பு 13. |
| 01/05/12/19 | செப்டம்பர் 2022 | இல. 197, செட்டியார் தெரு, கொழும்பு 11. |
| 01/05/12/19 | செப்டம்பர் 2022 | இல. 256, புதிய நகரம், தம்புத்தேகம. |
| 01/05/12/19 | செப்டம்பர் 2022 | ரஜரட்ட கட்டிடம், பிரதான வீதி, கதுருவெல, பொலன்நறுவை. |
| 01/05/12/19 | செப்டம்பர் 2022 | இல. 137, பிரதான வீதி, அனுராதபுரம். |
| 01/05/12/19 | செப்டம்பர் 2022 | இல. 514/A, புதிய நகரம், அனுராதபுரம். |
| 01/05/12/19 | செப்டம்பர் 2022 | இல. 219, புத்தளம் வீதி, நொச்சியாகம. |
| 01/05/12/19 | செப்டம்பர் 2022 | இல. 26, கண்டி வீதி, மதவாச்சி. |
| 01/05/12/19 | செப்டம்பர் 2022 | இல. 38, குருநாகல் சந்தி, தம்புளை. |
| 01/05/12/19 | செப்டம்பர் 2022 | பிரதான வீதி, மெதிரிகிரிய. |
| 01/05/12/19 | செப்டம்பர் 2022 | இல. 15, தலாவ வீதி, கெக்கிராவ. |
| 01/05/12/19 | செப்டம்பர் 2022 | இல. 24, சிலாபம் வீதி, ஆனமடுவ. |
| 01/05/12/19 | செப்டம்பர் 2022 | இல. 96, அகலவத்த வீதி, மத்துகம. |
| 01/05/12/19 | செப்டம்பர் 2022 | இல. 87, பிரதான வீதி, பிட்டிகல. |
| 01/05/12/19 | செப்டம்பர் 2022 | இல. 14, பிரதான வீதி, எல்பிட்டிய. |
| 01/05/12/19 | செப்டம்பர் 2022 | இல. 48, இரத்தினபுரி வீதி, பதுரலிய. |
| 02/06/13/20 | செப்டம்பர் 2022 | இல. 134, பிரதான வீதி, வென்னப்புவ. |
| 02/06/13/20 | செப்டம்பர் 2022 | இல. 106C, குருநாகல் வீதி, புத்தளம். |
| 02/06/13/20 | செப்டம்பர் 2022 | இல. 84, பிரதான வீதி கல்பிட்டிய. |
| 02/06/13/20 | செப்டம்பர் 2022 | இல. 356, பிரதான வீதி, நீர்கொழும்பு. |
| 02/06/13/20 | செப்டம்பர் 2022 | இல. 40A, கொழும்பு வீதி, சிலாபம். |
| 02/06/13/20 | செப்டம்பர் 2022 | இல. 110, சிலாபம் வீதி, கொச்சிகடை. |
| 02/06/13/20 | செப்டம்பர் 2022 | இல. 57, வெயாங்கொட வீதி, மினுவாங்கொட. |
| 02/06/13/20 | செப்டம்பர் 2022 | இல. 229/1, கடவத்த வீதி, கனேமுல்ல. |
| 02/06/13/20 | செப்டம்பர் 2022 | இல. 69, கிரஉல்ல வீதி, திவுலபிட்டிய. |
| 02/06/13/20 | செப்டம்பர் 2022 | இல. 107, சென் ஜோசப் வீதி, நீர்கொழும்பு. |
| 02/06/13/20 | செப்டம்பர் 2022 | இல. 75A, சிலாபம் வீதி, மாரவில. |
| 02/06/13/20 | செப்டம்பர் 2022 | இல. 434, பேஸ்லைன வீதி, அவரிவத்த, கட்டுநாயக்க. |
| 02/06/13/20 | செப்டம்பர் 2022 | இல. 661/A, தேவத்த வீதி, ராகம. |
| 02/06/13/20 | செப்டம்பர் 2022 | இல. 6/1/1, பழைய நீர்கொழும்பு வீதி, ஜா-எல. |
| 02/06/13/20 | செப்டம்பர் 2022 | இல. 39, கொழும்பு வீதி, கந்தானை. |
| 02/06/13/20 | செப்டம்பர் 2022 | இல. 18, எலகந்த, ஹெந்தல, வத்தளை. |
| 02/06/13/20 | செப்டம்பர் 2022 | இல. 17, ஸ்டேசன் வீதி, ஹெந்தல சந்தி, வத்தளை. |
| 02/06/13/20 | செப்டம்பர் 2022 | இல. 350/16, கொழும்பு வீதி, தெல்கொட. |
| 02/06/13/20 | செப்டம்பர் 2022 | இல. 484, அவிசாவளை வீதி, கடுவளை |
| 02/06/13/20 | செப்டம்பர் 2022 | இல. 722, வராகொட வீதி, விஹாரை சந்தி, களனி. |
| 02/06/13/20 | செப்டம்பர் 2022 | இல. 44, மாகொல வீதி, கிரிபத்கொட. |
| 02/06/13/20 | செப்டம்பர் 2022 | இல. 175, கண்டி வீதி, கிரிபத்கொட. |
| 02/06/13/20 | செப்டம்பர் 2022 | இல. 136/12H, கண்டி வீதி, கடவத்தை. |
| 02/06/13/20 | செப்டம்பர் 2022 | இல. 145, மலே வீதி, கொழும்பு 02. |
| 02/06/13/20 | செப்டம்பர் 2022 | இல. 66, காலி வீதி, கல்கிசை. |
| 02/06/13/20 | செப்டம்பர் 2022 | இல. 11, கல்தெமுல்ல வீதி, மொரட்டுவ. |
| 02/06/13/20 | செப்டம்பர் 2022 | இல. 20, தர்மபால மாவத்தை, கொழும்பு 03. |
| 02/06/13/20 | செப்டம்பர் 2022 | இல. 245, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10. |
| 02/06/13/20 | செப்டம்பர் 2022 | இல. 54, டி.எஸ்.சேனாநாயக்க மாவத்தை, பொரளை. |
| 02/06/13/20 | செப்டம்பர் 2022 | இல. 197, டீன்ஸ் வீதி, கொழும்பு 10. |
| 02/06/13/20 | செப்டம்பர் 2022 | இல. 556, 558, மருதானை வீதி, கொழும்பு 10. |
| 02/06/13/20 | செப்டம்பர் 2022 | இல. 239, கிருல வீதி, நாரஹேன்பிட்டி. |
| 02/06/13/20 | செப்டம்பர் 2022 | இல. 129, பழைய காலி வீதி, மொரட்டுவ. |
| 02/06/13/20 | செப்டம்பர் 2022 | இல. 68, ஹொரண வீதி, பிலியந்தலை. |
| 02/06/13/20 | செப்டம்பர் 2022 | இல. 28, தெஹிவளை வீதி, பொரலஸ்கமுவ. |
| 02/06/13/20 | செப்டம்பர் 2022 | இல. 227, டி சொய்ஸா வீதி, மொரட்டுமுல்ல, மொரட்டுவ. |
| 03/07/14/21 | செப்டம்பர் 2022 | இல. 118A, கொழும்பு வீதி, குருநாகல். |
| 03/07/14/21 | செப்டம்பர் 2022 | இல. 103A, கொழும்பு வீதி, குருநாகல். |
| 03/07/14/21 | செப்டம்பர் 2022 | இல. 21, தம்புளை வீதி, குருநாகல். |
| 03/07/14/21 | செப்டம்பர் 2022 | இல. 12, பிரதான வீதி, குளியாப்பிட்டி. |
| 03/07/14/21 | செப்டம்பர் 2022 | இல. 31, குருநாகல் வீதி, கலேவெல. |
| 03/07/14/21 | செப்டம்பர் 2022 | இல. 35, சரசவி கட்டிடம், பிரதான வீதி, நாரம்மல. |
| 03/07/14/21 | செப்டம்பர் 2022 | இல. 835/2A, தலங்கம வடக்கு, மாலபே. |
| 03/07/14/21 | செப்டம்பர் 2022 | இல. 365, ஹைலெவல் வீதி, கொட்டாவ. |
| 03/07/14/21 | செப்டம்பர் 2022 | இல. 76, ஹைலெவல் வீதி, ஹோமகம. |
| 03/07/14/21 | செப்டம்பர் 2022 | இல. 347A, கோட்டே வீதி, ராஜகிரிய |
| 03/07/14/21 | செப்டம்பர் 2022 | இல. 69, தெஹிவளை வீதி, மஹரகம. |
| 03/07/14/21 | செப்டம்பர் 2022 | இல. 227/A, ஹைலெவல் வீதி, வத்தேகெதர, மஹரகம |
| 03/07/14/21 | செப்டம்பர் 2022 | இல. 124/A, துட்டுகெமுனு வீதி, கொஹுவல. |
| 03/07/14/21 | செப்டம்பர் 2022 | இல. 165, தர்மபால மாவத்தை, கொழும்பு 07. |
| 03/07/14/21 | செப்டம்பர் 2022 | இல. 50/12, கொடகம வீதி, அத்துருகிரிய. |
| 03/07/14/21 | செப்டம்பர் 2022 | இல. 04, பாணந்துறை வீதி, பண்டாரகம. |
| 03/07/14/21 | செப்டம்பர் 2022 | இல. 18, கெசெல்வத்த, பாணந்துறை. |
| 03/07/14/21 | செப்டம்பர் 2022 | இல. 508, காலி வீதி, பாணந்துறை. |
| 03/07/14/21 | செப்டம்பர் 2022 | இல. 103, பாணந்துறை வீதி, ஹொரணை. |
| 03/07/14/21 | செப்டம்பர் 2022 | இல. 534, காலி வீதி, வாத்துவ. |
| 03/07/14/21 | செப்டம்பர் 2022 | இல. 334, பிரதான வீதி, களுத்துறை தெற்கு. |
| 03/07/14/21 | செப்டம்பர் 2022 | இல. 358/D, மத்துகம வீதி, தர்கா நகர். |
| 03/07/14/21 | செப்டம்பர் 2022 | இல. 175/A, காலி வீதி, பேருவளை. |
| 03/07/14/21 | செப்டம்பர் 2022 | இல. 358, காலி வீதி, அளுத்கம. |
| 03/07/14/21 | செப்டம்பர் 2022 | இல. 84A, காலி வீதி, தெஹிவளை. |
| 03/07/14/21 | செப்டம்பர் 2022 | இல. 124, காலி வீதி, தெஹிவளை. |
| 03/07/14/21 | செப்டம்பர் 2022 | இல. 224, காலி வீதி, வெள்ளவத்தை. |
| 03/07/14/21 | செப்டம்பர் 2022 | இல. 269, பிரதான வீதி, அத்திடிய. |
| 03/07/14/21 | செப்டம்பர் 2022 | இல. 275/75, பேராசிரியர். ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07. |
| 03/07/14/21 | செப்டம்பர் 2022 | இல. 676, காலி வீதி, கொழும்பு 03. |
| 03/07/14/21 | செப்டம்பர் 2022 | இல. 51A, டபிள்யூ.ஏ.சில்வா மாவத்த, கொழும்பு - 06 |
| 03/07/14/21 | செப்டம்பர் 2022 | இல. 150, பிரதான வீதி, காலி. |
| 03/07/14/21 | செப்டம்பர் 2022 | இல. 96/2, காலி வீதி, அம்பலாங்கொட. |
| 03/07/14/21 | செப்டம்பர் 2022 | இல. 598 E, ஹிரிம்புர வீதி, கராபிட்டிய. |
| 08/15/22/26 | செப்டம்பர் 2022 | இல. 56, 57, எட்வின் விக்ரமரட்ன சொப்பிங் கம்பிளெக்ஸ், புதிய நகரம், மஹியங்கனை. |
| 08/15/22/26 | செப்டம்பர் 2022 | இல. 44/1, புதிய பேருந்து தரிப்பிட வீதி, மொனராகலை. |
| 08/15/22/26 | செப்டம்பர் 2022 | இல.10/2, இலங்கை வங்கிக்கு எதிரே, புதிய நகரம், தெஹியத்தகண்டிய. |
| 08/15/22/26 | செப்டம்பர் 2022 | இல. 226, டி எஸ் சேனநாயக்க வீதி, கண்டி |
| 08/15/22/26 | செப்டம்பர் 2022 | இல. 153, மடவல வீதி, கட்டுகஸ்தோட்டை. |
| 08/15/22/26 | செப்டம்பர் 2022 | இல. 251, பிரதான வீதி, மாத்தளை. |
| 08/15/22/26 | செப்டம்பர் 2022 | இல. 55, லோவர் வீதி, பதுளை. |
| 08/15/22/26 | செப்டம்பர் 2022 | இல. 167, பிரதான வீதி, பண்டாரவளை. |
| 08/15/22/26 | செப்டம்பர் 2022 | இல. 3, நுவரெலியா வீதி, வெலிமடை. |
| 08/15/22/26 | செப்டம்பர் 2022 | இல. 26, வங்கி வீதி, பதுளை. |
| 08/15/22/26 | செப்டம்பர் 2022 | இல. 71, ராணி எலிசபெத் மாவத்தை, நுவரெலியா. |
| 08/15/22/26 | செப்டம்பர் 2022 | இல. 473, நுவரெலியா வீதி, புஸ்ஸல்லாவ |
| 08/15/22/26 | செப்டம்பர் 2022 | இல. 22, நுவரெலியா வீதி, கம்பளை. |
| 08/15/22/26 | செப்டம்பர் 2022 | இல. 115, கொட்டுகொடெல்ல வீதி, கண்டி. |
| 08/15/22/26 | செப்டம்பர் 2022 | இல. 13A, கண்டி வீதி, கெலிஓயா. |
| 08/15/22/26 | செப்டம்பர் 2022 | இல. 52, தன்பார் வீதி, ஹட்டன். |
| 08/15/22/26 | செப்டம்பர் 2022 | இல. 175, பிரதான வீதி, மஸ்கெலியா. |
| 08/15/22/26 | செப்டம்பர் 2022 | இல. 66, நாவலபிட்டிய வீதி, கம்பளை. |
| 08/15/22/26 | செப்டம்பர் 2022 | இல. 298, கொழும்பு வீதி, பிலிமத்தலாவ. |
| 08/15/22/26 | செப்டம்பர் 2022 | இல. 73, கொத்மலை வீதி, நாவலபிட்டி. |
| 08/15/22/26 | செப்டம்பர் 2022 | இல. 230, கண்டி வீத, மாவனல்ல. |
| 08/15/22/26 | செப்டம்பர் 2022 | இல. 367/1, அளுத் மாவத்தை, கொழும்பு 15. |
| 08/15/22/26 | செப்டம்பர் 2022 | இல. 81, மோதர வீதி, கொழும்பு 15. |
| 08/15/22/26 | செப்டம்பர் 2022 | இல. 03, சென் லூசியாஸ் வீதி, கொட்டாஞ்சேனை. |
| 08/15/22/26 | செப்டம்பர் 2022 | இல. 3/729, பாம் வீதி, கொழும்பு 15. |
| 08/15/22/26 | செப்டம்பர் 2022 | இல. 47, கிராண்ட்பாஸ் வீதி, கொழும்பு 14. |
| 08/15/22/26 | செப்டம்பர் 2022 | இல. 04, மணிக்கூட்டு கோபுரம் எதிரே, அம்பாறை |
| 08/15/22/26 | செப்டம்பர் 2022 | MPCS கட்டிடம், பிரதான வீதி, சாய்ந்தமருது - 09. |
| 08/15/22/26 | செப்டம்பர் 2022 | பிரதான வீதி, மட்டக்களப்பு வீதி, கல்முனை. |
| 08/15/22/26 | செப்டம்பர் 2022 | இல. 25, ஹிஜ்ரா சந்தி, கல்முனை வீதி, சம்மாந்துறை. |
| 08/15/22/26 | செப்டம்பர் 2022 | இல. 28, சாகம வீதி, அக்கரைப்பற்று - 08 |
| 08/15/22/26 | செப்டம்பர் 2022 | பிரதான வீதி, பொத்துவில். |
| 08/15/22/26 | செப்டம்பர் 2022 | இல. CC/44, பிரதான வீதி, மத்திய முகாம் 03, அம்பாறை. |
| 09/16/23/27 | செப்டம்பர் 2022 | இல. 24/A, பிரதான வீதி, ஹங்வெல்ல. |
| 09/16/23/27 | செப்டம்பர் 2022 | இல. 25, யட்டியாந்தோட்ட வீதி, அவிசாவளை |
| 09/16/23/27 | செப்டம்பர் 2022 | இல. 141/A, கொலன்னாவ வீதி, கொலன்னாவ. |
| 09/16/23/27 | செப்டம்பர் 2022 | இல. 25A, பிரதான வீதி, எஹெலியகொட. |
| 09/16/23/27 | செப்டம்பர் 2022 | இல. 49, சேனாநாயக்க மாவத்தை, இரத்தினபுரி. |
| 09/16/23/27 | செப்டம்பர் 2022 | இல. 34, பிரதான வீதி, திஸ்ஸமஹாராமய |
| 09/16/23/27 | செப்டம்பர் 2022 | இல. 21, புதிய நகர வீதி, எம்பிலிபிட்டிய. |
| 09/16/23/27 | செப்டம்பர் 2022 | இல. 19, தனயம் பிவிசும் மாவத்தை, பலாங்கொட. |
| 09/16/23/27 | செப்டம்பர் 2022 | இல. 275, சென்றல் வீதி, திருகோணமலை. |
| 09/16/23/27 | செப்டம்பர் 2022 | இல. E 20/3/3, திருகோணமலை வீதி, சேருநுவர. |
| 09/16/23/27 | செப்டம்பர் 2022 | இல. 175, திருகோணமலை வீதி, மட்டக்களப்பு. |
| 09/16/23/27 | செப்டம்பர் 2022 | இல. 71/A, பிரதான வீதி, ஆரையம்பதி. |
| 09/16/23/27 | செப்டம்பர் 2022 | இல. 50/2, பிரதான வீதி, கிண்ணியா. |
| 09/16/23/27 | செப்டம்பர் 2022 | பிரதான வீதி, 10 ஆம் பிரிவு, கொக்கட்டிச்சோலை |
| 09/16/23/27 | செப்டம்பர் 2022 | சந்தைக்கு எதிரே, பிரதான வீதி, வாழைச்சேனை |
| 09/16/23/27 | செப்டம்பர் 2022 | பிரதான வீதி கிரண். |
| 09/16/23/27 | செப்டம்பர் 2022 | திருகோணமலை வீதி கண்டலடி, வாகரை. |
| 09/16/23/27 | செப்டம்பர் 2022 | இல. 114, பிரதான வீதி, கந்தளாய். |
| 09/16/23/27 | செப்டம்பர் 2022 | பாடசாலைக்கு எதிரே, வைத்தியசாலை வீதி, களுவாஞ்சிக்குடி. |
| 09/16/23/27 | செப்டம்பர் 2022 | சந்தைத் தொகுதிக்கு எதிரே, பிரதான வீதி, செங்கலடி |
| 09/16/23/27 | செப்டம்பர் 2022 | பிரதான வீதி, அட்டாளைச்சேனை |
| 09/16/23/27 | செப்டம்பர் 2022 | இல. 151,153, புன்னக்குடா வீதி, ஏறாவூர் 3, ஏறாவூர். |
| 09/16/23/27 | செப்டம்பர் 2022 | இல. 69, பிரதான வீதி, அச்சுவேலி. |
| 09/16/23/27 | செப்டம்பர் 2022 | இல. 136, கண்டி வீதி, சாவகச்சேரி. |
| 09/16/23/27 | செப்டம்பர் 2022 | இல. 440, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். |
| 09/16/23/27 | செப்டம்பர் 2022 | இல. 111, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். |
| 09/16/23/27 | செப்டம்பர் 2022 | இல. 406, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். |
| 09/16/23/27 | செப்டம்பர் 2022 | இல. 10, பருத்தித்துரை வீதி, நெல்லியடி. |
| 09/16/23/27 | செப்டம்பர் 2022 | இல. 187, பிரதான வீதி, மன்னார். |
| 09/16/23/27 | செப்டம்பர் 2022 | இல. 497, கண்டி வீதி, கிளிநொச்சி. |
| 09/16/23/27 | செப்டம்பர் 2022 | இல. 32B, 2ஆம் குறுக்குத் தெரு, வவுனியா. |
| 09/16/23/27 | செப்டம்பர் 2022 | 1ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு. |
| 09/16/23/27 | செப்டம்பர் 2022 | P.W வீதி, முல்லைத்தீவு. |
| 09/16/23/27 | செப்டம்பர் 2022 | இல. 55, கே கே எஸ் வீதி, சுன்னாகம். |
| 09/16/23/27 | செப்டம்பர் 2022 | இல. 171, யாழ்ப்பாணம் வீதி, மானிப்பாய். |
| 09/16/23/27 | செப்டம்பர் 2022 | இல. 95, பலாலி வீதி, திருநெல்வேலி |
| 09/16/23/27 | செப்டம்பர் 2022 | பிரதான வீதி, மல்லாவி |
| 09/16/23/27 | செப்டம்பர் 2022 | இல. 266, தெல்லிப்பளை வீதி, வட்டு தென்மேற்கு, வட்டுக்கோட்டை |
| 09/16/23/27 | செப்டம்பர் 2022 | இல 3, 5 வல்லை வீதி சங்கானை. |
| 09/16/23/27 | செப்டம்பர் 2022 | இல 126, 128 பிரதான வீதி, பருத்தித்துறை. |
| 09/16/23/27 | செப்டம்பர் 2022 | இல 06, பருத்தித்துறை வீதி, கோப்பாய். |
| 09/16/23/27 | செப்டம்பர் 2022 | கண்டி வீதி, கொடிகாமம். |


எந்தவொரு முன்னறிவித்தலுமின்றி ஏலத்தை நிறுத்தவோ, பின்தள்ளிப் போடவோ எல்பீ ஃபினான்ஸ் பிஎல்சீ நிறுவனத்துக்கு உரிமம் உள்ளது.

**LB FINANCE**
தலைமை முகாமையாளர் - தங்கக் கடன் பிரிவு
275/75, பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.

BE BETTER INFORMED! News you can trust now free on your mobile phone.

Dinamina
Daily News
Thinakaran

AVAILABLE AT




Visit - apps.lakehouse.lk
DOWNLOAD TODAY!
LAKE HOUSE

# நல்லூர் கந்தன் உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பம்



இலங்கையிலுள்ள கந்தகோட்டங்களுள் ஒன்றாக முக்கியத்துவம் பெறுவதுடன், யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள முப்பெரும் முருக சேஷ்திரங்களுள் ஒன்றாகவும் சிறப்புப் பெறும் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவப் பெருவிழா இன்று (02.08.2022) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

நீண்டகால வரலாற்றுப் பெருமை வாய்ந்த இந்த ஆலயத்தில் பாரம்பரிய சமய கலாசார நடைமுறைக்கு அமைந்த வகையிலேயே நித்திய மற்றும் மகோற்சவ கருமங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவது சிறப்புக்குரியது. இந்த வகையில், பலவருட காலமாக இடம்பெற்று வரும் பாரம்பரிய வழமைக்கு அமைய இவ்வருடமும் கொடிச்சீலை வடிவமைப்பாளர்களிடம் காளாஞ்சியும் மகோற்சவ பத்திரிகையும் கையளிக்கும் நிகழ்வு கடந்த (ஜூலை) 24ஆம் திகதி இடம்பெற்றது.

ஆலய பிரதம குருவும் தொண்டர்களும் பாரம்பரிய முறைப்படி மாட்டு வண்டியில் சென்று அவற்றைக் கையளித்தனர். வடிவமைக்கப்பட்ட கொடிச்சீலை நேற்று அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் எடுத்து வரப்பட்டு ஆலய பிரதம குருவிடம் ஒப்படைக்கப்பட்டது. இன்று ஆரம்பமாகும் மகோற்சவப் பெருவிழா தொடர்ந்து இருபத்தைந்து நாட்கள் நடைபெறும். பத்தாவது நாளாகிய எதிர்வரும் 11ஆம் திகதி மாலை மஞ்சம் உற்சவமும், 17ஆவது நாளாகிய 18ஆம் திகதி மாலை அருணகிரிநாதர் உற்சவமும், 18ஆவது நாளாகிய 19ஆம் திகதி மாலை கார்த்திகை உற்சவமும், 20ஆவது நாளாகிய 21ஆம் திகதி மாலை கைலாச வாகன உற்சவமும், 21ஆவது நாளாகிய 22ஆம் திகதி மாலை வேல் விமானம் உற்சவமும், 22ஆவது நாளாகிய 23ஆம் திகதி காலை தெண்டாயுதபாணி உற்சவமும் (மாம்பழத் திருவிழா), அதேதினம் மாலை ஒருமுகத் திருவிழாவும், 23ஆவது நாளாகிய 24ஆம் திகதி மாலை சப்பரத் திருவிழாவும், 24ஆவது நாளாகிய 25ஆம் திகதி காலை இரதோற்சவமும், 25ஆவது நாளாகிய 26ஆம் திகதி காலை தீர்த்தோற்சவமும் இடம்பெற்று, மறுநாள் 27ஆம் திகதி பூங்காவன திருவிழாவுடன் இவ்வருட மகோற்சவம் நிறைவுபெறுகிறது.

நல்லூர்க் கந்தன் ஆலயத்தின் வரலாற்றுப் பதிவுகளை நோக்கும்போது, எந்தவொரு காலத்திலும் குறிப்பாக போர்க்காலச் சூழ்நிலைகளின் போதும், கொரோனா கிருமித் தொற்று மேலோங்கியதால் ஏற்பட்ட முடக்க காலத்தின் போதும் ஆலய வருடாந்த மகோற்சவம் ரத்துச் செய்யப்பட்டதாகவோ அல்லது பிற்போடப்பட்டதாகவோ தகவல் இல்லை. திட்டமிடப்பட்டபடி குறிக்கப்பட்ட தினங்களில், குறிப்பிட்ட கால அட்டவணையின் பிரகாரம் ஆலய உள்வீதியில் அனைத்து உற்சவங்களும் சிறப்பாக நடத்தி முடிக்கப்பட்டிருக்கின்றன.

அந்த வகையில் கொரோனா தொற்றுக் காலப்பகுதியான 2020ஆம் ஆண்டு மட்டுப்படுத்தப்பட்ட அடியார்களுடன் மகோற்சவம் நடத்தப்பட்டது. கடந்த ஆண்டு (2021) அடியார்கள் எவரும் அனுமதிக்கப்படாத நிலையில் உள்வீதியில் உற்சவம் இடம்பெற்றது. அனைத்து நிகழ்வுகளும் தொலைக்காட்சி மற்றும் சமூக ஊடகங்கள் மூலமாக நேரலையாக அடியார்களுக்கு வழங்கப்பட்டிருந்தமை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

இம்முறை வழமைபோல ஆலய மகோற்சவத்தை சிறப்பாக நடத்துவதற்கான ஏற்பாடுகளை ஆலய நிர்வாகத்துடன் இணைந்து யாழ். மாநகர சபையும் மேற்கொள்கிறது. இது தொடர்பாக யாழ். மாநகர சபை முதல்வர் கடந்த வாரம் ஊடகவியலாளர் சந்திப்பொன்றையும் நடத்தியிருந்தார். ஆலயத்தின் வீதியைச் சுற்றியுள்ள பகுதிகள் நேற்று முதல் ஆலய வைரவர் சாந்தி பூசை வரையில் (28.08.2022) பொதுப் போக்குவரத்துக்கு தடை செய்யப்பட்டிருப்பதால் இந்த நாட்களில் மாற்றுப் பாதைகளை பயன்படுத்துமாறு முதல்வர் தெரிவித்திருக்கிறார்.

ஆலய வீதியில் வழமைபோல இவ்வருடமும் வியாபார நடவடிக்கைகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. திருட்டுச் சம்பவங்களை தவிர்க்கும் வகையில் ஆலயச் சூழலில் யாழ். மாநகர சபையால் கண்காணிப்பு கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. கொரோனா கிருமித் தொற்று எச்சரிக்கை காணப்படுவதால் ஆலயத்திற்கு வருகைதரும் ஒவ்வொருவரும் தங்களது சுகாதாரத்தில் கவனம் எடுத்து செயற்படவேண்டிய அவசியம் ஏற்பட்டிருப்பதால் சுகாதார விதிமுறைகளை தவறாது பின்பற்ற வேண்டும் என யாழ். மாநகர முதல்வர் குறிப்பிட்டிருக்கிறார்.

நல்லூர்க் கந்தன் ஆலயத்தின் மகோற்சவம் கடந்த இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் இம்முறை சிறப்பாக, பரந்த அளவில் நடைபெறவிருப்பதால் நாட்டின் பல பகுதிகளிலிருந்து மட்டுமல்ல, உலக நாடுகளிலிருந்தும் ஏராளமான பக்தர்கள் ஆலயத்திற்கு வருகை தரவிருக்கிறார்கள் என அறியமுடிகிறது. இவ்வருடம் அடியார்கள் ஆட்டக் காவடி, துலாக்காவடி போன்ற நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

**அ. கனகசூரியர்**

## கொடிச்சீலை எடுத்துவரும் நிகழ்வு

**யாழ் விசேட நிருபர்**



வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவ பெருவிழா இன்றைய தினம் செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள நிலையில் சம்பிரதாய பூர்வமாக கொடியேற்றத்துக்கான கொடிச்சீலை எடுத்துவரும் நிகழ்வு நேற்றைய தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது.

செங்குந்தர் பரம்பரையினரால் நல்லூர் ஆலயக் கொடியேற்றத்திற்கான கொடிச்சீலை சம்பிரதாயப் பூர்வமாக ஆலயத்தில் ஒப்படைக்கப்படுவது பாரம்பரிய வழக்கமாகும். நல்லூரிலுள்ள செங்குந்த மரபினர் வருடா வருடம் கொடியேற்றத்திற்கான கொடிச்சீலையை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அதன்படி யாழ்.சட்டநாதர் சிவன் ஆலயத்திற்கு அருகில் உள்ள வேல் மடம் முருகன் ஆலயத்தில் காலை 9 மணிக்கு நடைபெற்ற விஷேட பூஜை வழிபாடுகளை தொடர்ந்து அங்கிருந்து கொடிச்சீலை பருத்தித்துறை வீதி ஊடக எடுத்து செல்லப்பட்டு காலை 10.00 மணியளவில் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தினை வந்தடைந்தது.

அங்கு ஆலயத்தின் வெளிவீதி உலாசென்று பூஜைகள் இடம்பெற்று கொடிச்சீலை நல்லூர் ஆலய பிரதம குருக்களிடம் கையளிக்கப்பட்டது.

## வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் 100 நாள் செயல் முனைவு மன்னாரில் ஆரம்பம்

**மன்னார் குறூப் நிருபர்**



'கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரல்' எனும் தொனிப் பொருளில் வடக்கு கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களில் 100 நாட்கள் நடைபெற உள்ள செயல் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்று திங்கட்கிழமை (1) மன்னார் பிரதான சுற்றுவட்டத்துக்கு அருகாமையில் இடம் பெற்றது.

வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் அனுசரணையில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் ஆரம்ப நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் யாட்சன் பிகிராடோ , மன்னார் மாவட்ட பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் இணைப்பாளர் எஸ். திலீபன் மற்றும் கிராம மட்ட அமைப்புகள் ,விவசாய, மீனவ சங்கங்கள்,பெண்கள் அமைப்புகள் , மாணவர் அமைப்புகள்,சிவில் சமூக அமைப்புகள் மனித உரிமை ஆர்வலர்கள், மன்னார் மெசிடோ பணியாளர்களும் கலந்து கொண்டார்கள். செயல் திட்டத்தில் கலந்து கொண்ட பொது மக்களால் மகஜர் ஒன்று வாசிக்கப்பட்டது.

அந்த மகஜரில் "வடக்கு கிழக்கு மக்களுக்கான அரசியல் தீர்வு, அதிகாரப் பரவலாக்கம் என்பது இலங்கையின் அரசியலமைப்பின் அங்கமாயிருப்பதுடன், சர்வதேச சமூகத்தினால், ஐக்கிய நாடுகள் சபையினாலும் வரவேற்கப்படுகின்ற ஒன்றாகும்.

ஆகவே, எமக்கான உரிமையை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தை இலங்கை அரசுக்கும், நட்பு நாடான இந்தியாவுக்கும், சர்வதேச நாடுகளுக்கும் வலியுறுத்தி கொண்டு வடக்கு கிழக்கு வாழ் மக்களான நாம், எமது சாத்வீகமான, ஜனநாயகமான நூறு நாட்கள் செயல்முனைவு ஆவணி மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கிறோம். வடக்கு கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்"எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## தேசிய எரிபொருள் அட்டை மூலமான விநியோகம்: வவுனியா எரிபொருள் நிலையம் தேசிய ரீதியில் முதலிடம்

**வவுனியா விசேட நிருபர்**

தேசிய எரிபொருள் அட்டையை பயன்படுத்தி (கியூ ஆர் கோட்) எரிபொருள் விநியோக நடவடிக்கையில் தேசிய ரீதியில் வவுனியா வேப்பங்குளம் பகுதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் முதலாமிடம் பெற்றுள்ளது.

நாடு பூராகவும் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்கு தீர்வு காணும் முகமாக தேசிய எரிபொருள் அட்டையை (கியூ ஆர் கோட்) எரிசக்தி அமைச்சு அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் பரீட்சார்த்த நடவடிக்கைகள் 31 ஆம் திகதி வரை இடம்பெற்றது.

31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் தேசிய எரிபொருள் அட்டையை (கியூஆர் கோட்) பயன்படுத்தி எரிபொருள் விநியோகத்தில் ஈடுபட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களை எரிசக்தி அமைச்சு வரிசைப்படுத்தியுள்ளது. அதில், தேசிய எரிபொருள் அட்டையை சிறப்பாக பயன்படுத்திய எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வவுனியா வேப்பங்குளம் பகுதியில் அமைந்துள்ள ஜி.எச்.ஏ.டீ. சில்வா எரிபொருள் நிரப்பு நிலையம் தேசிய ரீதியில் முதலாமிடம் பெற்றுள்ளது.

இரண்டாம் இடத்தை அனுராதபுரத்தில் உள்ள உயன்வத்தை எரிபொருள் நிரப்பு நிலையமும், மூன்றாம் இடத்தை யாழ்ப்பாணம் கொக்காவில் பகுதியில் அமைந்துள்ள ஜெயபிரணவன் எரிபொருள் நிரப்பு நிலையமும் பெற்றுள்ளன.

அரசியல் கைதிகளை விடுவித்தால்

## சர்வகட்சி அரசாங்கம் அமைக்க தமிழ் தரப்பினர் பரிசீலிக்கலாம்

வடமாகாண முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ்

**(தலைமன்னார் விஷேட நிருபர் )**

சர்வகட்சி அரசாங்கம் அமைப்பதற்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்திருக்கும் இந்தவேளையில் தமிழ் மக்கள் மத்தியில் புரையோடியிருக்கும் பிரச்சனைகளுக்கு தீர்வு எட்டுவதற்கு முதலில் நல்லெண்ண செயற்பாடாக தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படுவதன் மூலம் தமிழ் கட்சி தரப்பினர் சர்வ கட்சி அரசு அமைவதற்கு சாதகமாக அமைய வாய்ப்பு ஏற்படும் என வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் தெரிவித்துள்ளார்.

சர்வ கட்சி அரசாங்கம் அமைப்பதற்காக ஜனாதிபதி விடுத்திருக்கும் அழைப்பு தொடர்பாக தமிழ் தரப்பு அரசியல் கட்சிகளுக்கு சபா குகதாஸ் விடுத்திருக்கும் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டில் சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை அமைப்பது தொடர்பாக ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார். உண்மையிலேயே சர்வ கட்சி அரசாங்கம் அமைய பெறுவதற்கு சிங்கள பெரும்பான்மை கட்சிகள் சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் பெரும்பாலானோர் அவற்றிற்கு ஆதரவு வழங்க இருக்கின்றனர். அந்த வகையில் சிறுபான்மை கட்சிகளின் ஆதரவையும் அவர் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்த்து இருக்கின்றார்.

தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படும் பட்சத்தில் தமிழ் மக்களின் மத்தியில் நிலவும் உடனடி மற்றும் நீண்ட கால பிரச்சனைகள் தொடர்பாக பேச்சுவார்த்தை மூலம் பரிசீலிக்க கூடியதாக இருக்கும்.ஏனென்றால் தமிழ் மக்களின் உடனடி பிரச்சனைகள் பல தீர்க்கப்பட வேண்டி இருக்கின்றது.இதில் முதன்மையாக இருப்பது அரசியல் கைதிகளின் விவகாரம். இந்த அரசியல் கைதிகளை நல்லெண்ண அடிப்படையில் விடுதலை செய்யப்படும்போது சர்வ கட்சி அரசாங்கம் தொடர்பான விடயத்தை தமிழர் தரப்பு பரீசீலிக்க முடியும்.

அந்த வகையில் பயங்கரவாத தடைச்சட்டம், காணி அபகரிப்பு மற்றும் வடக்கு கிழக்கு பகுதிகள் மட்டுமல்லாது ஒட்டு மொத்த நாட்டின் பொருளாதாரத்தை கட்டி எழுப்ப புலம்பெயர்ந்தோரை இந்த நாட்டில் முதலீடு செய்வதற்கு ஒரு சாதகமான செயற்பாடாக அது அமையும் .

தமிழ் மக்களின் நீண்ட கால அரசியல் பிரச்சனைகளுக்கு சர்வ கட்சி அரசாங்கத்தின் மூலம் ஒரு நிலையான அரசியல் தீர்வின் மூலம் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுக்கான உடனடி தீர்வு எட்டப்பட வேண்டும்.

இவ்வாறான சூழ்நிலை உருவாகும்போது தமிழ் தரப்பு சர்வ கட்சி அரசாங்கம் தொடர்பாக சாதகமாக பரீசீலிக்க கூடியதாக இருக்கும். சந்தர்ப்பம் கிடைக்கும்போது அவற்றை சரியாக தமிழ் தரப்பினர் பயன்படுத்த வேண்டும்.

ஆகவே முதலில் அரசியல் தமிழ் கைதிகள் விடுதலை நல்லெண்ண வெளிப்பாடாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நடைபெறுமாயின் தமிழ் மக்களின் நீண்டகால மற்றும் உடனடி பிரச்சனைகளுக்கு பேச்சுவார்த்தை மேற்கொள்வதன் மூலம் ஜனாதிபதியின் அழைப்பு சாதகமாக அமைய வாய்ப்பு உண்டு என தெரிவித்துள்ளார்.

## வவுனியா பல்கலைக்கழகத்திற்கு விரைவில் மருத்துவ பீடம்

துணைவேந்தர் மங்களேஸ்வரன் தெரிவிப்பு



**கோவில் குளம் குறூப் நிருபர்**

வவுனியா பல்கலைக்கழகத்திற்கு மருத்துவபீடம் ஒன்றை அமைப்பதற்கான திட்டமுன்மொழிவை பல்கலைகழக மானியங்கள் ஆணைக் குழுவின் அங்கிகாரத்திற்காக சமர்ப்பிக்கவுள்ளதாக துணைவேந்தர் ரி.மங்களேஸ்வரன் தெரிவித்தார்.

வவுனியாப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டு நேற்றுடன் ஒரு வருடம் பூர்த்தியாவதை முன்னிட்டு இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

மருத்துவபீடம் ஒன்றை அமைப்பதற்கான முன்மொழிவை எமது மூதவையும் பேரவையும் ஏற்றுக் கொண்டுள்ளன.தற்போது அதற்கான திட்டமுன்மொழிவினை பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பவுள்ளோம். இதன் மூலம் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையையும் ஒரு போதனா வைத்தியசாலையாக தரமுயர்த்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம். பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழுவால் எமது திட்ட அறிக்கை அங்கிகரிக்கப்பட்டதுடன் அதன் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படும். குறிப்பாக எதிர்வரும் சில வருடங்களுக்குள் மருத்துவ பீடத்தினை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

அத்துடன் சூழலியல் பீடம் ஒன்றினை உருவாக்குவதற்கும் எமது மூதவையும் பேரவையும் அங்கீகாரம் வழங்கியுள்ளது. வங்கியியல், காப்புறுதி தொடர்பான புதிய கற்கைநெறி ஒன்றை ஆரம்பிப்பதற்கு மானியங்கள் ஆணைக்குழு எமக்கு அனுமதி வழங்கியுள்ளது. குறித்த கற்கைநெறிக்கு க.பொ.த உயரதரத்தில் கடந்தவருடத்தில் சிறப்புத்தேர்ச்சிபெற்ற மாணவர்களை அனுமதிப்பதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றது. மானுடவியல் சமூகவியல் என்ற பீடத்தை ஆரம்பிப்பதற்கான முன்மொழிவையும் சமர்ப்பித்துள்ளோம். அதற்கான அனுமதி கிடைத்ததும் அது விரைவில் ஆரம்பிக்கப்படும்.


பொருளாதார நெருக்கடி நிலமையால் அரசாங்கம் சாதாரண செலவீனங்களை வழங்குவதற்கே உடன்பட்டுள்ளது. நிர்மாண துறைகளிற்கான நிதியினை தராத சூழ்நிலையில் அதனை மேம்படுத்துவதற்காக வெளிநாட்டு நிதி உதவிகளூடாகவும், அரச தனியார் பங்குடமையின் ஊடாகவும் அதனை செய்வதற்கான திட்டங்களை மேற்கொள்ளவுள்ளோம் என்றார்.

# சதுரங்க ஜயசூரிய ஐந்தாம் இடம்

இங்கிலாந்தின் பெர்மிங்ஹாமில் நடைபெற்றுவரும் பொதுநலவாய விளையாட்டுப் போட்டியின் ஆண்களுக்கான பளுதூக்கல் போட்டியில் 67 கிலோகிராம் எடைப்பிரிவில் போட்டியிட்ட சதுரங்க ஜயசூரிய ஐந்தாவது இடத்தை பிடித்தார். இவர், ஸ்னெட்ச் முறையில் 119 கிலோகிராம் எடையையும், கிளீன் எண்ட் ஜெக் முறையில் 140 கிலோகிராம் எடையுடன் மொத்தமாக 259 கிலோகிராம் எடையை தூக்கியிருந்தார்.

இந்தப் போட்டியில் இந்திய வீரர் லால்ரின்னுங்கா ஜெரமி தங்கப் பதக்கத்தை வென்றிருந்ததுடன், சமோவா வீரர் வைப்பவா நெவோ வெள்ளிப்பதக்கத்தையும், நைஜீரியா வீரர் எடிடியோங் ஜோசப் வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

இதேவேளை, ஆண்களுக்கான 73 கிலோகிராம் எடைப்பிரிவில் போட்டியிட்ட இந்திக திசாநாயக்க ஸ்னெட்ச் முறையில் 133 கிலோகிராம் எடையை தூக்கி 4ஆவது இடத்தை பிடித்துக்கொண்டாலும், பின்னர் இடம்பெற்ற கிளீன் எண்ட் ஜெக் முறையில் 160, 161 மற்றும் 167 கிலோகிராம் எடைகளை தூக்க தவறியதன் காரணமாக போட்டியிலிருந்து வெளியேறினார்.


லால்ரின்னுங்கா ஜெரமி

## 20 வயதின் கீழ் போட்டி:

# மாலைதீவை சமன் செய்தது இலங்கை இளையோர் அணி

மாலைதீவுகள் இளையோர் அணிக்கு எதிராக மிகச் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்திய இலங்கை இளையோர் அணி இறுதி நேரத்தில் பெற்ற கோலினால் ஆட்டத்தை 1–1 என சமப்படுத்தியது.

எனவே, ஏற்கனவே இடம்பெற்ற அனைத்துப் போட்டிகளிலும் தோல்வி கண்ட இலங்கை வீரர்கள் தமது இறுதி லீக் மோதலை சமநிலையில் முடித்த வண்ணம் 20 வயதின் கீழ் தெற்காசிய கால்பந்து சம்மேளன சம்பியன்ஷிப் தொடரை நிறைவு செய்துள்ளனர்.

இந்த இரு அணிகளும் தொடரில் தமது முதல் வெற்றியைப் பதிவு செய்வதற்காக கடந்த ஞாயிற்றுக்கிழமை (29) புவனேஷ்வரின் காலிங்க அரங்கில் களம் கண்டிருந்தன. இலங்கைக்கு இது தொடரின் இறுதி லீக் போட்டியாகவும் அமைந்திருந்தது. ஆட்டத்தின் முதல் பாதியில் இலங்கை வீரர்கள் மிகவும் வேகமான ஒரு ஆட்டத்தைக் காண்பித்ததுடன் கோலுக்கான பல முயற்சிகளை மேற்கொண்டனர். எனினும், எதிரணியின் தடுப்பாட்டம் காரணமாக கோல்கள் எதுவும் இலங்கைக்கு கிடைக்கவில்லை.



தொடர்ந்த இரண்டாம் பாதி ஆட்டத்தின் 74ஆவது நிமிடத்தில் இலங்கை அணியின் கோல் திசையில் மாலைதீவுகள் வீரர்கள் மேற்கொண்ட பந்துப் பரிமாற்றங்களின் நிறைவில் அவ்வணியின் அய்ஹம் ஹம்தூன் போட்டியின் முதல் கோலைப் பெற்றார்.

தொடர்ந்தும் வேகத்தைக் குறைக்காமல் ஆடிய இலங்கை அணிக்கு போட்டியின் உபாதையீடு நேரத்தில் கிடைத்த பிரீ கிக் வாய்ப்பின்போது உள்வந்த பந்தை கோலுக்கு அண்மையில் இருந்து இலங்கை அணியின் தலைவர் தேஷான் துஷ்மிக ஹெடர் முறையில் கம்பங்களுக்குள் செலுத்தி ஆட்டத்தை சமப்படுத்தினார்.

எனவே, இறுதி நேர கோலினால் ஆட்டத்தை 1–1 என சமப்படுத்திய இலங்கை வீரர்கள், ஆறுதல் முடிவுடன் தொடரை நிறைவு செய்துள்ளனர்.

OBSERVER SLT-MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2022
44th
Recognizing talent, inspiring greatness
SLTMOBITEL The Connection

## 44th OBSERVER SLT- MOBITEL

மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2022

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் OBSERVER SLT- MOBITEL மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2022

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2022

தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ........................
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை : ........................
(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)
பாடசாலை : ........................
வாக்களித்தவர் பெயர் : ........................
முகவரி : ........................
மொபைல் இல. : ........................

SUNDAY OBSERVER

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:

1வது பரிசு : ரூ. 2,500
2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

44வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், **சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10** எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நிபந்தனைகள்:

SLT- MOBITEL நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்குபெற முடியாது.

ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 06-08-2022 இல. 19





# ரக்பியில் இலங்கை 14ஆம் இடம்

இங்கிலாந்தின் பெர்மிங்ஹாமில் நடைபெற்றுவரும் பொதுநலவாய விளையாட்டுப் போட்டியின் இலங்கை ஆடவர் ரக்பி அணி 12–16 அணிகளை வரிசைப்படுத்தும் போட்டியில், சாம்பியா அணியை எதிர்கொண்டிருந்ததுடன், இந்த போட்டியில் பெற்ற வெற்றியினால் இம்முறை பொதுநலவாய விளையாட்டு விழாவில் தங்களுடைய முதல் வெற்றியை பதிவுசெய்தது. இந்தப்போட்டியில் இலங்கை அணி 27–14 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றி பெற்றிருந்தது.

இந்தப்போட்டியில் வெற்றிபெற்றதன் மூலம் 13ஆவது இடத்துக்கான போட்டியில் ஜமைக்கா அணியை இலங்கை அணி எதிர்கொண்டது. மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இந்தப்போட்டியில் துரதிஷ்டவசமான முறையில் இலங்கை அணி 24–26 என்ற புள்ளிகள் கணக்கில் தோல்வியடைந்தது. இதன் மூலம் 14ஆவது இடத்தை பிடித்து தொடரை நிறைவுசெய்தது. பெண்களுக்கான 7ஆவது இடத்துக்காக ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற போட்டியில், இலங்கை அணி தென்னாபிரிக்காவிடம் புள்ளிகள் எதுவுமின்றி தோல்வியடைந்தது. இந்தப்போட்டியில் தென்னாபிரிக்க அணி 52–0 என வெற்றிபெற்றிருந்தது. எனவே, 8ஆவது இடத்துடன் இம்முறை போட்டித் தொடரை இலங்கை மகளிர் அணி நிறைவுசெய்துகொண்டது.



# பொதுநலவாய சக்கிளோட்ட போட்டிகளின்போது விபத்து



பொதுநலவாய போட்டிகளில் இடம்பெற்ற ஒரு விபத்தில் இங்கிலாந்து சைக்கிளோட்ட வீரர் மட் வோல்ஸ் உள்ளிட்ட சிலர் காயம் அடைந்தனர்.

லண்டன் அரங்கில் ஒலிம்பிக் வீரரான வோல்ஸ் ஓட்டிச் சென்ற சைக்கிள், பாதுகாப்புச் சுவரைத் தாண்டி கூட்டத்துக்குள் புகுந்தது. நாற்பது நிமிடத்துக்கு மேல் சிகிச்சை தரப்பட்ட பின் அவர் மருத்துவ உதவி வாகனத்தில் கொண்டு செல்லப்பட்டார்.

வாகனத்தில் ஏற்றும்போது அவர் விழிப்புடன் இருந்ததாகவும், பேசியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அந்த 15 கிலோமீற்றர் தூர தகுதிச் சுற்றுப் போட்டியில், முன்னால் சென்று கொண்டிருந்த நியூசிலாந்து, அவுஸ்திரேலிய சைக்கிளோட்டிகள் இடறிவிழுந்தபோது அவர்களைத் தவிர்ப்பதற்காக இங்கிலாந்து சைக்கிளோட்ட வீரர் சுவரைத் தாண்ட நேர்ந்தது.

கூட்டத்தில் இருந்த ஆடவர் ஒருவரும், ஒரு சிறுமியும் சாதாரண காயங்களோடு தப்பினர்.

# பாக். மகளிர் அணியை வீழ்த்தியது இந்திய அணி

2022 பொதுநலவாய போட்டியில் மகளிர் கிரிக்கெட் ஆட்டத்தில் பாகிஸ்தானை 8 விக்கெட் வித்தியாசத்தில் இந்திய அணி வீழ்த்தியது.

பெரும் எதிர்பார்ப்புடன் கடந்த ஞாயிறன்று நடைபெற்ற இந்தப் போட்டிக்கான டிக்கெட் அனைத்தும் விற்று தீர்ந்தது. இந்த நிலையில், மழை குறுக்கிட்டதால் ஆட்டம் 18 ஓவர்களாக குறைக்கப்பட்டது.

இதில் நாணய சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுப்பெடுத்தாட தேர்வு செய்தது. ஆரம்ப வீராங்கனை இரம் ஜாவித் டக் அவுட்டாகி வெளியேறினார். இதனையடுத்து 2ஆவது விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்த அணித்தலைவர் மஹ்ருப் மற்றும் முனிபா அலி பொறுப்புடன் விளையாடி 2ஆவது விக்கெட்டுக்கு 50 ஓட்டங்களை சேர்த்த நிலையில், மஹ்ருப் 17 ஓட்டங்களில் வெளியேறினார். இதன் பின் பாகிஸ்தான் மகளிர் அணி பெரும் சரிவை சந்திக்க ஆரம்பித்தது. ஓமைமா 10 ஓட்டங்களிலும், ஆய்ஷா 10 ஓட்டங்களில் ஆட்டமிழக்க, அந்த அணி அதன் பின் ஓட்டங்கள் குவிக்க மிகவும் சிரமப்பட்டது. வெறும் 8 பந்துகள் இடைவெளியில் பாகிஸ்தான் 5 விக்கெட்டுகளை இழந்தது. இறுதியில் அந்த அணி 18 ஓவர் முடிவில் 99 ஓட்டங்களில் ஆட்டமிழந்தது. இந்தியா தரப்பில் ராணா, ராதா ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை இழந்தது. இதனையடுத்து 100 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இந்திய அணி தொடக்கம் முதலே அதிரடியாக விளையாடியது. செபாலி வர்மா 9 பந்துகளில் 2 பவுண்டரி, ஒரு சிக்சர் விளாசி 16 ஓட்டங்கள் சேர்த்தார். இதனையடுத்து மேக்னா 16 ஓட்டங்களில் வெளியேறினார். இருப்பினும் ஆரம்ப வீராங்கனை ஸ்மிருதி மந்தானா அதிரடியாக விளையாடி ஓட்டங்களை சேர்த்தார்.



31 பந்துகளில் அரைசதம் விளாசிய மந்தானா, 42 பந்துகளில் 63 ஓட்டங்கள் சேர்த்தார். இதில் 3 சிக்சர்களும், 8 பவுண்டரிகளும் அடங்கும். இதன்படி 11.4ஆவது ஓவரிலேயே, வெற்றி இலக்கை இந்திய அணி எட்டியது. இதன் மூலம் மைனஸ் 0.56 என இருந்த இந்திய அணியின் ஓட்ட வேகம் தற்போது 1.17 என்ற அளவில் உள்ளது. இதன் மூலம் குழு ஏ பிரிவில் இந்திய அணி முதலிடத்திற்கு சென்றது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஓகஸ்ட் மாதம் 2ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.